
# நெருங்கிவா நெஞ்சமே






இன்பா அலோசியஸ்

www.pustaka.co.in

# நெருங்கிவா நெஞ்சமே





இன்பா அலோசியஸ்

www.pustaka.co.in

http://www.pustaka.co.in

# நெருங்கிவா நெஞ்சமே...

Nerungivaa Nenjamey...

Author :

இன்பா அலோசியஸ்

Infaa Alocious

For more books

http://www.pustaka.co.in/home/author/infaa-alocious

Digital/Electronic Copyright © by Pustaka Digital Media Pvt. Ltd.

All other copyright © by Author.

All rights reserved. This book or any portion thereof may not be reproduced or used in any manner whatsoever without the express written permission of the publisher except for the use of brief quotations in a book review.

பொருளடக்கம்

பகுதி – 1

பகுதி – 2

பகுதி – 3

பகுதி – 4

பகுதி – 5

பகுதி – 6

[பகுதி – 7]
[பகுதி – 8]
[பகுதி – 9]
[பகுதி - 10]
[பகுதி – 11]
[பகுதி – 12]
[பகுதி – 13]

# நெருங்கிவா நெஞ்சமே...

# பகுதி – 1

தனிமை மிக அழகாய்....

என் உலகம் பட்டாம்பூச்சி சிறகாய்

வண்ணமயமாய் ஆனது....

நெருங்கிவா என் நெஞ்சமே.....

“க்கூ...., க்கூ...., க்கூ....”, ஏதோ ஒரு கிளையில் தன் முகவரியை மறைத்து, முகவுரையை அறிவித்துக் கொண்டிருந்தது குயில். அதன் இசையில் மயங்கிய நளன்..., தன் கையில் இருந்த ஜெர்மன் கேமராவின் வழியாக, குரல் வந்த திசைக்கு அதை ஸூம் செய்தான்.

அவன் உழைப்பிற்கு பலனிருக்க, குயில் தன் முகத்தை அவனுக்கு அறிமுகப்படுத்தியது. அந்த தருணத்தை தவிக்க விடாமல், கச்சிதமாக அதனை தன் கேமராவுக்குள் நிழற் படமாக பதிவு செய்தான்.

“குட்..., நைஸ் போஸ்...”, குயிலுக்கு பாராட்டுப் பத்திரம் வாசித்தவன், தான் நடக்கும் ஓசை வெளியே கேட்காத அளவுக்கு காலை மெதுவாக வைத்தவாறு அங்கிருந்து நகர்ந்து சென்றான்.

அந்த அடர்ந்த காட்டின் தனிமை அவனை கொஞ்சம் கூட பாதிக்கவில்லை. மாறாக, அவனை ஒரு உயிர்ப்போடு உலாவச் செய்தது. நடந்தவாறே தான் எடுத்த புகைப்படத்தை ஆராய்ந்தான். அவன் முகத்தில் திருப்தியான புன்னகை ஒன்று தவழ்ந்தது.

“நளா…, நீ நல்லாத்தாண்டா போட்டோ எடுக்குற…”, தன்னைத் தானே பாராட்டிக் கொண்டவன், ஓடையின் சலசலப்பில் கவனம் கலைந்தான்.

“அட.., மான் கூட்டம்….”, நின்ற இடத்திலேயே இருந்தவன், கேமராவின் கண் வழியாக ஓடையைப் பார்த்தான். கலை மான் கூட்டம் ஒன்று ஓடையில் நீர் அருந்த, அவற்றையும் நகல்களாக பதித்தவன், அங்கிருந்து நகரவே இல்லை.

சிறு சலசலப்பு கேட்டாலும்…, மான் கூட்டம் கலைந்துவிடும் என்பது அவனுக்குத் தெரியும். எனவே…, இன்னும் ஸூம் போட்டவன்…., மான் கூட்டம் முழுமையையும் கேமரா வழியாகவே துழாவினான்.அவற்றின் அழகை மெய் மறந்து ரசித்துக் கொண்டிருந்தான்.

கண்களால் துழாவியவாறே வந்தவன்…, ஒரு இடத்தை கடந்து சென்றவன்…, அங்கே மான் கூட்டம் ஏதோ ஒன்றை ஆராய முற்படுவதைப் பார்த்தவன், சரியாக அந்த இடத்துக்கு கேமராவைத் திருப்பினான். லென்ஸ் முழுமைக்கும் ஸூம் போட்டு, அது என்ன என கூர்த்து பார்த்தான்.

“ஓ மை காட்…”, அவன் வாய் சன்னமாக முணுமுணுக்க, கால்களோ வேகமாக அந்த இடத்துக்கு விரைந்தது.

அதற்குக் காரணம்…, அங்கே முகம் குப்பற விழுந்திருந்தது ஒரு மனித உடல் என்று அவன் மூளை உரைத்ததுதான் காரணம். அந்த இடத்தை நெருங்கிச் செல்லவே…, அது ஒரு பெண் என்பது அவனுக்கு புலப்பட்டது.

நடையை விரைவுபடுத்தியவன் அவளை நெருங்க, மான் கூட்டமோ பதறி, சிதறி ஓடியது. அதைக்

கண்டுகொள்ளாமல், கேமராவைத் தலை வழியாக மாட்டிக் கொண்டவன், அவள் அருகில் மண்டியிட்டான்.

“ஓ..., ஷிட்...”, அவள் இருந்த கோலத்தைப் பார்த்தவன், வேகமாக தன் சட்டையைக் கழட்டி அவள் உடலை மறைத்துவிட்டு, மெதுவாக அவளைத் திருப்பினான்.

அவளைத் திருப்பிய வேளை, அவளது முகம் வேதனையைப் பிரதிபலிக்க, அதை கவனிக்கும் நிலையில் அவன் இருக்கவில்லை.

“உயிர் இருக்கா...?”, பதட்டமானவன், அவள் நாடியை பரிசோதித்துவிட்டு, அவள் மூக்கின் கீழே விரலை வைத்து, அவள் சாதாரணமாக மூச்சு விடுவதை உணர்ந்த பிறகுதான்...., சற்று தெளிந்தான்.

‘இவ எப்படி இங்கே....? அதுவும் காட்டுக்குள்..., இவ்வளவு தூரம்...?’, புருவம் சுருக்கி யோசித்தவன், அப்பொழுதுதான் அந்த ஆற்றில் வெள்ளம் வழக்கத்துக்கு மாறாக அதிகம் ஓடுவதைப் பார்த்தான்.

‘ஓ..., ஆத்தில் அடிச்சுட்டு வந்துட்டா போல. சரி இவ ட்ரெஸ் எல்லாம்இப்படி கிழியிற அளவுக்கு ஆயிருக்குன்னா....? யாராவது இவளை....’, யோசனையை சட்டென அந்த இடத்தில் நிறுத்தியவன், வேகமாக அவள் முகத்தை ஆராய்ந்தான்.

அவள் முகத்தில் விழுந்திருந்த முடியை ஒதுக்கியவன், அவள் முகத்தைப் பார்த்தான். நிர்மலமான முகம், இயற்கையான அழகை சுமந்து ஒப்பனைகள் எதுவுமின்றி, சிப்பி விழிகள் மூடியிருக்க, மிதமான வேகத்தில் நெஞ்சு ஏறி இறங்கியது.

‘ஹப்பா...., நான் பயப்பட்ட மாதிரி எதுவும் இல்லை. முகம் குழந்தைத்தனமா தான் இருக்கு. எந்தவித அசம்பாவிதம் நடந்த சாத்தியக்கூறும் இல்லை...’, ஆசுவாசமாக மூச்சு விட்டான்.

ஒரு நிமிடம் தானை மீறி அவளை ரசித்தவன்..., அவளது புருவம் சற்று சுருங்கி வேதனையாக முகத்தை சுளிக்கவே, "எங்கேயாவது அடி பட்டிருக்கா....", அவன் பார்வை, அவள் முகத்தை விட்டு கீழிறங்க, அப்பொழுதுதான், அவன் போர்த்தியிருந்த சட்டைக்கு அடியில்..., ஒரு குச்சி அவள் உடம்பில் குத்தியிருப்பதைப் பார்த்தான்.

சற்று சட்டையை விலக்கிப் பார்க்க, சரியாக அவளது வயிற்றின் மேலாக அழுத்தமாக குத்திக் கிழித்தவாறு, சற்று ஆழமாகப் பதிந்திருந்தது அந்த குச்சி.

"இது வேறையா...?", சற்று அலுப்பாகவே சொல்லிக் கொண்டான்.

அதை உருவி எறியப் போனவன்..., "ம்ஹும்...., இப்போவே உருவினால் ப்ளட் வந்தால் அதை கட்டுப்படுத்த, இங்கே காட்டன் இல்லை. இவளை டென்ட்டுக்கே தூக்கிட்டு போய்டலாம்...', எண்ணியவன், சட்டையை ஒழுங்காக அவளுக்குப் போர்த்தியவன், அவள் கழுத்தின் அடியில் ஒரு கையும், தொடையின் அடியில் ஒரு கையும் கொடுத்து, அவளை கைகளில் ஏந்திக் கொண்டான்.

'ஹப்பா..., ஆள் பாக்கத்தான் ஒல்லியா இருக்கா. ஆனா செம கனம்...', தன் கேமரா பத்திரமாக இருப்பதை உறுதிபடுத்திக் கொண்டு, தன் டென்ட் இருந்த இடத்தை நோக்கிச் சென்றான்.

டென்ட் என்றால் அது ஒன்றும் கேம்ப் டென்ட் இல்லை. சின்ன குழந்தைகளுக்கு கொசு வலை வைப்பதுபோல், குடை போல் விரித்து வைத்துக் கொள்ளக் கூடிய சிறிய டென்ட். ஒரு ஆள் மட்டுமே உள்ளே இருக்க முடியும்.

அதையும் அப்பொழுது மடித்து, தன் பொருட்கள் அனைத்தையும் மரத்தில் இறுக கட்டி வைத்திருந்தான். 'எவ்வளவு வேலைதான் செய்யிறது ஆண்டவா...?', புலம்பியவன், கைகளில் இருந்த அவளை கீழே சருகில் படுக்க வைத்தவன், டென்ட்டை செட் செய்துவிட்டு, சற்று சிரமப்பட்டு அவளோடு அதற்குள் நுழைந்தான்.

தன் பொருட்களில் முதலுதவிப் பெட்டியை எடுத்தவன், அவள் அருகில் மண்டியிட்டான். அவள் மேல் இருந்த சட்டையை விலக்க கை நீட்ட, சற்று நிதானித்து ஆழ்ந்து மூச்சுவிட்டு தன்னை நிலைப்படுத்திக் கொண்டான்.

ஆளற்ற தனிமைக் காடு, அவனது இரண்டு மாத தனிமை வாழ்க்கை, அருகில் அலங்கோல ஆடையுடன் ஒரு பெண், அவன் சலனப்படாமல் இருந்தால்தான் ஆச்சரியம். ‘அவள் சுய நினைவின்றி, அனாதரவாக இருக்கிறாள். அவளுக்கு காவலனாக மட்டுமே நீ இருக்க வேண்டும், காமுகனாக அல்ல’.

தனக்குத் தானே சொல்லிக் கொண்டவன், ‘ஏண்டா நளா..., நீ இவ்வளவு பலவீனமானவனா...? அப்போ சந்தர்ப்பம் கிடைக்கும் வரைதான் நீ நல்லவனா இருப்பியா...? உண்மையாகவே நீ நல்லவன் இல்லையா...?’, தன்னைத் தானே குட்டிக் கொண்டவன்,

‘இப்போ அவ பெண் இல்லை, பையன்னு நினைச்சுக்கோ..., வேற நினைப்பே உனக்கு வரக் கூடாது....’, அழுத்தமாக தனக்குள் பதிய வைத்துக் கொண்டவன், அதன் பிறகு தைரியமாக அவள் மேல் இருந்த துணியை விலக்கினான்.

அவன் கட்டுப்பாட்டையும் மீறி, அவன் கண்கள் அவளை ரசிக்கத் துடிக்க, ‘பார்த்தால் தப்பில்லை...., அதை அடையத் துடித்தால் தான் தப்பு...’, ஒரு வழியாக தன்னை சமாதானப்படுத்தியவன், அவள் மேனியில் பதிந்திருந்த குச்சியைப் பரிசோதிக்க..., ஒரு விரல் நீளத்துக்கு அவள் வயிற்றில் கிழித்து , சற்று ஆழமாகப் பதிந்து இருந்தது.

இதை இப்படியே விட முடியாது என அவன் புத்தி இடித்துரைக்க, காயமும் பெரிதாக இருக்கவே, எதற்கும் இருக்கட்டும் என்று, வெளியே சென்று, வெந்நீரை கொதிக்க வைத்தவன், உள்ளே வந்தான்.

‘ஹையோ..., எவ்வளவு வேலைதான் செய்யிறது. தலை சுத்துது. நான் எனக்காக கூட இவ்வளவு வேலை செய்தது கிடையாது...’, தலையை குலுக்கிக் கொண்டான்.

இடது கையில் கொஞ்சம் பஞ்சை எடுத்தவன், வலக் கையால்..., அந்த குச்சியை வெடுக்கென பிடித்து இழுத்தான்.

“ம்ம்ம்ம்..., ஆ.....”, சன்னமான வலி முனகல் அவளிடமிருந்து வெளிப்பட, தலையோ இடம் வலமாக அசைந்தது.

‘ச்சே..., ரொம்ப வலிக்குது போல....’, மயக்க நிலையிலும் அவள் முனகவே, அவளுக்காக பரிதாபப் பட்டவன், சற்று ரத்தம் கொப்பளிப்பது நிற்கும் வரை காயத்தை அழுத்தி பிடித்திருந்தவன், இரண்டு நிமிடம் கழித்து பஞ்சை லேசாக விலக்க, காயமோ ‘ஆ’வென வாயைப் பிளந்து, சதை கிழிந்து பார்க்கவே சற்று விகாரமாக இருந்தது.

‘ம்ச்..., தையல் போடாமல் இது சரியாகாதே...’, வேறு வழி இல்லாமல் பஞ்சை காயத்தில் வைத்து அழுத்தியவன்,முதலுதவிப் பெட்டியை மேலும் நோண்டினான்.

அவன் தனது முதலுதவி பெட்டியில் , காட்டில் இருக்கும்போது தேவையிருக்கலாம் என்று சிறிய அளவில் உடலில் தையல் போடத் தேவையான ஊசி , நூல் , கத்தரி போன்றவற்றை வைத்திருப்பான்.இதற்கு ஓரளவு கற்றும் வைத்திருந்தான்.இப்போது அவைகளை சுட வைத்த நீரில் போட்டு ஸ்டெரிலைஸ் செய்தான்.

பொதுவாகவே நளன் கொஞ்சம் சோம்பேறி..., அவன் வேலையை அவனே செய்துகொள்ளவே ஆயிரம் முறை யோசிப்பான். அப்படியிருக்கையில், அவளுக்கு பணிவிடை செய்ய அவனுக்கு சற்று எரிச்சலாகத்தான் இருந்தது.

ஆனால் அப்பொழுது வேறு வழி இல்லாமல்..., அவள் மேல் இருந்த பஞ்சின் மேல் ரத்தக் கசிவு தெரியவே..., ‘இதுக்கு மேலே தாமதிக்க முடியாது....’, ஊசி நூலோடு அவளை நெருங்கினான்.

“ஏய்..., கொஞ்சம் வலிக்கும், பொறுத்துக்கோ...”, அவள் என்னவோ விழித்திருப்பதாகக் கருதியவன், அவளிடம்

சொல்லிக் கொண்டு, டெட்டால், வெந்நீர் போட்டு கிளீன் செய்தவன், தையல் போடத் துவங்கினான்.

அவளது முகமோ..., அவன் குத்தும் ஒவ்வொரு ஊசிக்கும், முகத்தை, புருவத்தை சுளித்தவாறே இருந்தாள். மொத்தம் ஒன்பது தையல் போட்டு முடித்தவன், இறுதியாக நன்றாக துடைத்துவிட்டு, பஞ்சை வைத்து, பிளாஸ்டர் போட்டுவிட்டான்.

“ஹப்பா..., முடிஞ்சுது...”, அந்த மழைக் காட்டில் கூட, அவன் செய்த வேலையால், அவன் முகம் முழுவதும் வியர்வையால் குளித்திருந்தது.

# பகுதி – 2

சின்ன முகச் சிணுங்கலோடு கண்விழிக்கத் துடிக்கும் அவள் அருகில் நெருங்கிய நளன், “ஏய்..., கேர்ள்...”, தன் அழைப்பு தனக்கே வித்தியாசமாகத் தோன்றவே, “ஏய் பொண்ணே..., கண்ணை முழிச்சு பார்..”, அவள் கன்னத்தில் தட்டினான்.

அவன் அழைப்பும், கன்னத்தில் தட்டுவதும் சேர்ந்துகொள்ள, மிகவும் கடினப்பட்டு இமைகளைத் திறந்தாள். கண்ணின் கருமணிகள் சுழல, தன்னைச் சுற்றி பார்வையைச் சுழற்றியவளுக்கு எதுவும் புரியாமல் போகவே, கண்களை தன்னை அழைத்தவனை நோக்கித் திருப்பினாள்.

தன் பார்வைக்கு சிக்கியவனை அதிர்ந்துபோய் பார்த்தவள், படுக்கையில் இருந்து வெடுக்கென எழுந்து அமர முயன்றாள். ஆனால் உடல் ஒத்துழைக்க மறுக்க, கண்கள் மருண்டு விழிக்க, கண்களில் அப்பட்டமான அதிர்ச்சியை வெளிப்படுத்தியவள், கத்த முயல, அதற்கு குரலும் ஒத்துழைக்கவில்லை.

“நா..., நா..., நீ...., எங்கே...., யார்....?”, வார்த்தைகளை கோர்வையாக கோர்க்க முடியாமல் அவள் திணறவே,

“ஈஸி…, ஈஸி…., இப்போ எதுக்கு இவ்வளவு பதட்டம்…? நீ இப்போ சேஃபா தான் இருக்க. போதுமா…?”, அவள் பதட்டத்தை தணிக்க முயன்றான்.

ஆனால் அவள் முகத்தில் அதிர்ச்சி குறையாமல்…., கையை அசைத்து, தன்னை உணர முயன்றாள். கைகள் தரையில் இருந்து எழும்ப மறுக்க, கண்களில் கண்ணீர் வழிந்தது. இருக்கும் இடமும் அவ்வளவு சரியானதாக அவளுக்குத் தோன்றவில்லை.

அதைவிட, தன் அருகில் இருக்கும் அவனது தோற்றம்…, அடி வயிற்றில் பயப்பந்தை சுழலவிட, அவன் பேசிய அந்த தமிழ் மட்டுமே சற்று ஆறுதல் அளித்தது. கண்ணீரோ நிற்காமல் வழிந்தது.

அவள் கண்களில் கண்ணீரையும் பயத்தையும் பார்த்தவன்…, “ஏய்…, இப்போ உன்னை என்ன பண்ணிட்டேன்னு அழற, என்னைப் பார்த்தால் உனக்கு பொறுக்கி மாதிரி தெரியுதா? அடச்சீ முதல்ல அழுகையை நிப்பாட்டு. இல்ல…, டெண்டில் இருந்து தூக்கி வெளியே போட்டுடப் போறேன்…, மூடுடி…”, அவனது கத்தலும், கையை ஓங்கிய தோற்றமும் அவள் அழுகையை அடக்குவதற்குப் பதிலாக, இன்னும் அதிகரித்தது.

“ஹையோ…, அழுதே சாவடிக்கிறாளே….”, தலையிலேயே கை வைத்துக் கொண்டான்.

அவன் இதுவரை அறிந்த பெண்கள் எல்லாம்…, அவன் குரல் உயர்த்தினாலே விலகிச் சென்றுவிடுவார்கள். அப்படி இருக்கையில், இந்த புதியவளின் அழுகை அவனை விழி பிதுங்க வைத்தது.

அவளோ…, இன்னும் ஓவென அழவே…, “இப்போ நீ வாயை மூடலை…, மேலே விழுந்து ரேப் பண்ணிடுவேன்….”, அவளை ஆவேசமாக அவன் நெருங்கிய விதமே அவன் சொன்னதைச் செய்துவிடுவானோ என்று தோன்ற, இருக்கும் இடத்தை விட்டு நகரக் கூட முடியாத தன்

நிலையை எண்ணி இன்னும் அதிகமாக வெடித்து அழுதாள்.

ஆனாலும் அவனுக்கு பயந்து அழுகையை அடக்க முயன்றாலும், அவளால் அது முடியாமல், உடலும், மனதும் அசதியுற, மீண்டும் மயக்கத்துக்கே சென்றாள்.

அவள் மீண்டும் மயங்கிவிடவே, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான். “சரியான மயக்கத்துக்குப் பொறந்தவளா இருக்கா. இவளை..”, அவனால் பல்லைக் கடிக்கத்தான் முடிந்தது.

அவனுக்குத் தெரியவில்லை..., அனாதரவாக, தான் எங்கே இருக்கிறோம்...? என்ன செய்கிறோம் என்றே தெரியாத ஒரு பெண்ணிடம், அதுவும், தனக்கு என்ன நேர்ந்தது என்றே தெரியாமல், ஒரு ஆறுதலான வார்த்தைக்கும், நம்பிக்கையான பேச்சுக்கும் ஏங்கும் அவளிடம், தன் கோபத்தைக் காட்டினால் அவளும் வேறு என்னதான் செய்வாள்?

தனக்கு நிம்மதியை அளிக்கும் என்று அவள் எண்ணும் மயக்கத்துக்கே சென்றுவிட்டாள். அவள் இருப்பதால்..., டென்ட்டை விட்டே வெளியே செல்ல முடியாமல், அவள் அருகிலேயே அடைகாக்க வேண்டி வந்த எரிச்சல் அவனை பாடாய் படுத்தியது.

தன் வாழ்நாளில் இதுவரை அவன் எதற்காகவும் யாருக்காகவும் தன் நேரத்தை ஒதுக்கியதும் இல்லை, தன்னை மாற்றிக் கொண்டதும் இல்லை. தன் அடிப்படை வேலைகளான..., ஷேவ் செய்வது..., குளிப்பது, உடை உடுத்துவது, ஷூ போடுவது இவற்றுக்கே அவன் அடுத்தவர் உதவியை நாடும் அளவுக்குஒரு சோம்பேறி..., அப்படியிருக்கையில்..., யாரென்றே தெரியாத ஒருத்தியின் அருகில், அவளுக்கு காவலாக இருக்கச் சொன்னால் என்னதான் செய்வான்...?

நளன் சக்கரவர்த்தி..., சக்கரவர்த்தி குரூப் ஆப் கம்பெனிஸின் ஒரே வாரிசு. அவனது கொள்ளுப்பாட்டனார்

சக்கரவர்த்தி சிறிய அளவில் ஏற்படுத்திய கம்பெனியை, அவனது தாத்தா சிம்மன் சக்கரவர்த்தி சற்று விரிவுபடுத்த, நளனின் தந்தை வடிவேல் சக்கரவர்த்தி பெரிதாக வளர்த்துவிட்டார்.

சிம்மன் சக்கரவர்த்தி தந்தையின் தொழிலை நொடித்துப் போகாமல் சற்று பெரிய அளவில் பார்த்துக் கொண்டாலும்...., எப்பொழுது வடிவேல் தொழிலை கையில் எடுத்தாரோ..., அப்பொழுதே ஒதுங்கிக் கொண்டார். அத்தோடு..., அவருக்கு காட்டுக்குள் வேட்டையாடச் செல்வது அவ்வளவு பிடிக்கும்.

எனவே மாதம் ஒரு முறை, தன் வேட்டைத் துப்பாக்கியோடு காட்டுக்குக் கிளம்பிவிடுவார். வடிவேல் பணத்தின் பின்னால் ஓட, அவருக்கு திருமணம் செய்து வைத்தால் சரியாகி விடுவார் என எண்ணிய சிம்மன், காவேரியை வடிவேலுக்கு திருமணம் செய்து வைத்தார்.

காவேரியோ கணவனே கண்கண்ட தெய்வம் எனக் கருதி, அவருக்கு இசைந்து, அவர் குணமறிந்து, வாயில்லா பூச்சியாக வாழ்ந்தார். நளன் பிறந்த அந்த நொடியே தன் கடமை முடிந்தது என உலகை விட்டு காவேரி சென்றுவிட, நளனை கவனிக்கும் பொறுப்பு சிம்மன் தலையில் விழுந்தது.

அவனுக்கு விவரம் தெரிந்த நாள் துவங்கி, அவனையும் தன்னோடு காட்டுக்கு அழைத்துச் சென்றார். அவனோ தாத்தாவைபோல் வேட்டைக் காரனாக இல்லாமல், தாயின் குணத்தைக் கொண்டு மென்மையானவனாக இருந்தான்.

அதோடு புகைப்படம் எடுக்கும் விருப்பம் அப்பொழுதே வெளிப்பட, ஐந்து வயது சிறுவனுக்கு கேமரா வாங்கிக் கொடுத்த பெருமை சிம்மனையே சாரும்.

அவனுக்கு ஆறு வயதான பொழுது எதிர்பாராத விதமாக வேட்டைக்குப் போன இடத்தில் விலங்கால் அவர் தாக்கப்பட, படுக்கையில் விழுந்த அவர், தன் பேரனை

பார்த்துக் கொள்ள வேண்டி, மகனை மறுமணம் செய்துகொள்ளத் தூண்டினார்.

தந்தையின் பேச்சும், இளமையின் தேவையும் வடிவேலை உந்த, பைரவியை இரண்டாம் தாரமாக மணம் முடித்தார். பைரவியோ..., நளன்மேல் பாசத்தைப் பொழியவும் இல்லை, வெறுப்பு காட்டவும் இல்லை.

அந்த வீட்டில் படுக்கையில் இருந்த சிம்மன் எப்படியோ..., அப்படித்தான் நளனும்.... பைரவியைப் பொறுத்தவரை,அவனும்வீட்டில் இருக்கும் மற்றொரு ஜீவன். பைரவி வீட்டுக்கு வந்த ஒரே வாரத்தில் அவள் குணத்தை அறிந்த சிம்மன், தன் பேரனை, தனக்கு நம்பிக்கையான வேலையாட்களின் வசம் ஒப்படைத்தார்.

நளனுக்கு குழந்தையில் இருந்தே இருந்த ஒரு கெட்ட பழக்கம், அவனுக்கு குளிக்கப் பிடிக்காது. பெற்ற தாயாக இருந்தால் எப்படியாவது அவனை சமாளித்து குளிக்க வைத்திருப்பார். அவனோ வேலையாட்களின் கையில் வளர்ந்ததால்...., அவனது அழுகுரல் சிம்மனை சிங்கமாகவே மாற்றிவிடும் என்பதால், நளனை அவனது போக்கிலேயே வளர விட்டார்கள்.

சுடு தண்ணீரில் முக்கிய டவலால் அவனது உடல் துடைக்கப்படும், அதுதான் பதிமூன்று வயதுவரை அவனது குளியல். மாதம் ஒரு நாள், பட்டம்மா பாட்டியின் கெஞ்சலுக்கு இசைந்து தலைக்கு குளிப்பான் அவ்வளவே.

படிப்பில் படு சுட்டியாக இருந்தான். விளையாட்டு, பாட்டு, நடனம், பேச்சுப்போட்டி என அனைத்திலும் கலந்துகொண்டு பரிசுகளை வென்றுவிடுவான். அவனுக்கு மேடை பயம் என்பதும், மனித பயம் என்பதும் அறவே கிடையாது.

எனவே அனைத்திலும் முதன்மையாகத் திகழ்ந்தான். உடை மாற்றுவது, ஷூ மாட்டுவது, சாப்பாடு ஊட்டுவது வரை அவனுக்கு பட்டம்மா பாட்டியும், அவரது கணவன் ராமுவுமே செய்தார்கள். பள்ளிப் பாடங்களை எழுதக் கூட அவனுக்கு

சோம்பேறித்தனம், அதை எழுதவென்றே பட்டம்மா பாட்டியின் பேரனையும் இவன் வகுப்பிலே சேர்த்து படிக்க வைத்தார்கள்.

சுருக்கமாகச் சொன்னால்,நளன் ஒருமுழு சோம்பேறி. பட்டம்மா பாட்டியின் பேரன் ரகுவிற்கு படிப்பு சுத்தமாக மண்டையில் ஏறாது. பத்தாம் வகுப்புவரை நளனோடு படித்தவன், பத்தாம் வகுப்பில் தோற்றுவிட, அதன் பிறகுதான், நளன் தன் வகுப்பு பாடங்களை தானே எழுத பழகினான்.

அதோடு அவனுக்கு ஒரே ஆதரவாக இருந்த சிம்மனும் காலமாக, நளன் ஒருவித விட்டேத்தியாகவே இருந்தான். ஆனால்..., வடிவேல் எதில் அவனை கவனிக்கவில்லை என்றாலும், படிப்பு விஷயத்தில் சற்று அதிக கண்டிப்புடனே இருந்தார்.

பைரவி மூலம் அவருக்கு வாரிசு உருவாகாமல் போகவே, தன் சாம்ராஜ்யம் முழுமையும் நளன்தான் ஆளவேண்டும் என்பதால்...., அவன் என்ன செய்தாலும், எவ்வளவு சோம்பேறியாக இருந்தாலும், படிப்பை மட்டும் கோட்டைவிட அனுமதிக்கவில்லை.

எனவே படிப்பில் கவனமாகவே இருந்தான்.கல்லூரிக்குச் சென்ற பிறகோ..., தாடையை மழிக்கக் கூட, அவனுக்கு ரகு வேண்டும். ரகுவின் தொல்லை பொறுக்க முடியாமல், வாரம் ஒரு நாள் சுடு தண்ணீரில் தலை குளிப்பான்.

கல்லூரி முடித்து, தொழில்முறை படிப்பை வெளிநாட்டில் வெற்றிகரமாக முடித்தவன், தந்தையின் தொழிலில் கால் பதித்தான். முழு மூச்சாக, தீவிரமாக வேலை செய்யும் நளன், ஒன்பது மாதங்கள் கம்பெனி, அதன் வளர்ச்சி, கோடிக்கணக்கில் டேர்ன் ஓவர்..., இப்படியாக மூழ்கி இருக்கும் அவன்,

அடுத்த மூன்று மாதங்கள், கேமராவும் கையுமாக தனக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்களோடு, காட்டுக்கு கிளம்பிவிடுவான். தன் செல்போனை கூட உடன்

வைத்துகொள்ள மாட்டான். அந்த மூன்று மாதங்கள் மட்டுமே அவன் தனக்காகவே வாழ்வதாகக் கருதும் நாட்கள்.

யாரின் தொல்லையும் இல்லாமல், தன் நிழல்போல் இருக்கும் ரகுவின் துணை கூட இல்லாமல், தனித்து இருப்பது இங்கேதான். இப்படிப்பட்ட நளனை, ஒரு பெண்ணை கவனிக்கச் சொன்னால் அவனுக்கு எரிச்சல் வராமல் என்ன செய்யும்?

சற்று நேரம் தலையில் கைவைத்து அமர்ந்திருந்தவன், அதன் பிறகுதான், ‘ஒரு வேளை இவளுக்கு பசி மயக்கமாக இருக்குமோ..., இருக்கும் இடத்தை விட்டு நகரவே முடியாமல் இருந்தாளே...’, என யோசித்தவன், தன் பையில் இருந்து எனர்ஜி ட்ரிங்கை எடுத்தவன், அவள் அருகில் மண்டியிட்டான்.

டின்னை திறந்து அவள் வாயின் அருகில் சரிக்க, அதுவோ அவள் வாயில் வழியாமல் அவள் கழுத்தில் சிந்தியது.

‘இது சரி வராது....’, அவள் தலைப் பக்கம் சென்றவன், அவள் அருகில் அமர்ந்து, அவள் தலையை மடியில் தாங்கியவன், “ஏய்..., இதை குடி...”, அவள் வாயில் சரியாக டின்னை சாய்த்தான்.

முதலில் இரண்டு மடக்கு குடிக்க வைக்கத்தான் அவன் கஷ்டப்படவேண்டி இருந்தது. அடுத்த நிமிடம் அந்த கேன் முழுமையையும் நொடியில் குடித்து முடித்தாள். கண்களையும் அகல விரித்தவள், தான் அவன் மடியில், அவன் பிடியில் இருப்பதை உணர்ந்து பதறி விலகினாள்.

குடித்திருந்த எனர்ஜி டிரிங் அவளுக்கு உதவி செய்தது. அவள் செய்கையில் கோபம் கொண்டவன், “ஏய்..., இப்போ எதுக்கு ஓவரா சீன் போடுற? இவ்வளவு நேரம் என் மடியில் தானே இருந்த, பிறகு என்ன...?”, கடுப்பானான்.

அவனைப் பார்த்து விழித்தவள், “நீ..., நீங்க யார்...?”, அவனை ஒருமையில் துவங்கி, அவன் முறைக்கவே பன்மைக்கு மாறினாள்.

“நான் யாரா வேண்ணா இருக்கட்டும். முதல்ல உன் பெயரைச் சொல்லு, ஏய்., ஏய்...  ன்னு கூப்பிட ஒரு மாதிரி இருக்கு...”, சிடுசிடுத்தான்.

“நீங்க என்ன ஆதிவாசியா...?இந்த நரமாமிசம் சாப்பிடுற ஆளுங்களா? வேற எல்லோரும் எங்கே இருக்காங்க...?”, பீதியாகவே கேட்டாள்.

“என்ன லந்தா...? உன்னைப் போய் ஆத்தில் இருந்து தூக்கிட்டு வந்து காப்பாத்தினேன் பாரு..., எனக்கு இது தேவைதான். என்னைப் பாத்தா ஆதிவாசி மாதிரியா இருக்கு உனக்கு...? இதில் நரமாமிசம் வேற திங்கிறேனான்னு கேள்வி வேற.

“இப்படியே பேசிட்டு இருந்தேன்னு வை..., நிஜமாவே உன்னை பொங்கித் திங்கத்தான் போறேன். அடச்சீ..., முதல்ல உன் பெயரைச் சொல்லு...”, எரிந்து விழுந்தான்.

எச்சில் விழுங்கி தன்னை நிதானப்படுத்தியவள், “தமயந்தி....”, மெல்லியதாக உரைத்தாள். அவள் பார்வையோ அவனை ஆராய்ந்துகொண்டே இருந்தது.

“லொள்ளு...” அவன் ஒரு மாதிரி குரலில் வினவ, திருதிருத்தாள்.

அவள் விழித்ததைப் பார்த்தே, அவள் கேலி செய்யவில்லை என்பதை உணர்ந்தவன், “நிஜமாவே உன் பெயர் தமயந்தி தானா...?”, அவள் தலை ஆமோதிப்பாக ஆடவே, “அதெல்லாம் இருக்கட்டும்..., எதை வைத்து என்னை ஆதிவாசியான்னு கேட்ட...?”, அவளையே கூர்மையாகப் பார்த்தான்.

முகம் முழுக்க தாடியும்..., அழுக்கடைந்த ஆடையும், தலை முழுவதும் நீள முடியுடனும் தோற்றமளிக்கும் அவனை, வேறு எப்படி நினைக்கவென்று அவளுக்குத் தெரியவில்லை. அதே நேரம் அவனது பேச்சும், நடத்தையும், அவன் தனக்கு குடிக்கக் கொடுத்த ஜூஸும் நினைவிலாட, தன் உதட்டை கடித்துக் கொண்டாள்.

அவள் முகத்தில் வந்து போகும் உணர்வுக் குவியலிலே கவனமாக இருந்த நளன், தன்னை மறந்து அவளை ரசித்துக் கொண்டிருந்தான்.

## பகுதி – 3

பின்னர் நினைவு வந்தவளாக, தான் இருக்கும் இடத்தைச் சுற்றி பார்வையைச் சுழற்றியவள், தான் இருப்பது மிகவும் சிறிய டென்ட் என்பதை நொடியில் கண்டுகொண்டாள். தான் இருக்கும் இடத்தை விட்டு சற்று நகர்ந்தாலும் டென்ட் இடிக்கும் என்பதும் புரிந்தது.

திடுமென எதையோ நினைத்தவள், வேகமாகத் தன்னைக் குனிந்து பார்க்க, முழங்கால் வரை நீண்டிருந்த ஒரு ஜெர்க்கினுக்குள் தான் இருப்பதை உணர்ந்து திடுக்கிட்டாள். வேகமாக நீண்டிருந்த காலை மடக்கியவள், தன் தேகம் முழுமையையும் ஜெர்க்கினுக்குள் அடைக்க முயன்றாள்.

அப்பொழுதுதான் தன் வயிற்று பக்கம் வலியை உணர்ந்தவள், “அம்மா….”, இடது கையை வலி உணர்ந்த பக்கம் வைத்து அலுத்தியவள், சன்னமாக முனகினாள். அதே நேரம்…, எதிரில் இருந்தவனை பயப் பார்வை பார்த்தாள்.

அவ்வளவு நேரம் அவளையே கவனித்துக் கொண்டிருந்தவன், அவள் கண்கள் பயமாக தன்னை நோக்குவதை உணர்ந்து, “இங்கேபார்…., ஒண்ணை மட்டும் நான் தெளிவா சொல்லிடுறேன். எனக்கு உன்மேல் எந்தவிதமான தப்பான்ன எண்ணமும் இந்த நிமிஷம் வரைக்கும் இல்லை, இனிமேலும் வராமல் இருப்பது உன் கையில்தான் இருக்கு.

“என்னை என்னமோ வில்லன் மாதிரியும்…, நீ என்னமோ பெரிய ஹீரோயின் மாதிரியும் சீனைப் போட்ட…., நானும் உன் நினைப்புக்குத் தக்கபடி மாற வேண்டி இருக்கும். எப்படி வசதி…”, தன் கூர்மையான விழிகளுக்கு மேலே

இருந்த ஒற்றைப் புருவத்தைத் தூக்கி அவன் வினவ, வேகமாக தன் முக பாவத்தை மாற்றிக் கொண்டாள்.

அவள் செய்கையில் வாய்விட்டுச் சிரிக்கவேண்டும்போல் இருந்த தன் உணர்வை மறைத்தவன், “குட்..., ஐ திங்..., யூ கேச் மை பாயிண்ட்...”, அவளை மெச்சிக் கொண்டான்.

“சரி..., நீ எப்படி இங்கே வந்த...? அதுவும் அப்படி ஒரு கோலத்தில்...”, அவன் கேட்ட தோரணையில் அவள் முகம் லேசாக சிவந்து போனது. அது கோபத்தாலா..., இல்லை வெட்கத்தாலா..., இல்லை சங்கடத்தாலா..., இல்லையென்றால் இவை மூன்றாலுமா என்பதை பிரித்தறிய முடியவில்லை.

தலை குனிந்து அவள் இருக்க, “கேக்குறது காதில் விழல...”, அவனது அரட்டலில் வெடுக்கென நிமிர்ந்தாள்.

“நானும் என் பிரண்ட்ஸ்சும் ஆத்தில் குளிச்சுட்டு இருந்தோம். அப்போ போட்டி போட்டு நீச்சல் அடிச்சோமா..., நான் நடு ஆறு வரை வந்துட்டேன். திடீர்ன்னு ஆத்தில் வெள்ளம் வரவே என்னால் கரைக்குப் போக முடியலை”, திக்கித் திணறி, தயக்கமாகச் சொல்லி முடித்தாள்.

“ஓ..., நீச்சல் நல்ல விஷயம் தான். சரி..., ஆத்தில் குளிச்சியே, குளிரெடுக்கலை..?.”, அவன் தலையை ஆட்டி வினவ, அவனை ‘லூசா நீ...’, என்பதுபோல் ஒரு பார்வை பார்த்தாள்.

“நீ என்ன வேண்ணா நினைச்சுக்கோ எனக்கு கவலையே இல்லை...”, தோளைக் குலுக்கியவன், அங்கே இருந்த தன் கேமராவைத் தோளில் மாட்டிக் கொண்டான்.அவனுக்கு நிறைய சளி பிடித்திருப்பதை அவனது குரலும், இடையிடையே அவன் தும்மிய தும்மலும் அவளுக்கு உணர்த்தியது.

“ஓகே..., இப்போதான் நீ கண் முழிச்சுட்டியே..., நான் வெளியே கிளம்புறேன்”, ஒரு தும்மலோடு உரைத்தவன், டெண்ட்டை விட்டு வெளியேற முயன்றான்.

அந்த டெண்ட்டுக்குள் இருந்து வெளியே செல்ல, கொஞ்சம் தவழ்ந்துதான் செல்ல வேண்டும், எனவே அவளைத் தாண்டி அவன் செல்ல முயலவே, “நான் வீட்டுக்குப் போகணும்...”, வேகமாக அவனைத் தடுத்தாள்.

அவளைத் திரும்பிப் பார்த்தவன், “சரி போ...”, சாதாரணமாகச் சொல்லிவிட்டு, டெண்ட்டில் இருந்து வெளியேறினான்.

“ஹாங்...”, தன் மலைப்பை அவள் வார்த்தையில் வெளியிட, அவனோ கண்டுகொள்ளவே இல்லை. எங்கே தன்னை விட்டுவிட்டு சென்றுவிடுவானோ எனப் பயந்தவள், தானும் அவனைப்போல் தவழ்ந்து வெளியேறினாள்.

தன் ஒற்றை உடை அவளைத் தயங்க வைத்தாலும், அவன் பேச்சிலும், நடத்தையிலும் இருந்த நம்பிக்கை அவள் தயக்கத்தை தகர்க்க வைத்தது. அவன் பின்னால் வெளியேறியவள், எழுந்து நிற்க முயலவே..., தலை சுற்றி எங்கோ பறப்பதுபோல் இருக்கவே, விழப் போனாள்.

“நீ எங்கே என் பின்னாடியே வர்ற...?”, எரிச்சலாகக் கத்தியவன், அவள் விழப் போவதைப் பார்த்து, ஒரே எட்டில் ஓடிவந்து தாங்கிக் கொண்டான். அவன் தோளிலேயே முகம் சாய்த்தவள், விழவிருந்த பயத்தில், அவன் தோளை கெட்டியாக பிடித்துக் கொண்டாள்.

“என்ன வீட்டுக்கு கிளம்பிட்டியா...? நல்ல விஷயம்தான். அதில் பாரு..., உன்னால் நிக்கவே முடியலை, இதில் ஊருக்குள் போக முன்னூறு கிலோமீட்டர் எப்படி நடந்து போவ..., அதுதான் எனக்கு யோசனையா இருக்கு...”, மின்னாமல் அவள் தலையில் இடியை இறக்கினான்.

“எ...ன்ன...., என்ன சொன்னீங்க...? முன்...முன்னூறு கிலோமீட்டரா...?”, கண்கள் இருட்டிக் கொண்டு வரும்போல் இருந்தது அவளுக்கு.

அவள் கால்கள் தள்ளாடவே..., “மறுபடியும் மயக்கம் போட்டு விழுந்த..., அங்கனையே கெடன்னு தூக்கி போட்டுட்டு போயிட்டே இருப்பேன். உன்னை வச்சுகிட்டு நான் அடை

காத்துட்டே இருக்குறதா...? என் வேலையைப் பாக்குறதா,வேணாமா....?", ஆனாலும் அவளை தன்னைவிட்டு விலக்காமல், தன் கையணைப்புக்குள்ளேயே வைத்துக் கொண்டான்.

தன்னைப் பற்றிய எண்ணமோ..., வயது பெண்ணை காணவில்லை என்றால், அவள் வீட்டில் எவ்வளவு வருத்தப்படுவார்கள் என்ற எண்ணம் சிறிதும் இல்லாமல், அவள் யார்...? எங்கிருந்து வருகிறாள்...? அவளை பாதுகாப்பாக அவள் வீட்டில் சேர்க்கவேண்டும் என்ற பொறுப்பு இல்லாமல், விடேற்றியாக இருக்கும் அவனை எண்ணி மனதுக்குள் துவண்டு போனாள்.

கெட்டதிலும் ஒரு நல்ல விஷயமாக தான் ஒரு கெட்டவன் கையில் சிக்கவில்லை என்பது மட்டுமே அவளுக்கு ஆறுதல் அளித்தது. குடித்த எனர்ஜி ட்ரின்க் வேறு கரைந்து விட்டிருக்க, அவளுக்கு பசி வயிற்றைக் கிள்ளியது.

அவளுக்கு பசி என்ற ஒரு உணர்வு இருக்கும் என்ற எண்ணமே இல்லாதவன் போன்று நடந்துகொண்டான் நளன். அவனுக்கு மற்றவரைப் பற்றி சிந்திக்கும் சந்தர்ப்பம் இதுவரை வாய்த்தது இல்லை என்பதை அவள் அறிந்திருக்க வாய்ப்பு இல்லையே.

தமயந்தியால் நிற்க முடியாமல் கால்கள் தள்ளாடவே, அவளை தரையில் அமர வைத்தவன், "உனக்கு ஏதாவது வியாதி இருக்கா என்ன...? உடம்பில் கொஞ்சம் கூட தெம்பே இல்லாமல், எப்போ பாத்தாலும் மயக்கம் போட்டுட்டே இருக்க...", நக்கலாகக் கேட்டான்.

"உடம்பில் தெம்பு இருக்கணும்ன்னா முதல்ல நல்லா சாப்பிட்டு இருக்கணும். நான் அன்னைக்கு குளிக்க போகும் வேகத்தில் சாப்பிடக் கூட இல்லை, இதில் இங்கே வந்து எத்தனை நாள் ஆகுதோ...? மயக்கம் தெளியிறவங்களுக்கு பசிக்கும் என்ற பேசிக் அறிவு கூட இல்லை, இதில் நக்கல் வேற...", கண்களில் கண்ணீர் முட்ட, வீட்டுக்குப் போக முடியாத வருத்தம், காட்டில் இருக்கும் பயம், பசிக்கிறது என வாய்விட்டு கேட்க வேண்டிய தன் இயலாமை, அவனது

விட்டேற்றித்தனம் எல்லாம் சேர, படபடவென பொரிந்துவிட்டாள்.

அவள் பேச்சைக் கேட்ட பிறகுதான் தன் தவறு புரிய, ஒரு நிமிடம் செயலற்று நின்றுவிட்டான். "ஓ..., சாரி..., அந்த எனர்ஜி ட்ரின்க் குடிச்சதால் இப்போ  உனக்கு பசி இருக்காதுன்னு நினைச்சுட்டேன். திரும்பபசிக்கும்தோணவே இல்லை...", "அச்சும்..., இரு...", தும்மியவன், வேகமாக தன் பொருட்கள் இருந்த மரத்தின் அருகில் சென்று, பையில் இருந்து ரஸ்க் பாக்கெட் ஒன்றை எடுத்து வந்து அவளிடம் கொடுத்தான்.

"ஆமா...., நான் தேவர்கள் பரம்பரையில் வந்தவ...., எனக்கு பசிக்கவே செய்யாது...", அவள் முணுமுணுப்பு அவனுக்கு கேட்கவே இல்லை.

அதை வாங்கியவள் வேகமாக உண்ணத் துவங்கவே, ஏற்கனவே வாய் வறண்டு இருந்ததால்..., அதை உண்ண முடியாமல் தொண்டைக்குள்ளேயே அது சிக்கியது.

அவள் பரிதாபமாக அவனைப் பார்க்க, அவள் பார்வையின் பொருள் புரியாமலும், வெளியே செல்ல முடியாத எரிச்சலிலும் இருந்தவன், "என்ன...?", சுள்ளெனக் கேட்டான்.

அவனிடம் கேட்க மனமில்லை என்றாலும் வேறு வழி இல்லாமல்..., "த...தண்ணி...", இடக்கை விரல்களை மடக்கி, கட்டை விரலை வாயில் வைத்து செய்கையில் வினவ, "இங்கேபார்..., எனக்கு இதெல்லாம் பழக்கம் கிடையாது. என்ன வேணுமோ, அந்த பையில் இருக்கு.... எடுத்துக்கோ.... என்னை தொல்லை பண்ணாதே...", வெடுக்கென உரைத்தவன், அதன் பிறகுதான் அவள் நிலை நினைவிற்கு வர,

"இரு இரு..., இப்போ மட்டும் நானே எடுத்துத் தரேன்...", சொன்னவன், தண்ணீரையும் கொண்டுவந்து கொடுத்தான்.

இதுவரை அவனது கண்ணசைவிலும், விரல் அசைவிலும் அவனுக்காக வேலை செய்ய ஆயிரம்பேர் இருந்திருக்க, முதல் முறையாக ஒரு பெண்ணுக்கு தான் செய்யும் இந்த சின்ன வேலை, ஒரு விதத்தில் அவனுக்கு பிடித்தாலும், அதை உணரும் நிலையில் அவன் அப்பொழுது இருக்கவில்லை.

தன் வாழ்நாளிலேயே இப்படி ஒரு சூழ்நிலையை சந்தித்ததே இல்லை என்பதை அவன் உணர்ந்துகொண்டான். கனமான மௌனம் சூழ, காட்டின் அமைதி அவர்களை ஆக்கிரமிக்க, அமைதியாக ஒரு மரத்தின் அருகில் சென்றவன், வலக்காலை மடக்கி மரத்தில் ஊன்றியவன், தன் கழுத்தில் கிடந்த கேமராவில், தான் எடுத்த புகைப்படங்களை ஒவ்வொன்றாக பார்வையிடத் துவங்கினான்.

அனிச்சையாக அவன் கரங்கள் தன் தாடையில் பதிய, கத்தையாக கையில் சிக்கிய தாடியில், ‘நீங்க என்ன ஆதிவாசியா…?’, அவள் கேள்வி மனதுக்குள் ரீங்காரமிட, கண்கள் அவள் பக்கம் சென்றது. அவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்து, படக்கென தன் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள் தமயந்தி.

அவள் செய்கையில், அவன் இதழ்களில் மெல்லிய புன்னகை கீற்றாக எட்டிப் பார்த்தது. இப்பொழுது உடனே வெளியே செல்ல வேண்டும் என்று அவனால் ஓட முடியாமல், ஏதோ ஒன்று அவனைத் தடுத்தது.அத்தோடு தாடையில் இருந்த தாடியை மழிக்கச் சொல்லி மனம் உந்த, எதற்கும் இருக்கட்டும் என்று தன்னுடன் எடுத்து வந்திருந்த  மின்சார ரேசரைத் தேடி எடுத்தான்.

அவன் செய்கையை பாராமல் பார்த்துக் கொண்டிருந்த தமயந்தி, அவன் ரேசரை வைத்துக் கொண்டு அலுப்பாக இங்கும் அங்கும் அலைவதை புரியாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் பிரச்சனை இதுதான்…., இதுவரை அவனாக ஷேவ் செய்துகொண்டது கிடையாது. இதற்கு முன்னர் காட்டுக்கு

வரும்பொழுது கூட, மூன்று மாதங்கள் தாடையில் கை வைக்காமல், ஊருக்குள் சென்றவுடன், முதலில் அவன் செல்லும் இடமே சலூன் தான்.

பின்னர் ஒரு முடிவோடு அதை ஆன் செய்து தாடையை மழிக்கத் துவங்கியவன், தாடையில் பாதி முடியை வெட்டிய நிலையில், தும்மலும் அவனைப் பாடாய் படுத்த, அதற்குமேல் முடியாமல் அதை தூக்கிப் போட்டுவிட்டு அலுப்பாக எழுந்து சென்றான்.

அவன் செய்கையை விழி விரிய பார்த்தவளுக்கு, அவன் சுபாவம் மெதுவாக புரியத் துவங்கியது. அவள் இதழ்களில் மெல்லிய புன்னகை உற்பத்தியாக, அதைப் பார்த்தவன், “ஏய்..., இப்போ எதுக்கு தேவையில்லாமல் சிரிக்கிற...?”, கடுப்பானான்.

“உங்களுக்கும் இந்த காட்டுக்கும் சம்பந்தமே இல்லாத மாதிரி இருக்கீங்க. இங்கே என்ன பண்ணுறீங்க...? உங்க வீடு எங்கே இருக்கு...? பார்த்தால்... பக்காவா ப்ளான் பண்ணி வந்த மாதிரி வேற இருக்கு...”, அவன் பொருட்களை கண்களால் அளவிட்டவாறு கேட்டாள்.

“நான் என்ன கேட்டேன்..., நீ என்ன கேக்குற...?”.

“காரணமாத்தான்... சொல்லுங்க....”, அவனைத் தூண்டினாள்.

“இப்போ சொன்ன உடனே உனக்குத் தெரிஞ்சுடுமா...?”, அவளைப் பார்த்து ஏளனமாக உரைத்தவன், அவள் முகம் நொடியில் சுருங்கியதைப் பார்த்து பேச்சை அப்படியே நிறுத்தினான்.

அவனது அந்த செய்கையை அவனே வெறுத்தான். ‘நான் எதுக்கு இவளோட உணர்வுக்கு இவ்வளவு மதிப்புக் கொடுக்குறேன்..? நான்சந்திக்காத பெண்களா...?’, மனம் முரண்டினாலும், இதழ்களோ, “சக்கரவர்த்தி குரூப் ஆப் கம்பெனீஸ் பத்தி உனக்குத் தெரியுமா...? அது எங்களோடது தான்..., போட்டோ எடுப்பது என்னோட ஹாபி....”

“எனக்கு பெர்சனல் வேலை செய்யவெல்லாம் பிடிக்காது. இங்கே வந்தால் வேற வழி கிடையாது..., எல்லாம் செய்துதான் ஆகணும். ஆனால்...., இந்த சூழலை, இந்த காட்டோட அமைதியை, அடர்த்தியை, நெருக்கத்தை, விலங்குகளோட உலகத்தில் நான் ஒன்றி போய்டுவேன். என்னால் இதை விட முடியாது...., இங்கே தான் நான் நானா இருக்க முடியும் அதான்...”, ஒருவித மோன நிலையில், சிலாகிப்பும், உயிர்ப்புமாக அவன் உரைக்க, காட்டின் மீது அவன் கொண்டுள்ள நெருக்கத்தை விழி விரித்து பார்த்தாள்.

“சரி..., உன்னோட வீடு எங்கே இருக்கு...?”, முதல் முறையாக அவளைப் பற்றி கேட்டான்.

அவள் தன் ஊர் பெயரைச் சொல்லவே, “அந்த பட்டிக்காடா....? ஆத்தில் குளிப்பேன்னு சொன்னப்போவே நான் நினைச்சேன்..., இப்படித்தான் இருக்கும்னு. சரி விடு..., இன்னும் கொஞ்ச நேரத்தில் இருட்டிடும், நான் நெருப்பைப் பத்த வைக்கிறேன்...”, சொன்னவன், கையில் இருந்த லைட்டரால் சுள்ளிகளை எடுத்துப் போட்டு நெருப்பை பற்ற வைத்தான்.

உடலில் கொஞ்சம் தெம்பு வந்திருக்கவே, அவனுக்கு உதவியாக சில சுள்ளிகளை அவளும் பொறுக்கி போட, அவளை அவன் ஒரு பேச்சுக்கு கூட தடுக்கவில்லை. காட்டில் இருள் சூழ, தமயந்தியை பயம் கவ்விக் கொண்டது.

நிலவின் வெளிச்சம் மரங்களைத் தாண்டி தரையைத் தொடவில்லை. நெருப்பின் வெளிச்சம் மட்டுமே அங்கே நிறைத்து இருந்தது. நிழலுருவமாக நளனின் நடமாட்டம் மட்டுமே அவளுக்கு சற்று தெம்பைக் கொடுத்தது.

இரவு உணவாக ரஸ்க்கை அவன் எடுத்து உண்ண, ‘மறுபடியும் இதையா சாப்பிட வேண்டும்...’, அவளுக்கு அலுப்பாக இருந்தது. இருக்கும் பயத்தில் பசி என்ற உணர்வே தெரியவில்லை தான். ஆனாலும் கொஞ்சமாவது தனக்கு தெம்பு வேண்டுமென்றால் உண்டே ஆகவேண்டிய கட்டாயம் அவளுக்கு.

அவனோ..., தனக்கு இது பழக்கம் தான் என்பதுபோல் இரண்டு மூன்று ரஸ்க் துண்டங்களை உண்டவன், தண்ணீரை குடித்துவிட்டு,  தன் கேமராவை நோண்டியவாறு, அவள் அருகில் சற்று இடைவெளி விட்டு அமர்ந்தான்.

அவள் கண்களில் இருக்கும் பயத்தை உணர்ந்ததாலேயே அவள் அருகில் அமர்ந்தான்.

இடைவிடாத தும்மல் போடும் வேளையிலும், பச்சைத் தண்ணீரை அவன் குடிக்கவே, “அதான் நெருப்பு இருக்கே..., வெந்நீர் வைத்துக் குடித்தால் கோல்டுக்கு கொஞ்சம் நல்லா இருக்குமே...”, மெல்லிய குரலில் உரைக்க, “ஐ ஹேட் ஹாட் வாட்டர்...”, முகத்தை கோணலாக்கி உரைத்தவன், அதற்குமேல் அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை.

நேரம் கடக்கவே..., “லெட்ஸ் ஸ்லீப்...., இட்ஸ் கெட்டிங் லேட்...”, உரைத்தவன், எழுந்து டெண்டுக்குள் செல்லப் போனான்.

‘நான் எங்கே உறங்குவது...?’, கேள்வியாக அவனைப் பார்க்க, அவனோ அதைப் பற்றிய கவலையே இல்லாதவனாக நடந்துகொண்டான்.

அவள் அசையாமல் இருக்கும் இடத்திலேயே இருக்கவே, “ஹேய் தந்தி...., உனக்கு இங்கிலீஷ் தெரியாதா...? ஓ..., மறந்துட்டேன்..., பட்டிக்காட்டு பொண்ணுக்கு எப்படி இங்க்லீஷ் தெரியும்..., தூங்கலாம் வான்னு சொன்னேன்”, டெண்டுக்குள் நுழைந்துகொண்டான்.

திகைத்துபோய் அப்படியே அமர்ந்திருந்தாள் தமயந்தி. அவளால் டெண்டுக்குள் செல்லவும் முடியவில்லை, வெளியே இருக்கவும் முடியவில்லை. காட்டின் மையிருட்டு ஏற்கனவே அவளை கலவரமாக்கிக் கொண்டிருந்தது.

இதயம் படபடவென அடித்துக் கொள்ள, தன்னை இப்படி ஒரு இக்கட்டில் சிக்கவைத்த தெய்வத்தை மனமார சபித்தாள்.

சிறிதுநேரம் அவள் வராமல் போகவே, அவளைக் கண்டுகொள்ளாமல், உறங்கத்தான் முயன்றான். ஆனால் அது முடியாமல், மனம் ஒத்துழைக்காமல், இமைகள் மூட மறுக்கவே, தன்னையே வெறுத்தவனாய்..., சலிப்பாகவும், கோபமாகவும் வெளியே வந்தவன்,

“தந்தி..., உனக்கு என்னதான் பிரச்சனை. இப்போ வெளியவே இருந்து புலிக்கு இரையாகப் போறியா...? அப்படின்னா எனக்கு ஒண்ணும் ஆட்சேபணை இல்லை...”, கோபம் குறையாமல் சொன்னவன், அவளை முறைத்தவாறே நின்றான்.

“எனக்கு வீட்டுக்குப் போகணும்...”, துக்கம் நெஞ்சை அடைக்க அவள் உரைக்க, எதற்கும் கலங்காத நளனே ஒரு நொடி ஆடிப் போனான். அவள் குரலில் இருந்த பாவம் அவனை மொத்தமாகத் தாக்க, எடுத்தெறிந்து எதுவும் சொல்ல முடியாமல் தயங்கி நின்றான்.

# பகுதி – 4

காலையில் பறவைகளின் குரலில் உறக்கம் கலைந்த நளன், தன் நாசி உணரும் புதுவிதமான வாசனையிலும், தன்மேல் மெத்தென எதுவோ விழுந்திருக்கும் உணர்விலும் பரவசமாக கண் விழித்தான்.

இப்படி ஒரு காலைப் பொழுதை அவன் வாழ்நாளிலேயே உணர்ந்தது இல்லை. இரவில் தன்னோடு டெண்டுக்குள் வர மனமில்லாமல் இருந்த அவளை, நாளை அவளுக்கு வேறு ஏற்பாடு செய்வதாக உறுதி கொடுத்து, உள்ளே அழைத்து வந்திருந்தான்.

அந்த டெண்டுக்குள் அவனே முழுதாக கால் நீட்டி படுக்க முடியாது, காலை சற்று குறுக்கித்தான் படுக்க முடியும். அத்தோடு, அவனது உணவுப் பொருட்கள் அடங்கிய பை, அவனது உடைகள் அடங்கிய ஒரு மூட்டை, என அனைத்தையும் அதற்குள் திணித்திருந்தான்.

அவள் ஏனென்று கேட்டதற்கு, உணவிற்காக விலங்குகள் வந்துவிடலாம் எனச் சொல்லவே, அமைதியாகி விட்டாள். அவன் படுத்த பிறகு, இடமின்மையால் அவனை நெருங்கியவாறு அவன் அருகிலேயே அமர்ந்துகொண்டாள்.

காயம் வேறு விண் விண்ணென்று தெறித்தது. அதன் வலியையும் பொறுத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள். அவனிடம் மருந்து கேட்க தயக்கமாக இருந்தது. அவனும் அவளை படுக்கவும் சொல்லவில்லை, அவன் எழுந்து அவளுக்கு இடம் கொடுக்கவும் இல்லை.

நள்ளிரவில் அவளை அறியாமலே கண்ணயர்ந்தவளிடம் இருந்து மெல்லிய முனகல் கேட்கவே, அதில் கண் விழித்தவன், டார்ச் அடித்து பார்க்க, தன் பொருட்கள் அடங்கிய பையின் மீது, அவள் எசகு பிசகாக படுத்திருப்பதைப் பார்த்தவன்,

‘இவ வேற...., இப்படி படுத்தால் எப்படி தூக்கம் வரும்...?’, அவளை எழுப்பப் போனவன், தன் முடிவை மாற்றிக் கொண்டு, தான் நேராகப் படுத்தவன், அவளை தன்மேல் சாய்த்தவாறு படுக்க வைத்து, அவளைத் தோளோடு அணைத்தவாறு உறங்கினான்.

தமயந்தியும் தன்னை மீறி..., அவன்மேல் வாகாக ஒண்டிக் கொண்டு உறங்கத் துவங்கினாள். ‘இப்போ ஒட்டிக்கிறா..., காலையில் என்ன சொல்லுவாளோ...’, அதை அப்பொழுது பார்த்துக் கொள்ளலாம் என்று உறங்கத் துவங்கினான்.

அதை இப்பொழுது எண்ணிப் பார்த்தவனின் இதழ்கள் புன்னகையில் விரிந்தது. தன் தோள் வளைவில் முகம் புதைத்து நிர்மலமாக உறங்கும் அவளைப் பார்த்தவனது கலையார்வம் தலை தூக்க, கை அருகில் இருந்த கேமராவை இயக்கி, தங்கள் இருவரையும் சேர்த்து புகைப்படம் எடுத்தான்.

கேமராவின் ஒலி(ளி)யில் படக்கென கண் விழித்தவள், தான் இருக்கும் நிலை உணர்ந்து, அவன்மேல் இருந்து

படக்கென எழுந்தவள், “இப்போ என்னை போட்டோ எடுத்தீங்களா...? முதல்ல அதை டிலீட் பண்ணுங்க...”, கோபமாக கத்தினாள்.

நிதானமாக எழுந்து அமர்ந்தவன், ஒப்பனைகள் எதுவும் இல்லாமல், இடைவரை தொங்கிய கூந்தல் கலைந்து கிடக்க, கண்களில் உறக்கத்தின் சாயல் மிச்சமிருக்க, அதில் கோபத்தை வெளிப்படுத்தி அமர்ந்திருந்த அவளை, அவள் எதற்கு கோபப்படுகிறாள் என்பதையும் மீறி, கையில் இருந்த கேமராவால் தொடர்ச்சியாக புகைப்படம் எடுத்தான்.

“நான் சொல்லிட்டே இருக்கேன்...”, கோபமாக அவனை நெருங்குவது வரை, அனைத்தையும் படமாக்கினான்.

“நேச்சுரல் பியூட்டி..., இவ்வளவு இயற்கையா, கொஞ்சம் கூட அலங்காரமே இல்லாமல் ஒரு பொண்ணை நான் இதுவரை பார்த்ததே இல்லை..”, அவன் சிலாகித்துச் சொல்ல, அவன் கண்களில் இருந்த உண்மையும், வியப்பும், வார்த்தையும், அவளை திகைக்க வைத்து, தேக்கியது.

“என் பெர்மிஷன் இல்லாமல் நீங்க எப்படி என்னை போட்டோ எடுக்கலாம்...?”.

“அப்போ உன் பெர்மிஷனோடதான் நான் உன்னை தூக்கிட்டு வந்து, உனக்கு எதுவும் ஆயிடக் கூடாதேன்னு ட்ரெஸ் மாத்தி விட்டேனா?”, அவன் கேள்வி அவளை வாயடைக்க வைத்தது. அதிலும் அவன் நினைவூட்டும் அந்த விஷயம், அவளை விதிர்க்கச் செய்தது. அவனுக்கோ, அவளை வாயடைக்கச் செய்துவிட்டோம் என்பதில் அவ்வளவு பெருமை.

“இந்த காட்டில் இருக்கும் எல்லாத்தையும், என் கண்ணுக்கு ரசனையா இருக்கும் எல்லாத்தையும் நான் போட்டோ எடுப்பேன். உன்னால் என்ன செய்ய முடியுமோ செய்துக்கோ....”, அசால்ட்டாக சொல்லிவிட்டு அவன் வெளியேற, அவன் வார்த்தைகள், தனக்குள் ஏற்படுத்தும் தாக்கத்தை அடக்க முடியாமல் அமர்ந்திருந்தாள்.

திடுமென நினைவு வந்தவளாக டெண்டுக்குள் இருந்து எழுந்து வந்தவள், ‘அவன் எங்கே’ என்று வேகமாக பார்வையைச் சுழல விட்டாள். அவன் சற்று தூரத்தில் நின்று, கேமராவால் எதையோ புகைப்படம் எடுத்துக் கொண்டிருக்க, அவன் முன்னால், கேமராவை மறைத்தவாறு சென்று நின்றாள்.

“ஏய்...”, கோபமாக நிமிர்ந்தவன், அவள் கண்களில் இருந்த தவிப்பில், தன்னை கட்டுப்படுத்திக் கொண்டு அவளைப் பார்த்தான்.

அவளோ..., அவன் முகத்தைப் பாராமல்..., தன் கைகளால் ஜெர்க்கினை முழங்காலுக்கு கீழே இழுக்க முயன்றவாறே..., “நீ...ங்க..., எ..ன்..னை ‘அப்படி’ எ..ந்த போ..ட்..டோவும்... எடுக்கலை தானே....”, தன் உயிரையே கையில் பிடித்தவாறு, அவன் பதிலுக்காக அவள் காத்திருக்க,

அவளது கேள்வி புரியாமல் முதலில் குழம்பியவன், புரிந்த பொழுதோ..., கண்கள் சிவக்க, கழுத்து நரம்புகள் தெறிக்க...., “என்னை என்ன அவ்வளவு மட்டமா நினைச்சுட்டியா...., ரெண்டு நாளா நீ என்னோடவே இருக்க, அதிலும் ஒரு முழு ராத்திரியை நீ என்னோட கழிச்சு இருக்க, அப்படி இருந்தும் உன்னால் எப்படி இப்படி ஒரு கேள்வியை என்னைப் பார்த்து கேக்க முடிஞ்சுது?”.

“நான் அழகை மட்டும்தான் புகைப்படம் எடுப்பேன். அசிங்கத்தை இல்லை”, உச்சக் கோபத்தில் காடு அதிர கத்தியவன், தன் கழுத்தில் இருந்த கேமராவைக் கழட்டி அவள் கையில் திணித்தான்.

அவனது கோபமே, அவன் அப்படிச் செய்யவில்லை என்பதை அவளுக்கு உணர்த்த, அவனது ‘நான் அழகை மட்டும்தான் புகைப்படம் எடுப்பேன். அசிங்கத்தை இல்லை’, என்ற வார்த்தைகள் அவளை காயப்படுத்தியது.

‘அப்போ நான் அசிங்கமா...?’, பெண்ணின் இயற்கை குணம் தலைதூக்க, அதில் அவள் மூழ்கும் வேளை,

“இந்த லெஃப்ட் பட்டனை அழுத்தினால் நான் எடுத்த எல்லா போட்டோவும் வரிசையா வரும். டிஸ்ப்ளேயில் ரைட் சைட், டேட் வரும், நீ தாராளமா செக் பண்ணிக்கோ…”, அவளுக்கு எப்படி பார்க்கவேண்டும் என்று சொல்லிக் கொடுத்துவிட்டு கால்களில் சருகுகள் மிதிபட, ஆத்திரமாக நடந்து சென்றான்.

அவனது நடையின் வேகம் அவன் கோபத்தை உரைக்க, கேமராவோடு அவன் பின்னால் சென்றாள். டெண்டுக்குள் இருந்து கையில் பேஸ்ட், ப்ரெஷ்ஷோடு அவன் வெளியே வர, “சாரி…, நான் உங்கமேலே சந்தேகப்பட்டு கேக்கலை. ஒரு பொண்ணா, என்னோட இடத்தில் நீங்க இருந்து பாருங்க. அப்போ என் கேள்வியில் இருந்த நியாயம் உங்களுக்கு புரியும்”, தன்னை அவன் சரியாக புரிந்துகொள்ள வேண்டுமே என்ற தவிப்பு அவளிடம் இருந்தது.

சில நொடிகள் அமைதியாக இருந்தவன்…, “ம்…, சரி, நீயென்ன இந்த ஜெர்க்கினோடவே சுத்துற, வேற ட்ரெஸ் போடுற ஐடியாவே இல்லையா..? ஒரு வேளை, ஃபேன்டையும் நானே போட்டு விடணும்னு எதிர் பாக்குறியா..?”, அவன் ஒற்றை புருவம் தூக்கி வினவ, முகம் சிவக்க, அவனுக்கு முதுகு காட்டி நின்றவள், சற்று முன்பு கோபப்பட்டவன் இவன்தானா என திகைத்துப் போனாள்.

நெஞ்சம் படபடவென அடித்துக் கொண்டது. மெதுவாக தன்னை நிதானப்படுத்திக் கொண்டு திரும்பிப் பார்க்க, அவன் அங்கே இருக்கும் அறிகுறியே இருக்கவில்லை.

“ஹப்பா….”, நிம்மதியாக மூச்சு விட்டவள், டெண்டுக்குள் சென்று, அவன் பையை ஆராய்ந்து ஒரு பேன்ட்டை எடுத்து போட்டுக் கொண்டு அதன் உயரத்தை மடித்து விட்டுக்கொண்டாள். இவ்வளவு நேரம் தெரியாமல் இருந்த காயத்தின் வலி, இப்பொழுது தலை தூக்க,

ஏதாவது மாத்திரை இருக்கிறதா என அலசியவள், “ச்சே…, அவருக்கே கோல்ட் இருக்கு, மருந்து இருந்திருந்தால் அவர்

போட்டிருக்க மாட்டாரா என்ன...?”, தனக்குத் தானே கேட்டுக் கொண்டவள், டெண்டில் இருந்து வெளியேறினாள்.

முகம் கழுவி வந்தவன், “தந்தி...., இந்த ஐந்து மரம் தாண்டி, லெப்டில் திரும்பி, அதுக்குப் பிறகு பத்து மரம் தாண்டி, ரைட்டில் திரும்பி எட்டு மரம் தாண்டிய உடனே ஆறு தெரியும். அங்கே போய் முகம் கழுவிட்டு வந்து இங்கேயே இரு.

“நான் காட்டுக்குள் போயிட்டு வரேன்.
எனக்க்காகக்  காத்திருக்காமல், என்ன வேணுமோ எடுத்து சாப்பிட்டு இங்கேயே இருந்துக்கோ”, சொன்னவன் சென்றே விட்டிருந்தான்.

தெரியாத இடத்தில் இருப்பதே கஷ்டம் என்றால்..., அதிலும் காட்டில் தனியாக இருக்க வேண்டும் என்றால் அது எவ்வளவு பெரிய விஷயம். அதைப் பற்றிய எண்ணம் சிறிதும் இல்லாமல், தன்னை அவன் தனியாக விட்டுச் செல்வதில் அடி வயிற்றில் ஒரு பயப்பந்து உற்பத்தியானது.

ஒரு வழியாக தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, அவன் சொன்ன வழியில் சென்றவள், ஆற்றை கண்டுபிடித்து, ஆற்றுக்குள் காலை வைக்கும் முன்னர், அங்கே இருந்த மான் கூட்டமே அவளை மிரட்டியது என்றால்...., ஆற்றுக்கு அந்தப் பக்கம் ஒரு கரடி கண்ணுக்குத் தெரிய, அவளுக்கோ இதயம் தொண்டைக் குழியில் வந்து துடித்தது.

ஏற்கனவே அவனது பேன்ட் இடுப்பில் நிற்காமல் நழுவ, அதைப் பிடிக்கவா, பல் விளக்கவா எனத் திணற, ஒரு வழியாக பல்லை மட்டும் விளக்கிக் கொண்டு, ஓடியே வந்துவிட்டாள்.

டெண்டுக்குள் நுழைந்து, அதன் வாயிலை ஜிப்பால் மூடிய பிறகும் நெஞ்சின் ஓட்டம் நிற்கவில்லை. ஆழமாக மூச்செடுத்து தன்னை நிலைப்படுத்தியவளுக்கு, எப்படியாவது இங்கே இருந்து தப்பிச் செல்லவேண்டும் என்ற எண்ணம் அழுத்தியது.

ஆனால் எங்கே எப்படிச் செல்வதென்று தெரியாமல் அப்படியே அமர்ந்துவிட்டாள். எப்படியும் எங்கும் செல்ல முடியாது, அதற்கு, இருக்கும் இடத்தையாவது சுத்தம் செய்வோம் என எண்ணியவள், பொருட்களை ஒதுங்க வைத்தாள்.

அதில் நிறைய பலூன் இருப்பதைப் பார்த்தவள், “இவர் என்ன சின்னப் பையன் மாதிரி பலூன் எல்லாம் வச்சுக்கிட்டு இருக்கார்...”, சிரித்துக் கொண்டாள்.

அதில் இருந்த மேகி, பால் பவுடர் பாக்கெட்டுகள் பிரிக்கக்கூடப் படாமல் இருப்பதைப் பார்த்தவள், அவன் சோம்பேறித்தனத்தின் அளவை கணக்கிட்டுக் கொண்டாள்.

அவனது பொருட்கள் அனைத்தும் ஒரு ஒழுங்கே இல்லாமல், துணிகள் கூட பெயருக்கு துவைக்கப்பட்டு, கசங்கிப்போய்..., முதலில்அவற்றை துவைக்க வேண்டும் என எண்ணிக் கொண்டாள். பசி எடுக்கவே, ஒரு டின் ஜூசை குடித்தவள், ரஸ்க்கை எடுத்து உண்டாள்.

காயம் வேறு,‘என்னைக் கொஞ்சம் கவனி’ எனக் கதற, கட்டின் மேலாக கை கூட வைக்க முடியாமல் வலி உயிர் போனது. இரவில் அதிக நேரம் உறங்காததால் கண்கள் சுழட்டிக் கொண்டு வர, வலியையும் மீறி கண்ணயர்ந்தாள்.

இங்கே புகைப்படங்கள் எடுத்துக் கொண்டிருந்தவன், மாலை மங்கப் போகும் நேரம், கிளம்பினான். டென்ட் இருக்கும் இடத்தை அவன் நெருங்கும் நேரம்..., “ஆ....”, என்ற தமயந்தியின் குரல் அவன் செவிப்பறையைத் தீண்ட, அவன் மூளை சிந்திக்கும் முன்பே, அவன் கால்கள் ஓடத் துவங்கி இருந்தது.

## பகுதி – 5

டெண்ட்டுக்கு வந்து சேர்ந்தவன், டெண்ட்டை சுற்றி இருந்த குரங்குகளை விரட்டியவன், வேகமாக டெண்ட்டை திறந்து உள்ளே நுழைந்தான். அங்கே அவன் கண்ட காட்சியில், இதயம் துடித்துப் போனது.

பீதி உறைந்த கண்களோடு, அவனது பொருட்களை தன்னைச் சுற்றி எடுத்து வைத்துக் கொண்டு, என்னவோ அது பெரிய கேடையம்போல் பாவித்து அமர்ந்திருந்தவளைப் பார்த்து மனம் இளகியது.

“ஹேய் தந்தி..., அது ஜஸ்ட் குரங்குதான். இதுக்குப்போய் இப்படி பயந்துட்டு உக்காந்து இருக்க..., அந்த பலூனை ஊதி உடைத்தாலே, அந்த சத்தத்துக்கே அது ஓடிடும்....”, அவன் சொல்லி முடிக்கும் முன்னர், தாவி வந்து அவனைக் கட்டிக் கொண்டாள். மண்டியிட்டு அமர்ந்து அவளை அணைத்துக் கொண்டான்.

அவள் உடல் வெடவெடவென நடுங்குவது அவனுக்குத் தெளிவாக புரிந்தது. அவளை மேலும் தன்னோடு இறுக்கிக் கொண்டவன், “ரிலாக்ஸ்..., இது அவ்வளவு ஆபத்தான இடம் கிடையாது...”, அவள் பயத்தை தெளிய வைக்க முயன்றான்.

“அது எனக்குத் தெரியுமா என்ன...? ஒரு வயசுப் பொண்ணு, அதுவும் காடு, சுத்தி மிருங்கங்கள்..., கொஞ்சம் கூட மனசாட்சியே இல்லாமல் விட்டுட்டு போயிட்டு..., இங்கே இருக்கும் மிருகங்களுக்கும் உங்களுக்கும், எனக்கு வித்தியாசமே தெரியலை...”, தான் இதுவரை அனுபவித்த தவிப்பும், பயமும் அவளை இவ்வாறு பேச வைத்தது.

அவள் பேச்சில் அவனுக்கு கோபம் கிளர்ந்தாலும், முதல் முறையாக அவளை புரிந்துகொள்ள முயன்றான். “ஓ..., எனக்கு....”.... “ஆமா..., உங்களுக்கு இதெல்லாம் தெரியாது..., அதைத்தானே சொல்ல வரீங்க. இதையும் தெரிஞ்சுக்கணும்..., சும்மா கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறதும், அதை சுகபோகமா செலவழிக்கிறதும், காட்டுக்குள் சுத்துறதும் மட்டும் தெரிந்தால் போதாது..., கொஞ்சம் எதார்த்தத்தையும் புரிஞ்சு நடந்துக்கணும்”, பொரிந்து தள்ளிவிட்டாள்.

நளனுக்கு இதுவரை யாரும் இப்படி எந்த அறிவுரையும் சொன்னது கிடையாது. அவனது தாத்தாவும், அப்பாவும், அவன் விருப்பத்துக்கு மற்றவர் செயல்படவேண்டும் என்று

உரைத்தார்களே தவிர, அவனுக்கு இணக்கமாக நடந்துகொள்ளும் சூழலை பயிற்றுவிக்கவில்லை.

அவளை வெடுக்கென தள்ளி விட்டவன், "ஏய்..., நீ யாருடி எனக்கு...? நான் எதுக்கு உன்னை புரிஞ்சுக்கணும்...? எங்கே இருந்தோ வந்து சேர்ந்துட்டு எதுக்கு என் உயிரை வாங்குற...? தயவுசெய்து இங்கே இருந்து போய்டு..., நான் மிருகமாம்..., ஆமா மிருகம் தான்.... இப்போ என்னங்குற...

"இருக்குறது என் இடம், திங்கிறது என் சாப்பாடு, போட்டிருக்கிறது என்னோட ட்ரெஸ்..., எல்லாம் என் தயவில் இருந்துக்கிட்டு, என்னையவே குறை சொல்லுறியா...? இவ பெரிய மதர் தெரேசா..., சொல்ல வந்துட்டா, இன்னொரு தடவை வாயைத் தொறந்த...", வழக்கமே இல்லாமல் அவன் புதிதாககேட்கும் இந்த அறிவுரை, அவனை கொந்தளிக்க வைத்தது.

சற்று நேரத்துக்கு முன்னர் இருந்த இளக்கமான மனநிலையை அடியோடு துடைத்துப் போட்டது. அந்த இரவில் அவளை சிறிதும் கண்டுகொள்ளாமல் அவன் வேலையைச் செய்தவன், டெண்ட்டுக்குள் புகுந்து படுத்துக் கொள்ள, வெளியே நெருப்பின் அருகில் அமர்ந்திருந்த அவளுக்கு, டெண்டுக்குள் அவன் விடாமல் இருமுவதும், தும்முவதும் கேட்டது.

அவன் செய்கையில், நடத்தையில் அவளுக்கு வருத்தம் இருந்தாலும், ஒரு பெண்ணாக அவனது கண்ணியமான நடத்தையையும் அவளால் புறம் தள்ள முடியவில்லை. அதோடு..., பெண்களுக்கே உரிய தாய்மை குணம் தலை தூக்க, பகல் வேளையில் வெந்நீர் வைக்க எடுத்த பாத்திரத்தை எடுத்து, தண்ணீர் சுட வைத்தாள்.

அவளுக்கும் உடல் கொஞ்சம் நெருப்பாக தகிக்கத் துவங்கி இருந்தது. காயமும் என்னை கவனித்தால்தான் ஆயிற்று என படுத்த, கொஞ்சம் சுடுநீரை எடுத்துக் கொண்டு டெண்டுக்குள் சென்றவள், "இதை கொஞ்சம் குடிங்க..., கோல்டுக்கு இதமா இருக்கும்...", அவன் அருகில் நீரை வைத்தாள்.

“உன் அக்கறையை எனக்கு காட்ட வந்தியா...? எனக்கு எதுவும் வேண்டாம்”, அவனால் இயல்புக்கு திரும்ப முடியவில்லை.

“என்மேல் தானே கோபம்..., இது உங்க தண்ணி, உங்க நெருப்பு, உங்க பாத்திரம்..., நான் எதுவும் செய்யலை போதுமா...?”, சொல்லிவிட்டு வெளியே சென்று அமர்ந்துகொண்டு, தனக்காக எடுத்து வைத்திருந்த சுடு தண்ணீரைக் குடித்தாள்.

இன்று வெளியே இருக்க அவ்வளவு பயமாக இருக்கவில்லை. மாலையில்,‘இது ஆபத்தான இடமில்லை’ என்று அவன் சொன்னது நினைவிற்கு வர, அதுவும் கொஞ்சம் தைரியத்தை அளித்தது.

அவளது பேச்சு அவனை ஒரு விதத்தில் தாக்க, அவனுக்கு பிடிக்கவில்லை என்றாலும், சளித்தொல்லை மிகவும் படுத்துவதால், கைவசம் இருந்த ஒரு மாத்திரையையும் விழுங்கியவன், சுடுதண்ணீரையும் குடித்தான்.

அவள் உள்ளே வராமல் இருப்பதில் வருத்தமுற்றவன், ‘நமக்கே இப்படி இருக்குன்னா..., நான் பேசியது அவளுக்கும் கஷ்டமா தானே இருக்கும்...’, தனக்குள் சொல்லிக் கொண்டவன், வெளியே சென்றான்.

“தந்தி..., உள்ளே வந்து தூங்கு....”, அவள் அசைவதாகத் தெரியவில்லை.

“வெளியே இப்போ எல்லா மிருகமும் வேட்டைக்கு வர்ர நேரம்...”, இதற்கும் அவளிடம் எதிர்வினை இல்லை.

“இப்போ நான் சாரி சொன்னால் வருவியா...?”, இதற்குமுன் அவன் இப்படி பேசியே இருக்க மாட்டான் என்பது, நெருப்பின் வெளிச்சத்தில், அவன் முகத்தில் இருந்த உணர்வுகள் அவளுக்குச் சொன்னது.

அவனை இதற்குமேல் டென்ஷன் செய்யவேண்டாம் என்று உள்ளே சென்றாள். அவனது பொருட்களை அவள் ஒழுங்குபடுத்திவிட்டதால், நேற்றைவிட இன்று

டெண்டுக்குள் சற்று அதிகஇடம் இருந்தது. ஒரு ஓரமாகச் சென்று அமர்ந்தவள், அவனது பொருட்கள் மீது சாய்ந்து படுத்துக் கொண்டாள்.

நேற்றைப்போல் அவள் அவன்மேல் படுத்திருந்தால், அவள் தேகம் நெருப்பாய் கொதிப்பதை உணர்ந்திருப்பான். அவளது காயத்தைப் பற்றிய எண்ணமே அவனுக்கு இருக்கவில்லை. அதைஅவன் சுத்தமாக மறந்துவிட்டிருந்தான்.

மறுநாள் காலையில் அவனுக்கு முன்பாகவே அவள் கண் விழித்திருக்க, அவளை டெண்டுக்குள் காணாமல், படக்கென எழுந்தவன், வேகமாக வெளியே வந்தான். அவள் கண்ணுக்கெட்டிய தூரம் வரை இல்லாமல் போகவே, கொஞ்சம் பதட்டம் தொற்றிக் கொண்டது.

தான் பேசிய பேச்சால் கோபித்துக்கொண்டு ஊருக்குச் செல்கிறேன் என்று கிளம்பிவிட்டாளோ...., அவளுக்கு வழி தெரியாதே..., இந்த காட்டுக்குள் புலி வேறு அதிகம்...., ஒவ்வொருநினைப்பிலும்,  எதற்கென்றே தெரியாமல் மனம் அடித்துக் கொண்டது.

அந்த நேரம், அவள் வைத்துக் கொடுத்த சுடு தண்ணீர் நினைவிற்கு வந்து இம்சித்தது. ஒரு வேளை ஆத்துக்கு போயிருப்பாளா...? டெண்டை பூட்டிவிட்டு, ஆற்றுக்குச் செல்லும் பாதையில் ஓடினான்.

அங்கே அவன் கண்ட காட்சியில் நிம்மதியாக மூச்சு விட்டவன், அத்தோடு சிரித்துக் கொண்டான். அவளை நெருங்கியவன், “தந்தி..., என்ன வேலை பாத்து வச்சிருக்க...., உன்னை யார் இப்போ துணியெல்லாம் வாஷ் பண்ணி போடச் சொன்னா...? காட்டிலேயே குடித்தனம் பண்ணலாம்னு முடிவே பண்ணிட்டியா...?

“இந்த பொண்ணுங்க எல்லாம் இப்படித்தானா...? துணியைப் பாத்தால் துவைச்சு போட்டுடுறது...., கலைஞ்ச பொருட்களைப் பாத்தால் அடுக்கி வைக்கிறது, இன்னும் நீ

சமைக்க மட்டும்தான் செய்யலை. பட்டிக்காடு என்பதை அப்படியே ப்ரூவ் பண்ணுற.

“சரி எல்லாத்தையும் எடு..., கிளம்பலாம்..., இல்லன்னா அப்படியே விடு..., இதெல்லாம்  எப்படியும் நான் மறுபடி யூஸ் பண்ணப் போவதில்லை, லக்கேஜ் குறையும்.  இரு, நான் பேஸ் வாஷ் பண்ணிட்டு வந்துடுறேன்”, சொன்னவன் அவள் பதிலை எதிர்பாராமல் பல் விளக்கச் சென்றான்.

எப்பொழுதும் மூன்று மாதங்கள் முடியும்வரை, காட்டில் இருந்து அசையாமல் இருப்பவன், நேற்றைய அவளது பேச்சுக்குப் பிறகு, அவளை பத்திரமாக அவள் வீட்டில் சேர்ப்பதுதான் முதல் வேலை என்பது புரியவே, தன் முடிவை மாற்றிக் கொண்டிருந்தான்.

அவன் பேசிய பேச்சு அவளுக்கு கொஞ்சம் கோபத்தைக் கிளறினாலும், ‘கிளம்பலாம்’ என்ற அவன் கூற்று..., என்னவோ இப்பொழுதே வீட்டுக்கு போய்விட்ட உற்சாகத்தை அவளுக்கு கொடுத்தது.

அவன் முகம் கழுவிவிட்டு வரவே, அவனை முறைத்தவாறே நின்றாள். “என்ன...?”, அவன் புரியாமல் கேட்க, “முதல்ல போய் குளிச்சுட்டு வாங்க..”, கைகளைக் கட்டிக்கொண்டு அசையாமல் நின்றாள்.

“என்னது....? என்ன தந்தி விளையாடுறியா? ஏற்கனவே கோல்டா இருக்கு.அதெல்லாம் முடியாது...”, பிடிவாதமாக அவன் உரைக்க,

“அதெல்லாம் ஒண்ணும் ஆகாது..., முதல்ல குளிச்சுட்டு வாங்க....”, அப்பொழுதுதான் அவள் முகத்தை அவன் தெளிவாகப் பார்க்க, முகம் சிவந்து, கண்கள் கலங்கி, உதடு கொஞ்சம் வெடித்திருக்க, அவள் நார்மலாக இல்லை என்பதை அவள் முகம் அவனுக்கு காட்டிக் கொடுத்தது.

அப்பொழுதுதான் அவளது காயம் அவன் நினைவிற்கு வர, “ஓ மை காட்...”, இடக்கையால் தன் தலையிலேயே அடித்துக் கொண்டவன், வேகமாக அவளை அணுகி, ஜெர்க்கினின் ஜிப்பை வேகமாக இறக்கினான்.

அவன் செய்கையில் திகைத்தவள், “என்னங்க..., என்ன இது....?”, அவன் கையைத் தடுக்க முயன்றாள்.

“தந்தி சும்மா இரு...”, அவள் கையை தட்டி விட்டவன், அவன் செய்கையைத் தொடர்ந்தான்.

“சும்மா இருக்குறதா...? ஒரு பொண்ணோட டிரெஸ்ஸை கழட்டுறீங்க, அது தெரியுதா...?”.

“உன்னை இப்போதான் புதுசா பாக்கப் போறேனா...? ஏற்கனவே எல்லாம் பாத்ததுதான். சும்மா இரு...”, ஜெர்க்கினை விலக்கி, அவள் காயத்தைப் பார்த்தவன், காயத்தின்மேல் தான் போட்ட பிளாஸ்டர் ஈரமாக இருப்பதைப் பார்த்தவன், கொந்தளித்தான்.

“ஏய்..., லூசா நீ...? ஏற்கனவே காயத்துக்கு மருந்து வைக்கவே இல்லை. இதில் உன்னை யார் குளிக்கச் சொன்னது...? தந்தி..., உனக்கு பீவர் அடிக்குதா?”, அவள் கழுத்தில் கை வைத்துப் பார்த்தவன், அது நெருப்பாய் கொதிக்கவே, மீண்டும் தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

இப்பொழுது அவனைத் தடுக்கத் தோன்றாமல் நின்றிருந்தாள். அவன் வார்த்தைகள் ஏற்படுத்திய தாக்கம் அதிகமிருந்தது. தன்னை மீறி நடந்துவிட்ட தவறு அது. கொண்டவன் மட்டுமே காணவேண்டிய தன்னை, இயற்கையின் சீற்றத்தால்நடந்துவிட்ட இவ்விஷயத்திற்கு, அவள் என்ன செய்ய முடியும்...?

அவளை தரதரவென்று இழுத்து வந்தவன், டென்டின் அருகில் அவளை அமர வைத்துவிட்டு உள்ளே சென்று, முதலுதவிப் பெட்டியோடு வெளியே வந்தான்.

அவள் ஜெர்க்கினை கழுத்தோடு சேர்த்து பிடித்தவாறு இருக்க, அவள் கையை வெடுக்கெனத் தள்ளி விட்டவன், “தன்னை பாத்துக்க தெரியாது. இதில் ஊருக்கு உபதேசம் வேற....”, ப்ளாஸ்ட்டரைவெடுக்கென அவன் இழுத்தெடுக்க,

“அம்மா....”, என அலறியே விட்டாள்.

“இப்போ கத்து..., இந்த பெயின்..., பீவர்..., எல்லாத்தையும் இவ்வளவு நேரம் எப்படி தாங்கிகிட்ட...? எனக்குதான் பொறுப்பில்லை..., இது உன் உடம்புதானே, வலியும் உனக்குத்தானே தெரியும்...? மருந்து வைக்க வேண்டாம்...? லூசு..., லூசு...,

“தையல் பழுத்தால் அவ்வளவுதான்...., இந்த பீவரோட எங்கே போறது...? ரெண்டு நாள் ஆகட்டும் பிறகு பாத்துக்கலாம்....”, வாய் புலம்பினாலும், கைகள் அதன் வேலையை சரியாகச் செய்தது.

“இல்ல..., எனக்கு ஒண்ணுமில்லை..., நாம போகலாம்...”, வலியை, உதட்டைக் கடித்து பொறுத்துக் கொண்டிருந்தவள், முதல் முறையாக வாய் திறந்தாள்.

அவன் பார்த்த பார்வையில் படக்கென வாய் மூடிக் கொண்டாள். “ காயத்தை அப்படியே திறந்தே விடு, மூடி வைத்தால் கொஞ்சம் ரிஸ்க், அதான் சொல்லுறேன். புரியுதில்ல...”, அழுத்தமாக அவன் கேட்க, பார்வையைத் தாழ்த்தியவள், மெதுவாக தலையை அசைத்தாள்.

“நேத்து ஒதுங்க வைக்கும்போது, எந்த மாத்திரையும் பாக்கலையே...”, அவள் கேள்வியாக இழுக்க,

“அதுவா..., எப்பொழுதும் அதை நான் என்னோடவே வைத்திருப்பேன். வெளியே போனால் எப்போ அதோட தேவை வரும்னு சொல்ல முடியாது அதான்...”, அவளுக்கு விளக்கம் கொடுத்தவன், அவளை ஓய்வெடுக்கச் சொன்னான்.

## பகுதி – 6

நாளன் கொடுத்த மாத்திரையின் உபயத்தில் சற்று தூங்கி விழித்தவள், வயிறு பசியில் அலறுவதை உணர்ந்து எழுந்து அமர்ந்தாள். ‘ச்சே..., இன்னைக்கும் அதே வரட்டி தானா....? எப்படித்தான் இதைத் தின்னு உயிர் வாழுறானோ...? ரெண்டு நாளுக்கே தாங்க முடியலை’,

அலுப்பாக எண்ணியவள் டெண்டை விட்டு வெளியே வந்தாள்.

'ஹையோ..., இன்னைக்கும் தனியா விட்டுட்டு போயிட்டானா...?', கண்களை வேகமாகச் சுழற்றினாள்.

நளன் ஒரு மரத்தினடியில் கொஞ்சம் கடுப்பாகத்தான் அமர்ந்திருந்தான். அவன் வாழ்க்கையில் தன்னை மீறி நடக்கும் இந்த மாற்றங்கள் அவனுக்கு எரிச்சலை அளித்தது.

அதைவிட, யாரென்றே தெரியாத ஒரு பெண்ணுக்காக..., தன் விருப்பத்துக்கு ஏற்ப செயல்பட முடியாமல், கட்டிப்போட்ட மாதிரி ஒரு  உணர்வில், யார்மேல் கோபத்தைக் காட்டவென்று தெரியாமல் அமர்ந்திருந்தான்.

அவன் அருகில் நெருங்கியவள்..., "என்னங்க...", மெதுவாக அழைக்க,

"இதென்ன பட்டிக்காடு மாதிரி..., என்னங்க.., நொன்னங்கன்னு..., என்பேர் நளன்..., பேரைச் சொல்லியே கூப்பிடு...", அவளிடம் எரிந்து விழுந்தான்.

அவன் கத்தியதே ஒரு அதிர்வென்றால்..., அவன் பெயர் மனதின் ஓரத்தில் மெல்லிய குறுகுறுப்பையும், அதிர்ச்சியையும் ஒருங்கே அளித்தது. தமயந்தியின் அப்பா அவளிடம் அடிக்கடி ஒரு விஷயம் சொல்வார், அவளுக்கென்று நள மகாராஜா எங்காவது பிறந்திருப்பார் என்று.

அப்பொழுது அவரை கேலி செய்து சிரிப்பாள். "தமயந்தி என்கிற என் பேரே அரத பழசு, இதையே யாரும் வைக்க மாட்டாங்க, இதில் நளன்னு அவங்க பையனுக்கு..., அதுவும் இந்த காலத்தில் பெயர் வைப்பாங்களா? போங்கப்பா....", அதை எண்ணியவளின் கண்களில், தந்தையைக் காணவேண்டும் என்ற ஏக்கம் அப்பட்டமாகத் தெரிந்தது.

அவள் கண்களில் வந்துபோகும் உணர்வுகளில் கவனமாக இருந்தவன், இறுதியாக அவள் கண்களில்

அலைப்புறுதலைப் பார்த்தவன், தன்னையே மனதுக்குள் குட்டிக் கொண்டான்.

“இப்போ எதுக்கு என்னைக் கூப்ட்ட..., அதைச் சொல்லு...”, கொஞ்சம் தணித்தான்.

“இல்ல..., இங்கேயே அடைந்து கிடக்க ஒரு மாதிரி இருக்கு, அதான்..., கொஞ்சம் அப்படியே காட்டுக்குள் ஒரு வாக் போகலாமான்னு கேக்க வந்தேன்...”, அவள் சொல்லவே, அவன் கண்களில் அப்படி ஒரு ஒளி.

அதைப் பார்த்தவளுக்கு..., தனது பசி இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்து கொண்டது. அவனுக்கு இடையூறாக தான் இருக்கக் கூடாது என்று தான் முடிவெடுத்தது சரிதான், என அவளை எண்ணவும் வைத்தது.

“ஹேய் தந்தி..., நிஜமாத்தான் சொல்லுறியா...? ஓகே லெட்ஸ் கோ...”, சில அத்தியாவசிய பொருட்கள், முதலுதவி பெட்டி, லைட்டர், ஒரு சிறிய பாத்திரம், இவைகளுடன்  உடனே கிளம்பிவிட்டான். டெண்ட்டை மடக்கி மரத்தில் கட்டிவிட்டே சென்றான்.

“ஒரு நிமிஷம்...., துணியெல்லாம் காயப்போட்டிருந்தேன்..., அது என்னவாச்சுன்னு பாத்துட்டு போய்டலாம்...”, அவள் வெளியே போகலாம் என்று சொன்னதில் குஷியானவன், அவளது பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்கவில்லை.

உடையையும் எடுத்து வைத்தவர்கள் கிளம்பினார்கள். நளன் கிளைகளை ஒடித்தவாறே முன்னே செல்ல, முதல் முறையாக வரும் காடு என்பதால், பார்வையை சுழற்றியவாறே, அவன் முதுகில் சற்று ஒளிந்தவாறே பின் தொடர்ந்தாள்.

அந்த உச்சி பொழுதில் கூட சூரியன் தேகத்தை தொடவில்லை. காட்டின் அடர்த்தி பீதியைக் கிளப்பியது என்னவோ உண்மை. ‘ஏதாவது விலங்கு வந்துடுமோ’..., அவனிடம் கேட்கவும் பயமாகத்தான் இருந்தது.

அவனோ..., போகும் வழியில் புகைப்படம் எடுப்பதற்காக, கண்களை கூர்மையாக்கி தேடிக் கொண்டே வந்தவன், “ஸ்...ஆ...”, என்ற அவளது சன்னமான முனகலில் கலைந்தான்.

“ம்ச்.., என்ன...?”, வேலையில் ஏற்படும் இடையூறு அவனை அப்படி கேட்க வைத்தது.

‘ஒன்றுமில்லை..’, என்பதுபோல் தலையை அவள் வேகமாக அசைக்க..., அப்படியே நின்றுவிட்டிருந்தான் அவன்.

சொல்லாமல் அவன் விடப்போவதில்லை என்பதை உணர்ந்தவள், “கால்ல ஏதோ குத்திடுச்சு அதான்...”, “ஓ..., ஷிட்...”, காட்டுக்குள் ஷூ இல்லாமல்..., ஆண்டவா..., என்னை ஏன் இப்படி சோதிக்கிற...”, புலம்பியவன்,

“அதான் உனக்குத் தேவையானதை என்னோட திங்க்ஸ்ஸில் இருந்து எடுத்துக்கச் சொன்னேனே...., தந்தி..., நீ உன் மனசுக்குள் என்னதான் நினைச்சுட்டு இருக்க...? மருந்து கேக்க மாட்டேங்குற..., மருந்து போட்டுக்கவும் மாட்டேங்குற...,

“சாப்பாடு எடுத்து சாப்பிட மாட்டேங்குற..., ட்ரெஸ் எடுத்து போட்டுக்க மாட்டேங்குற..., ப்ளீஸ் தந்தி புரிஞ்சுக்க..., எனக்கு என்னையவே கவனிச்சுக்க தெரியாது. அப்படி இருக்கும்போது..., நான் எப்படி உன்னை கவனிப்பேன்...?

“தயவு செய்து என்னை டென்ஷன் பண்ணாதே. இன்னொரு முறை இதையே ரிப்பீட் செய்த..., உன்னை இங்கேயே இப்படியே விட்டுட்டு போகக் கூட நான் தயங்கவே மாட்டேன்....”, கோபமாகவும்..., கொஞ்சம் தவிப்பும் கலந்து உரைத்தவனது குரலில், இறுதியில் கடும் கோபமே எஞ்சி இருந்தது.

வேகமாக தன் காலில் இருந்து ஷூவை கழட்டியவன், “இப்போதைக்கு இதைப் போட்டுக்கோ..., நான் மரத்தின் உச்சியில் ஏறி, அங்கே இருக்கும் அரிய பறவைகளை படம் பிடிக்கிறேன். எப்படியும், வர கொஞ்ச நேரமாகும், சோ..., நீ

கீழே கவனமா இரு. இல்லையா..., நீயும் ஒரு மரத்தில் ஏறிக்கோ...", சொன்னவன் மரத்தில் ஏறப் போனான்.

"நளன்..., கொஞ்சம் உங்க பேகை என்கிட்டேயே தந்துட்டு போறீங்களா...?", அவள் தன் பெயரை வெகு இயல்பாக கூறுவதைப் பார்த்தவாறே, மறுபேச்சின்றி அதை அவளிடம் கொடுத்தவன், பேகில் இருந்து கத்தியை எடுத்தவன், தான் ஏறும் மரத்தில் அடையாளமிட்டான்.

"இது நீ காட்டுக்குள் மிஸ் ஆகிடாம இருக்கத்தான். நான் இந்த மரத்தில் தான் இருப்பேன். நீ இந்த சரவுண்டிங்கை விட்டு வெளியே போய்டாதே...", சொன்னவன், வேகமாக மரத்தில் ஏறி மறைந்தான்.

வேகமாக அந்த பெரிய ஷூவை மாட்டிக் கொண்டவள், ஒரு பெருமூச்சை வெளியேற்றியவளுக்கு..., பசி அப்பொழுதுதான் தெரிந்தது. பையைக் குடைய, அதற்குள் இருந்த ரஸ்க் அவளைப் பார்த்து சிரிக்க, படக்கென பையை மூடினாள்.

வழியில் பார்த்த சில கிழங்குகள் நினைவிற்கு வரவே, நளன் அமர்ந்திருந்த மரத்துக்கு சில அடி தூரத்தில் சுள்ளிகளைப் பொறுக்கி, நெருப்பு பற்ற வைத்து, தண்ணீரை கொதிக்க வைத்தவள், தனக்கு தெரிந்த துளசி, சில மூலிகைச் செடிகளைப் பறித்து, அவனுக்கு கஷாயம் வைத்தாள்.

அந்த நெருப்பில், கிழங்குகளையும் சுட்டவள், இந்த நான்கு நாட்களில் முதல் முறையாக, ரசித்து சாப்பிட்டாள். அவனுக்காக வைத்த கஷாயத்தில் சிறிதை தானும் குடித்தவள், நெருப்பின் அருகில் அமர்ந்துகொண்டாள்.

காயமும் காலையில் இருந்த அளவு வலிக்கவில்லை, இருந்தாலும் தனது இருப்பை உணர்த்திக் கொண்டே இருந்தது. நளன் இருந்த மரத்துக்கு அருகில் சென்று பார்ப்பதும், பின்னர் திரும்பி வருவதுமாக உலாத்திக் கொண்டே இருந்தாள்.

ஒரே இடத்தில் இருக்கவும் பயமாக இருந்தது. எந்த நேரம், எந்த மிருகம் வந்து தாக்குமோ என்ற பயம் அவளை ஒரு இடத்த்திலும் அமர விடவும் இல்லை.

காய்ச்சல் மறுபடியும் வருவதுபோல் இருக்கவே, சிறிது நேரம் கழித்து, அவனது முதலுதவி பெட்டியில் இருந்து மாத்திரையை எடுத்து போட்டுக் கொண்டாள்.

நளன் வரும் அறிகுறியே இல்லை. ‘எப்படித்தான் இவ்வளவு பொறுமையா இருக்கானோ...?’, அவனது இயல்புக்கும், அவனது ரசனைக்கும் இருக்கும் வேறுபாட்டை எண்ணி சிரித்துக் கொண்டாள்.

டெண்டுக்கு போகலாம் என்றாலோ..., பயமாக இருந்தது. ஏற்கனவே தாங்கள் வரும் வழி முழுவதும், மரக்கிளைகளை ஒடித்து விட்டவாறே வந்ததால்..., கண்டிப்பாக அங்கே திரும்பிச் சென்றுவிட முடியும். ஆனால்..., வழியில் ஏதாவது ஆபத்து வந்துவிடுமோ என்று பயந்து, அந்த எண்ணத்தையும் கைவிட்டாள்.

இறுதியாக...., மாலை மங்கும் வேளையில்..., மரத்தில் இருந்து இறங்கியவன், அவனது தொப்பியில் இருந்து சில முட்டைகளை அவள் முன் நீட்டினான்.

“பறவை முட்டை, நான் நாலு முட்டை குடிச்சுட்டேன். இதெல்லாம் உனக்குத்தான்...”, சொன்னவன் அவள் கையில் அவற்றை திணித்தான்.

அப்பொழுதுதான் அவள் கையில் இருந்த பாத்திரத்தைப் பார்த்தவன், “என்ன இதெல்லாம்...? ஏதோ கிழங்கு மாதிரி இருக்கு”, கேட்டவன் முன்னால் நடந்தான்.

அவன் பின்னால் நடந்தவள், “ஆமா..., உங்களுக்குத்தான்...”, அவனிடம் கொடுத்தாள்.

“சீ..., சீ..., நான் இதையெல்லாம் சாப்பிடவே மாட்டேன். என்ன கருமமோ இது...”, முகத்தை சுளித்தவன், விலகி நடந்தான்.

“உங்களோட அந்த வரட்டிக்கு, இது எவ்வளவோ பரவாயில்லை. ‘கழுதைக்குத் தெரியுமா கற்ப்பூர வாசனை’ என்று சொல்வது சரியாத்தான் இருக்கு. உங்களுக்கு வேண்டாம்ன்னா போங்க..., நான் ராத்திரிக்கு சாப்ட்டுக்கறேன். அப்போ இந்த கஷாயமும் வேண்டாமா...?”, அவனிடம் கேட்க,

“நேத்து நீ குடுத்த சுடுதண்ணியே எனக்கு கஷாயம் மாதிரிதான் இருந்தது. இதில் நிஜமாவே கஷாயமா..., இதையும் நீயே குடி..., என்னை ஆளை விடு”, அவளிடமிருந்து பேகை வாங்கும் எண்ணமே இல்லாமல் நடந்தான்.

“குடிச்சதும் பிறகு காஃப் கம்மியாச்சா இல்லையா....?”, இதற்கு அவன் பதில் சொல்லவில்லை. இப்பொழுது இருமல் அதிகமாகத்தான் இருந்தது. அதையும் அவள் கவனிக்கவே செய்தாள்.

‘இவ்வளவு காஃப் இருக்கு, ஆனாலும் வீம்பு....’,

அவனைப் பற்றி தெரிந்ததால் அவளும் அதை பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவனோ..., கேமராவிலேயே விழியைப் பதித்திருந்தவன், சுற்றிலும் பார்வையை செலுத்தவும் மறக்கவில்லை.

‘இதெல்லாம் நல்லாத்தான் செய்யிறான். ஆனா..., அக்கறை என்றால் கிலோ என்ன விலைன்னு கேப்பான்..., இவனோட அம்மா அப்பா இப்படியா இவனை வளர்ப்பாங்க...!!’, அவனைப் பெற்றவர்களையும் சாடினாள்.

டெண்ட் இருக்கும் இடத்துக்குப் போனவன், முதல் வேலையாக அனைத்தையும் செட் செய்தான். அவளோ நெருப்பு பற்ற வைக்க, அவளைப் பார்த்தவாறு எதிரில் அமர்ந்து கொண்டான்.

“தந்தி..., உனக்கு போட்டோ பாக்க புடிக்குமா...?”, அவன் திடீரென கேட்கவே, “டிஸ்க்கவரி சேனல் விரும்பி பார்ப்பேன்..., சோ புடிக்கும்னுதான் நினைக்கிறேன்...”,

‘இதென்ன பதில்’ என அவன் குழம்பி பார்க்க, “புடிக்கும் காட்டுங்க...”, அவன் குழப்பத்தை தீர்த்து வைத்தாள்.

வெகு இயல்பாக அவளை நெருங்கி அமர, அவனது செய்கையே, அவனுக்கு பெண்கள் புதியவர்கள் அல்ல என்ற எண்ணத்தை அவளுக்கு கொடுத்தது. இந்த எண்ணம் ஒரு ஓரத்தில் வலிக்கவும் செய்தது.

அவன் கேமராவில் ஒவ்வொரு புகைப்படமாக ஓட விட, அவை அனைத்தையும் பார்வையிட்டவள், “வாவ்..., ஃபென்டாஸ்டிக்..., ஒவ்வொரு ஆங்கிளும் சூப்பரா இருக்கு. நீங்க போட்டோ எடுப்பது உங்க ஹாபின்னு சொன்னதும், ஏதோ சுமாரா எடுப்பீங்கன்னு நினைத்தேன். ஆனா நிஜமாவே ரொம்ப நல்லா இருக்கு.

“சில போட்டோஸை லேமினேட் செய்து உங்க ஆபீஸ்ல பெருசா மாட்டினால் அட்டகாசமா இருக்கும்...”, அவள் பாராட்டில் நிஜமாகவே பூரித்து போனான்.

இதுவரை அவனது புகைப்படங்களை எத்தனையோ பேர் பாராட்டி இருக்கிறார்கள், அவையெல்லாம் மகிழ்ச்சியை கொடுத்தாலும், சித்தி, தந்தை எனதனக்கு நெருக்கமான உறவுகள், அதை கண்டுகொள்ளாததில் மிகுந்த மனவருத்தம் அவனுக்கு உண்டு.

ஆனால் இன்றோடு அது முடிந்து விட்டதாக அவனுக்குத் தோன்றியது. ‘இந்த காக்காவையும் குருவியையும் படம் பிடிக்க, காட்டுக்கு போறதெல்லாம் ஒரு பொழப்பா....’, தனக்காக, தன் வாழ்க்கைத் துணைவியாக வரவேண்டும் என்று பெரியவர்கள் முடிவெடுத்திருக்கும் நித்திலா பேசிய பேச்சு அசந்தர்ப்பமாக காதில் ஒலிக்க, தன் நெஞ்சுக்கு நெருக்கமாக அமர்ந்து கேமராவைப் பார்த்துக் கொண்டிருந்த தமயந்தியின் முதுகை பார்வையால் வெறித்தான்.

தன் பேச்சுக்கு அவனிடம் பதில் இல்லாமல் போகவே..., “நளன்..., நான் சொல்லிட்டே இருக்கேன்....”, அவனைத் திரும்பி பார்த்தவள், அவன் பார்வையில், அதில் இருந்த

பாவனையில் சிக்கி அவன் கண்களிலிருந்து பார்வையை மீட்டுக் கொள்ள முடியாமல், சொக்கிப் போனாள்.

இரவின் தனிமையும் அமைதியும், அவர்களை கலைக்க முனையவே இல்லை.

# பகுதி – 7

“ஹப்பா...., ஒரு வழியா எல்லாத்தையும் பேக் பண்ணி முடிச்சுட்டேன். கிளம்பலாம்...?”, கிட்டத்தட்ட அவன் உயரத்தில் பாதியளவு உயரம் இருந்த பையை அனாயாசமாக முதுகில் தூக்கிப் போட்டவன், தன் கேமராவை கழுத்தில் மாட்டிக் கொண்டு, தலையில் வைத்த தொப்பியோடு கிளம்பி முன்னால் நடக்க, அவனைப் பின் தொடர்ந்தாள் தமயந்தி.

அவளது இடது தோளிலும் ஒரு சிறு பை தொங்கிக் கொண்டிருந்தது. காட்டை விட்டு கிளம்புகிறோம் என்பதில் சந்தோஷமாக இருந்தாலும், ஒரு வாரத்துக்கும் மேலாக பழகிய இடத்தை விட்டுச் செல்வது ஒரு பக்கமென்றால், தன்னைக் காணாமல் தந்தை எவ்வளவு தவித்துப் போனாரோ என்பதை எண்ணும்பொழுது, தவிப்பாகவும் இருந்தது.

தாய் போன பிறகு, இந்த ஆறு வருடங்களாக, தாய்க்கு தாயாக இருந்து தந்தையை இவள்தான் பார்த்துக் கொண்டாள். அவளுக்கு இருக்கும் ஒரே ஆதரவும் அவர்தான். அப்படியிருக்கையில், தான் இல்லாமல் அவர் நிச்சயம் தவித்துப் போயிருப்பார். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் அவரை அடைய வேண்டும், இதுதான் அவளது எண்ணமாக இருந்தது.

“என்ன யோசனை எல்லாம் பலம்மா இருக்கு..”, அவள் யோசனையைக் கலைத்தான்.

அவன் கேள்விக்கு மௌனத்தையே பதிலாக்கியவள், அமைதியாகவே நடந்தாள். இவ்வளவு நாளில்...., அவனைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருந்ததால், இப்பொழுது தான்

தன் தந்தையைப் பற்றி கூறினாலும், "இந்நேரம் அவர் அவருக்குத் துணையா யாரையாவது தேடிட்டு இருப்பார். நீ இல்லன்னா அப்படியே பெருசா எதுவும் ஆயிடும்னு ஃபீல் எல்லாம் பண்ணாதே...", அவள் உணர்வை புரிந்து கொள்ளாமல் தான் பேசுவான் என்று அவளுக்குத் தெரியும்.

"ஓ..., அம்மையார் வீட்டை பத்தி நினைச்சுட்டு இருக்கீங்களோ..., அப்போ நடக்கட்டும்...", காலை எட்டிப் போட்டு நடந்தான்.

சிறிது தூரம் நடந்தவன், "இப்படி நடந்தால் பத்து நாளில் போக வேண்டிய தூரத்தை...., ஒரு மாசமா நடக்க வேண்டி இருக்கும். கொஞ்சம் வேகமா நடக்குறியா...?", அவள் அமைதியில் எரிச்சலுற்றவன், சிடுசிடுத்தான்.

தன் அமைதி அவனை பாதிக்கிறது என்பதை உணர்ந்த தமயந்தி, "இங்கே எல்லாம் அனிமல்ஸ் எதுவும் கிடையாதா...?", தன் வாய் திறந்தாள்.

"காட்டுக்குள் இருந்துட்டு இங்கே எல்லாம் மிருகம் எதுவும் கிடையாதான்னு கேக்குறியே..., உனக்கே இது நியாயமா இருக்கா...? எல்லா இடத்திலும் அனிமல்ஸ் இருக்கத்தான் செய்யும். ஆனா அதுங்களுக்கு நம்மளை விட மோப்ப சக்தியும், உள்ளுணர்வும் அதிகம்.

"மனித நடமாட்டம் இருக்கு என்று தெரிந்தாலே வேகமா அந்த இடத்தை விட்டு விலகி போய்டும். ஆனா..., குரங்கு, கரடி இருந்தால் மட்டும், நம்மளைத் தாக்கி, நம்மகிட்டே இருக்கும் சாப்பாட்டை புடுங்கிக்க பாக்கும்.

"அப்படி அந்த அனிமல்ஸ் நம்மைத் தாக்கினால்..., நம்ம கிட்டே இருக்கும் ஏதோ ஒரு சாப்பாட்டை அதுங்க கிட்டே தூக்கி போட்டுட்டு ஓடியே போய்டணும், அதை விட்டு குடுக்க மாட்டேன்னு பிடிவாதம் பிடித்தால், நம்மளை தாக்க ஆரம்பிச்சுடும்.

"ஒற்றை யானை பார்த்தால் ரொம்ப டேஞ்சர்...., அப்போ..., நம்மளால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு வேகமா..., அந்த

இடத்தில் இருந்து விலகிடணும். இந்த காட்டில் புலி ரொம்பவே அதிகம். பகல் நேரத்தில் மான் கூட்டம், காட்டெருமை கூட்டம்..., இவை எல்லாம் பார்த்தால், கொஞ்சம் கவனமா இருக்கணும்.

“ஏன்னா..., புலி அதுங்களைவேட்டையாட எங்கேயாவது பதுங்கி இருக்கலாம். மலைப்பாம்பு இங்கே ரொம்பவே அதிகம். அதுக்கு விஷம் கிடையாது. ஆனா நம்மளை நெரித்து கொன்னுடும்...”, அவன் விளக்கிக் கொண்டே சென்றான்.

அவன் சொல்லச் சொல்ல, உள்ளுக்குள் கலவரமாக இருந்தாலும், அவன் உடனிருப்பதால்..., கொஞ்சம் தைரியமாகவே நடந்தாள். காலுக்குப் பத்தாத அவனது (எக்ஸ்ட்ரா)ஷூவை போட்டுக்கொண்டு நடக்க கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருந்தது.

அதை அவனிடம் சொன்னால்..., அதற்கும் எதையாவது சொல்வான் என்பதால், அமைதியாக அவனோடு நடந்தாள். மதிய வெயில் உச்சிக்கு ஏறியது. தமயந்தியின் கால்கள் ஓய்வுக்காக கெஞ்சியது. தோளில் இருந்த சுமை, முதலில் சுலபமாக இருக்க, பிறகோ கனக்கத் துவங்கி இருந்தது.

அதை தோள் மாற்றவும் முடியவில்லை. வலப்பக்கம் இருந்த தையல் இன்னும் பிரிக்கப்படவும் இல்லை. ஆனால் காயம் சற்று ஆறி விட்டதுதான். இப்பொழுது கொஞ்சம் அரிக்கவும் துவங்கிவிட்டது. இனிமேல் அந்த தையலை அகற்றினால்தான் நன்றாக இருக்கும் என்பதுபோல் இருந்தது.

அதை அவளால் தனியாக அகற்ற வேறு முடியாது. இந்த மூன்று நாட்களாக அவன் காயத்தைப் பற்றி கேட்பதை மறந்து விட்டிருந்தான்.

அவனுக்கு நினைவூட்டி, அதை பிரிக்கச் சொல்லவும் தயக்கம் அவளைத் தடுத்தது. அவனிடம் சொன்னால் நொடியில் அதை அகற்றிவிடுவான்தான். ஆனால்..., முதல்நாள், இரண்டாம் நாள்போல், அவனது நெருக்கத்தை,

சாதாரணமாக எடுக்க முடியாமல் அவள்தான் மனதுக்குள் தடுமாறிக் கொண்டிருந்தாள்.

காயம் பட்டிருக்கும் இடம் வேறு அவளை மிகுந்த சங்கடப்படுத்தியது. நேரமாக ஆக..., எங்கே மயக்கம் போட்டு விழுந்து விடுவோமோ என்று அஞ்சினாள்.

“நளா..., ப்ளீஸ்...., இதுக்குமேல் என்னால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. கொஞ்ச நேரம் உக்காந்துட்டு....”, அவன் பார்வையில்..., தான் சொல்ல வந்ததை அப்படியே நிறுத்தினாள்.

“என்ன விளையாடுறியா....? இன்னும் ஒரு த்ரீ ஹவர்ஸ் நடந்துட்டு, நைட் தங்க ஏத்த இடமா முடிவு பண்ணிட்டு ஒரேடியா ரெஸ்ட் எடுக்கலாம். அதை விட்டு இப்போ ரெஸ்ட் எடுத்தால்..., மறுபடியும் ஒன் ஹவர்ல இருட்டிடும், நாம டார்கெட்டை நெருங்கவே முடியாது...”, காட்டுக்குப் பழகிய அவன் உடலின் வலிமையில் அவன் பேச, கொடியிடையாளோ துவண்டு போனாள்.

“ம்...”, அவனிடம் மறுத்து சொல்ல முடியாத நிலையில், உடலும் ஒத்துழைக்க மறுக்கவே, அடுத்த அடியை எடுத்து வைத்தவளின் கண்கள் கலங்கியது.

அவளது கண்களில் கண்ணீரைக் கண்டவனால்..., மேலே முன்னேற முடியவில்லை. முதுகில் இருந்த பையை தூக்கி வீசியவன், அதன்மீதே அமர்ந்துகொண்டான்.

அவன் கோபத்தைக் கண்டவள்..., “இல்ல..., நடக்கலாம்...”, திணறினாள்.

“ஒரு மயி...., முதல்ல உக்காந்துத் தொலை...”, உச்ச கோபத்தில் வார்த்தையை சிதறடிக்கப் போனவன், படக்கென கத்தரித்துவிட்டு, அவளிடம் எரிந்து விழுந்தான்.

அவளோ..., கண்களில் கண்ணீர் வழிய, சற்று தூரத்தில் அமர்ந்தவள், சருகுகளை கூட்டி, நெருப்பை பற்ற வைத்து, தண்ணீரை கொதிக்க வைத்து, துளசியையும், பச்சிலையையும் போட்டவள், அது கொதிக்கவே, வேறு

கப்பில் மாற்றிவிட்டு, சுடு தண்ணீர் வைத்து, இன்ஸ்டன்ட் மேகி தயாரித்து அவனுக்குக் கொண்டு சென்றாள்.

“இப்போ எதையும் திங்கிற மூடில் நான் இல்லை..., தயவு செய்து போய்டு”, அவள் முகத்தைப் பாராமல், பல்லைக் கடித்தவாறு எரிந்து விழுந்தான்.

அவன் பேச்சு மனதை வருத்தினாலும், ஸ்பூனால் மேகியைக் கிண்டி, அவன் வாயின் அருகில் கொண்டு செல்ல, கோபமாக நிமிர்ந்தவன், அவள் முகத்தைப் பார்க்கவே, அவள் விழிகளைச் சந்தித்தவனால், மறுத்து ஒரு வார்த்தை பேச முடியாமல், அவள் கையில் இருந்து மேகி கப்பை வாங்கிக் கொண்டான்.

நளனின் பலவீனத்தை நன்கு அறிந்திருந்த தமயந்தி, உள்ளுக்குள் எழுந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, “இதில் ஹாட் கஷாயம் இருக்கு, அதையும் குடிக்கிறீங்க...”, அங்கிருந்து அகன்றாள்.

‘முடியாது போடி....’, அவனுக்கும் கத்த ஆசைதான். ஆனால் தமயந்தியிடம் எப்பொழுதும் போல்..., தொடர்ந்து கோபத்தை காட்ட முடியாமல் அமைதியானான்.

# பகுதி – 8

நளன் தனக்குள் குமைந்து கொண்டிருந்தான். ஒரு பெண் தன்னை கட்டுப்படுத்துவதை அவன் விரும்பவில்லை. ‘அவளை எதிர்த்துக்கொண்டு செல்’ என மூளை கட்டளையிட்டாலும், மனமோ, அவள் பேச்சுக்கு கட்டுப்பட்டு, அவளை தாண்டிச் செல்ல விடாமல் தடுத்தது.

கடந்த நான்கு நாட்களை கண்களை மூடி அலசினான். அன்று இரவில், தமயந்தியின் பேச்சில், தன்னை மீறி அவளை ரசித்ததை இப்பொழுது எண்ணி, வியந்தான்.

பள்ளி, கல்லூரி, இப்பொழுது அலுவலகம், அதைவிட, தன்மேல் விழுந்து பழகும் நித்திலா..., இவர்கள் யாரிடமும் சலனம் கொள்ளாத அவன் மனம், தமயந்தியிடம் சலனம்

கொள்வதைக் கண்டு இது நல்லதற்கா, கெட்டதற்கா என்று தெரியாமல் தடுமாறினான்.

‘உனக்கு என்னடா ஆச்சு நளா..’, தன்னைத் தானே கேட்டுக் கொண்டான்.

அவள் சொன்னாள் என்பதற்காக, அவள் வைத்துக் கொடுத்த கஷாயத்தை குடித்தது முதல், சுடு தண்ணீரே பிடிக்காத அவன், நான்கு நாட்களாக, சுடு தண்ணீர் மட்டுமே குடிப்பதை, எந்த கணக்கில் சேர்க்கவென்று தெரியாமல் தடுமாறினான்.

அவனுக்கு இருந்த சளித்தொல்லை, முக்கால் வாசி குறைந்திருந்தது. குளிக்கவே தயங்கும் அவன், நான்கு நாட்களாக தொடர்ந்து குளிக்கும் விந்தை அவனுக்குப் புரியவே இல்லை.

‘இப்போ குளிக்கறீங்க அவ்வளவுதான்...”, அழுத்தமாக அவள் சொல்லும்பொழுது, தாயின் கண்டிப்பு இப்படித்தான் இருக்குமோ என்று ஒரு நிமிடம் எண்ணினான்.

தாயின் பாசத்தை மட்டுமல்ல, கண்டிப்பையும் அவன் உணர்ந்தது கிடையாது. அப்படி இருக்கையில், முதல் முறையாக அதை உணர்ந்ததாலேயே அதைச் செய்தோம் என தனக்குத்தானே சமாதானம் செய்து கொண்டான்.

அவள் துவைத்துக் கொடுத்த ஆடையை அணிந்தபொழுது, அதில் இருந்து வந்த வாசனை, அவள் வாசனையை நினைவு படுத்தியதை என்ன செய்வது? கன்னத்தை தோளில் தேய்த்தவாறு, அந்த வாசனையை நன்கு நுகர்ந்தான்.

அது தனக்குப் பிடித்தாலும்...., “ஏய் என் சட்டையை என்ன செய்த...? என்னோட சட்டை மாதிரியே இல்லை....”, அவளிடம் கோபமாக உரைத்தான்.

“ஆமா..., அதில் இருந்த அழுக்கை எல்லாம் துவைச்சேன் இல்ல..., அப்போ அப்படித்தான் இருக்கும்...”, அவள் நொடித்தாள்.

அதை சாதாரணமாக எடுத்துக் கொள்ளாமல், “ஓ.., அப்போ நீ துவைச்ச துணி எனக்கு வேண்டாம் போ...”, வீம்புக்காக போட்ட சட்டையை அவன் கழட்டி வீச, அவள் அப்படியே அமைதியாகி விடுவாள் என்று அவன் எதிர்பார்க்க,

அவளோ..., “ம்ச்..., இப்போ எதுக்கு இப்படி கோபப் படுறீங்க? உங்களை எதிர்த்து பேசினால் பிடிக்காது, அவ்வளவு தானே. இனிமேல் பேசலை, சட்டையை போட்டுக்கோங்க...”, அவன் கழட்டி வீசிய சட்டையை அவள் எடுத்துக் கொடுத்தபொழுது, அவனுக்குள் ஏதோ ஒன்று தடம் மாறியது.

தானே சமைக்கப் பிடிக்காமல் போட்டு வைத்திருந்த பாக்கெட் உணவுகளை, ஒவ்வொன்றாக அவள் சமைத்துக் கொடுக்க, இப்படியே இங்கேயே இருந்துவிட மாட்டோமா என்று அவன் மனம் விரும்பியது என்னவோ உண்மை.

ஆனால் அந்த மாற்றத்தை அவன் ஒத்துக் கொள்ளத்தான் தயாராக இருக்கவில்லை. அவளிடம் அவனுக்கு மிகவும் பிடித்தது இரண்டு விஷயங்கள். ஒன்று, அவளது இடை வரை நீண்ட கூந்தல், இரண்டாவது அவளது காலில் இருந்த கொலுசு.

இடைவரை நீண்ட அவள் கூந்தலை இரவின் தனிமையில் காணும்பொழுது, அதில் முகம் புதைத்துக்கொள்ள எழும் வேகத்தை அடக்க, அவன் மிகுந்த சிரமப்பட்டான்.

“இப்போ எதுக்கு பேய் மாதிரி தலையை விரிச்சு போட்டுட்டு சுத்துற. அதை முதல்ல கட்டி வை. இல்ல..., சிசர் எடுத்து கட் பண்ணிடுவேன்”, தன் தடுமாற்றத்தை மறைக்க, அவளிடம் எரிந்து விழுந்தான்.

ஆனால்..., அவனது ஒற்றை சட்டைக்குள், தனது இளமையின் அழகுகள் அவன் பார்வையில் பட்டு, சலனத்தை விதித்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தில் கவனமாக செயல்படும் தமயந்தியை அவனது பேச்சு காயப்படுத்த, கண்ணீர் விடும் அவளைக் கண்டு, தன்னைத் தானே நொந்து கொண்டான்.

“ச்சீ..., பொண்ணா நீ..., பேய்...., ஆளும் மூஞ்சியும், மொகரையும்..., உன்னைப் பாத்தாலே எரிச்சலா இருக்கு... எப்போ பார்..., அழுதுட்டே..., உன்னைப் பார்த்தாலே எதுவும் விளங்காது....”, அவன் தன் மனதை மறைக்கப் போடும் வேஷம், அவளை மனதளவில் காயப்படுத்துவதை உணரவே இல்லை.

தமயந்தி அவன் பேச்சில் துவண்டாலும், தான் இருக்கும் நிலையில், அவன் தன்னை வெறுத்தால் பரவாயில்லை, வேறு எதுவும் தவறாக நேராமல் இருந்தாலே போதும் என எண்ணினாள்.

சில நேரங்களில், நொடியில் மின்னி மறையும் அவன் பார்வையின் பாவங்கள், தன் பிரம்மையோ என்ற விதத்தில் அவன் அதை மாற்றிக் கொண்டாலும், தன் பெண்மைக்கு எந்த ஆபத்தும் நேர்ந்துவிடக் கூடாது என்பதே அவளது பிரார்த்தனையாக இருந்தது.

ஒரு வழியாக அது முடிவிற்கு வர, ஒருநாள் புகைப்படம் எடுக்கச் சென்றிருக்கும் வேளையில், அவளது கால் கொலுசின் ஓசையில், அதன் தாளத்தில் அவள் லயித்திருக்க, அதே நேரம்..., அந்த ஓசையில், தான் புகைப்படம் எடுக்க விரும்பும் பறவைகள் கலைந்து ஓடவே, கடுப்பானான்.

“ஏய்..., கோயில் யானை மாதிரி எதுக்கு இப்போ நடக்குற...? முதல்ல அந்த சலங்கையை கழட்டு. பறவையெல்லாம் மிரண்டு போகுதுபார். சரியான பட்டிக்காடு...., என்னமோ ஆட்டக்காரி மாதிரி ஜல் ஜல்லுன்னு...”, அந்த நிமிடமே, தன் தந்தைக்குப் பிடித்த அவளது கால் கொலுசு, அவன் பொருட்களோடு முடங்கியது.

ஒரு பக்கம், அவனது கோபம் தனக்கு பாதுகாப்பு என்று எண்ணும் தமயந்தி, அவனுக்குத் தன்னை பிடிக்கவே இல்லையே என்று வருந்தவும் செய்தாள். அப்படியொன்றும் தான் அழகில் மட்டமில்லை என்பது அவளது எண்ணம். நிறம் கூட மங்கல் கிடையாது. சுருங்கும் மனதை எண்ணி கலங்கிப் போனாள்.

எங்கோ ஒரு மூலையில் தன் மனதில் அவன் நுழைந்துவிட்டான் என்பதை எண்ணி விதிர்த்துப் போனாள் தமயந்தி.

எதைக் கண்டு நான் மயங்கினேன்...? அவன் அப்படியொன்றும் பெர்சனாலிட்டி இல்லை, கடா தாடியும், முடியும், பாதி ஷேவ் செய்த முகமுமாக பார்க்கவே சகிக்க முடியாமல்தான் இருந்தான்.

தன்மேல் பெரிதாக அக்கறையும் காட்டவில்லை, ஆறுதலாக பேசவில்லை, துவண்டபொழுது தோள் கொடுக்கவில்லை. காயப்படுத்தும் அவன் வார்த்தைகள், அசட்டையான அவன் போக்கு, இதிலா மயங்கினேன்? தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள்.

இவை எல்லாவற்றையும் விட, தன் கற்புக்கு ஒரு சதவீதம் கூட களங்கம் நினைக்காத அந்த ஒற்றை விஷயம்தான், அவனது கண்ணியமான பார்வை, முகத்தைத் தாண்டாத அவன் விழிகள், தன் காயத்தை பரிசோதிக்கும் பொழுது கூட, தடுமாறாத அவனது மனம், அதில்தான் தான் வீழ்ந்துவிட்டோம் என்பது புரிந்துபோக, தனக்குள் மறுகினாள்.

எதிர்காலமே இல்லாத இந்த நேசம் என்னவாகும் என்பது அவளுக்குத் தெரியாமல், மனம் பாரமாக கனக்க அமைதியாக கால்களை கட்டிக் கொண்டு அமர்ந்திருந்தாள்.

## பகுதி – 9

தன் நினைவுகளில் இருந்து மீண்டு வெளியேறியவன், தனக்கு சற்று தூரத்தில், கால்களை கட்டிக்கொண்டு, அதில் முகம் புதைத்திருந்த அவளைப் பார்த்தவன், எழுந்து தன் பேகை தோளில் மாட்டியபடி அவளை நெருங்கினான்.

“கிளம்புற ஐடியா இல்லையா...? தூங்கிட்டியா என்ன...?”, அவன் குரலில் கலைந்தவள், பொருட்களை சேகரித்துக்

கொண்டு, நெருப்பை அணைத்துவிட்டு அங்கிருந்து நடந்தார்கள்.

இரண்டு மணிநேரப் பயணம்..., கொஞ்சம் உணவு உள்ளே சென்றிருந்ததால். தெம்பாகவே நடந்தாள். மாலை மங்கவே, "இந்த இடம் எனக்கு சரியா தோணலை. கரடியோட நடமாட்டம் இருக்கும்னு நினைக்கிறேன். இங்கே பார்..., அதோட சாணம் இங்கே இருக்கு பார்.

"இங்கே தரையில் டெண்ட் போட முடியாது. மரத்தில் ஏறி தொங்கத்தான் விடணும். தரையில் இருப்பது ஆபத்து. கொஞ்சம் தூரம் போகலாம்னா..., டக்குன்னு இருட்டிடும், பிறகு எதுவுமே செய்ய முடியாது...", மோவாயை நீவியவாறே குழப்பமாக அவளைப் பார்த்தான்.

இருக்கும் டெண்ட் தரையில் என்றால் இருவர் சுருக்கி படுத்துக் கொள்ளலாம். தொங்க விட்டால்..., ஒரு ஆள் மட்டுமே படுக்க முடியும். இருவரும் படுப்பது என்றால்..., ஒருவர் மீதுதான் மற்றவர் படுக்க முடியும்.

அவன் யோசனையைப் பார்த்தவள், "என்ன...?", அவள் கேட்கவே, இருக்கும் சூழலை உரைக்க, அவள் மனம் திடுமென அதிரத்தான் செய்தது. காட்டில் தனிமையில் படுக்க அவளுக்கு பயமாகத்தான் இருந்தது. அதற்காக, அவனோடு ஒரே டெண்டுக்குள் படுக்கவும் முடியாது. அவள் முகத்தில் பயத்தின் ரேகைகள் அப்பட்டமாக ஓடியது.

அதைப் பார்த்தவன், "ஓகே..., ஏதாவது செய்ய முடியுதான்னு பாக்குறேன்...", சொன்னவன், மரத்தில், ஊஞ்சல் அமைப்பில் கொடிகளை வைத்து பின்னியவன், தன் டெண்டையும் மரத்தில் கனமான கயிற்றில் கட்டி தொங்க விட்டான்.

அவன் அந்த வேலைகளில் ஈடுபட்டிருக்க, அவளோ, பௌடர் பாலை காய்ச்சி, வேறு இன்ஸ்டன்ட் உணவையும் தயாரித்து முடித்தாள். பழக்கமே இல்லாத வேலை, நளனை முழுதாக சோர்ந்து போக வைக்க, கொடிகளை பிணைத்து இழுத்து,

அவன் கரங்கள் இரண்டும் சிவந்து போனது. நீர்க் கொப்புளங்கள் எட்டிப் பார்த்தன.

தன் உள்ளங்கையில் உதட்டை குவித்து காற்றை ஊதியவன், கைகளை உதறிக் கொண்டான். கை விண் விண்ணென்று தெறித்தது. அவன் செய்கையில் தவித்தவள், அவன் முதலுதவிப் பெட்டியில் இருந்து களிம்பை எடுத்துவந்து அவன் கையில் தடவினாள்.

“ஹையோ...., கை இப்படி கொப்பளிச்சு இருக்கு. முடியலன்னா விட வேண்டியது தானே...”, அவனைக் கடிந்துகொண்டே மருந்தை தடவினாள்.

மறுக்காமல் அவள் செய்கையை ஏற்றவன், “ரொம்ப எரியுது...”, விளையாடும் பொழுது விழுந்து அடிபட்ட சிறுவனின் குரலாக அவன் குரல் ஒலிக்க, அவன் கரங்களை, தன் கன்னத்தோடு இணைத்துக் கொண்டாள்.

“சாரி...., எல்லாம் என்னால் தானே...”, கண் கலங்க, தவித்துப் போனாள்.

“இல்லன்னு சொல்ல மாட்டேன்...”, அவன் உரைக்க, அவள் இதழ்களில் புன்னகை எட்டிப் பார்த்தது. கண்கள் கலங்க, மெல்லிய புன்னகையை ஒட்டவைத்த அவள் முகம், கல்வெட்டாய் அவன் மனதுக்குள் பதிந்து போனது.

உணவை தானே அவனுக்கு ஸ்பூனால் ஊட்டி விட்டவள், “இப்போ எப்படி மரத்தில் ஏறி படுப்பீங்க...”, கவலையாகக் கேட்டாள்.

“இதெல்லாம் என்னை எதுவும் செய்யாது. முதல்ல நீ டெண்டுக்குப் போ”, ஏற்கனவே காட்டில், கொய்யாமரம், மாமரம், பலா மரங்களில் அவள் ஏறியதைப் பார்த்தவன் என்பதால் தயங்காமல் சொன்னான்.

அவனை விழி விரியப் பார்த்தவள், “நீங்க டெண்டில் படுத்துக்கோங்க..., நான் அந்த ஊஞ்சலுக்குப் போறேன்...”, சொன்னவள் வேகமாக ஏறி அவன் அமைத்த ஊஞ்சலில் அமர்ந்து கொண்டாள்.

அவள் பேச்சுக்கு மறுப்பு தெரிவிக்காமல், அவள் ஏற்கனவே நெருப்பில் பெரிய விறகுத் துண்டங்களை போட்டிருக்க, அதை சற்று நகர்த்தி போட்டவன், தன் டெண்டுக்குள் புகுந்து கொண்டான்.

சிறிது நேரம் வரை நெருப்பின் ஜுவாலை வெளிச்சத்தில் கொஞ்சம் தைரியமாக இருந்தவள், காட்டின் கும்மிருட்டு சூழ, கொஞ்சம் பயந்துதான் போனாள். ஒரு நேரம் காட்டின் அமைதி பயமுறுத்த, சில நேரம் சருகின் சலசலப்பு பீதியாக்கியது.

அவனிடம் எதையாவது பேசிக் கொண்டிருக்கலாம் என்றால்..., அவனோ, டென்ட்ஜிப்பை கூட மூடிக் கொண்டுவிட்டிருந்தான். டெண்டுக்குள் அவனும் தவித்துக் கொண்டுதான் இருந்தான்.

‘வெளியே என்ன செய்யிறாளோ...’, அவளோடான இத்தனை இரவுகளில், அவளை அவன் தனியாக விட்டதே கிடையாது. அவளை தன்னோடு அழைக்கவும் முடியாமல், தனியாக இருக்கவும் முடியாமல் தவித்தவன்,

‘அவளுக்கே தனியா இருக்க முடியும்போது உனக்கு என்ன நளா...?’, தனக்குத் தானே கேட்டுக் கொண்டவன், இமைகளை மூடிக் கொண்டான். கண்கள் கலங்க, அவன் டெண்டைப் பார்த்தவாறு, எப்பொழுது உறங்கிப் போனாள் என்றே தெரியவில்லை.

“நளா....”, நள்ளிரவில்..., காட்டின் அமைதியைக் கிழித்தவாறு அவன் செவிகளைத் தீண்டிய தமயந்தியின் குரலில், ஒரு நொடியில் டார்ச்சை உயிர்ப்பித்தவன், டெண்ட்டை திறந்துகொண்டு, உயரத்தில் இருந்து குதித்தே விட்டான்.

“தந்தி...., எங்கே இருக்க...? என்ன ஆச்சு...?”, அவளை விட அதிகமாகக் கத்தினான்.

அவன் குரல் முடியும் முன்பே, பாய்ந்து சென்று அவனை கட்டிக் கொண்டாள். அன்று ஒருநாள், குரங்குகளின் சேட்டையின் பொழுது, தன்னைச் சேர்ந்தவள்மேல்

உணர்ந்த அதே நடுக்கத்தை இப்பொழுதும் உணர்ந்தவன், அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

“என்ன…? என்ன ஆச்சு…?ஏதாவது அனிமல் வந்துடுச்சா…? இருட்டைக் கண்டு பயந்துட்டியா…? ஏதாவது கெட்ட கனவா…?”, அவளிடம் கேட்டுக் கொண்டே, டார்ச் வெளிச்சத்தை இருட்டில் பாய்ச்சினான்.

“பா…, பா…, பா…, பாம்பு…”, அலறியவளை என்ன சொல்லித் தேற்ற என்பது அவனுக்குத் தெரியவில்லை.

“பாம்பா…, எங்கே…?”, தாங்கள் நின்ற இடத்துக்கு சற்று தொலைவில் சருகு சலசலக்கும் ஓசையில் வெளிச்சத்தை அந்தப் பக்கம் பாய்ச்ச, ஒரு பாம்பின் வாலை அவனால் பார்க்க முடிந்தது.

உடல் மொத்தமும் நடுங்க, அவன் கழுத்தை கட்டிக்கொண்டு, அவனுக்குள் இன்னும் இன்னும் புதைய முயன்ற தமயந்தியை எப்படித் தேற்றவென்பது அவனுக்குச் சுத்தமாகப் புரியவே இல்லை.

“அது போய்டுச்சு…, இனிமேல் வராது…., காட்டில் இது சகஜம்…”, அவனது எந்த வார்த்தையும் அவள் செவிகளைத் தாண்டி செல்லவே இல்லை.

அன்று கோபப்பட்டு கத்தி அவளை அடக்க முயன்ற அவனால், இன்று அதைச் செய்ய முடியவில்லை.

“நளா…, என்னை தனியா விட்டு போய்டாதீங்க…, நளா ப்ளீஸ்…, எனக்கு பயம்மா இருக்கு. என்னை வீட்டுக்கு கூட்டி போய் விட்டுடுங்க….”, கதறினாள்.

அவள் முகத்தில் கொஞ்சம் தண்ணீர் தெளித்து, அவளுக்கு தண்ணீரை குடிக்கக் கொடுத்தாலே, கொஞ்சம் நிதானத்துக்கு வந்துவிடுவாள் என்பது அவனுக்கு உறைக்கவே இல்லை.

இப்பொழுது இருக்கும் அதிர்ச்சியை விட, பெரிதாக ஏதோ ஒன்று அவளைத் தாக்கினால் மட்டுமே அவளை கலைக்க முடியும் என்பது புரிய, அது என்னவென்று புரியாமல்

தடுமாறிப் போனான். இப்படித்தான் போனது அவனது யோசனை.

ஒரு பெண்ணுக்கு அதிர்ச்சி அளிக்கும் விஷயம் என்னவாக இருக்கும் என அவன் மூளை சிந்திக்க, யோசனை கிடைத்துவிட, அவள் முகத்தை தன் நெஞ்சில் இருந்து கட்டாயமாகப் பிரித்தவன், “தந்தி…”, அவளை அழுத்தமாக அழைத்தவன்,

கையில் இருந்த டார்ச்சின் ஒளியில் அவள் முகம் வியர்வையில் முத்து முத்தாக வியர்த்திருக்க, இமைகள் இறுக மூடி, இதழ் நடுங்க நின்ற அவள் தோற்றத்தை ஒரு நொடி பார்த்தவன், தன் இதழ்களை அழுத்தமாக அவள் இதழ்களோடு புதைத்துக் கொண்டான்.

முதலில் அதை உணராதவள், அவள் இதழ்கள், அவனுக்குள் முழுதாக சிக்கிக் கொண்டபொழுது, விழிகள் சாசர்போல் விரிய, உள்ளம் திக்கென அதிர, அவன் இதழ்முத்தம் தனக்குள் ஏற்படுத்தும் மாற்றங்களைத் தாங்க முடியாமல், அவன் கைகளுக்குள் தொய்ந்தாள்.

கண்கள் மயக்கத்துக்குச் செல்ல, கைகளை அவன் கழுத்தில் மாலையாகக் கோர்த்தவாறே, அவன்மேல் மயங்கிச் சாய்ந்தாள். அவள் மேனியின் அழுத்தம் தன்மேல் அதிகரிக்கும்பொழுதுதான் அவள் நிலையை உணர்ந்தவன், அவளை மரத்தில் சாய்த்து அமர வைத்தவன், வேகமாகச் சென்று தண்ணீரை எடுத்து வந்து அவள் முகத்தில் தெளித்தான்.

அவள் கண் விழித்ததும் கண்டது, தன்முன் கவலையாக இருந்த நளனின் முகத்தைத்தான். இரண்டு அதிர்ச்சிகளும் ஒன்று சேர, பிரம்மை பிடித்தாற்போல் அமர்ந்திருந்தாள்.

இருவருக்கும் தூக்கம் சுத்தமாகத் தொலைந்து போயிருந்தது. நெருப்பை பற்ற வைத்தவன், அவள் அருகில், மரத்தில் சாய்ந்தவாறு தானும் அமர்ந்துகொண்டான். இருவரும் ஒரு வார்த்தை

பேசிக்கொள்ளவில்லை, விளக்கங்களோ, கேள்விகளோ எதுவும் இருக்கவில்லை.

# பகுதி - 10

காலையில் கண்விழிக்கும்பொழுது, தன் முகம் மெத்தென தலையணையின் மீது இருக்கும் உணர்வில், இன்னும் அழுத்தமாக முகத்தைப் புதைக்க முயன்றான். இதுவரை தான் அறிந்தே இராத சுகம் அதில் இருப்பதை உணர்ந்தான்.

ஆனால்..., தனக்கு மிகவும் பழகிய அந்த வாசனை. ஆழமாக நுகர்ந்தவன், பிடிவாதமாக முகத்தைப் பதிக்க முயலவே, "ம்ச்..., படுத்தால் ஒழுங்கா படுக்க மாட்டீங்களா...?", அவன் தலையை, தன் வயிற்றின்மேல் புதைக்க விடாமல், அழுத்தமாக பிடித்து தடுத்தாள்.

அவள் குரலில் கண் விழித்தவன், அவள் விழிகளில் இருந்த கோபத்தைக் கண்டுகொள்ளாமல், "அம்மா மடி இப்படித்தான் இருக்குமா தந்தி...? அம்மா மடியில் தலை வைத்தால் சுகமா தூக்கம் வரும்னு ரகு சொல்வானே..., அது உண்மைதானா...?

"அட் திஸ் மொமென்ட்..., ஐ ரியல்லி மிஸ் மை மாம்....", அவன் வார்த்தைகள் அவளுக்குள் பிரளயத்தையே உருவாக்கி, அவளுக்குள் இருக்கும் தாய்மையை தட்டி எழுப்ப, இப்பொழுது அவன் தலையை அழுத்தமாக தன் வயிற்றோடு பதித்துக் கொண்டாள்.

கால்களைக் குறுக்கி, கைகளால் அவன் தலை தாங்கி, அவனை கருவறைக்குள் அடக்கிக் கொள்பவளைப் போல், இறுக்கிக் கொண்டவளின் தேகம் அழுகையில் குலுங்கியது.

அவனோ..., அதை எல்லாம் உணராமல், அவளது தாய்மையை உணரும் சேயாக மட்டுமே அந்த நேரம் இருந்தான். 'ஓர் ஆணுக்குள் இருக்கும் குழந்தையையும், ஒரு பெண்ணுக்குள் இருக்கும் தாய்மையையும் யார்

உணர்கிறார்களோ..., அவர்களே சிறந்த காதலர்கள்', இந்த கவிதையின் வரிகள் உண்மை என்றால்..., இந்த உலகத்தில் சிறந்த காதலர்கள் அந்த நொடியில் இவர்கள் தான்.

தனக்கு மூச்சு முட்டியபொழுது கூட, 'இந்த நொடி மரணம் வந்து தழுவினால் அது கூட சுகமே' என்று தன் மூச்சடக்கிக் காத்திருந்தான் நளன். எவ்வளவு நேரம் அப்படியே இருந்தார்களோ..., யானையின் பிளிறலில் அவள் மடியில் இருந்து எழுந்தவன், கண்களை சுற்றிலும் ஓட விட்டான்.

தமயந்திதான் அந்த மோன நிலையில் இருந்து வெளியே வர முடியாமல் தவித்துப் போனாள். அவனோ..., "தந்தி..., அநேகமா ஒத்தை யானை வருதுன்னு நினைக்கிறேன். அதுதான் தன்னோட கூட்டத்தை கண்டு பிடிக்க இப்படி பிளிரும்...., நாம இங்கே இருக்குறது ஆபத்து, முதல்ல கிளம்பணும்...", சொன்னவன், டெண்ட்டை அவிழ்த்து, கட்டிக் கொண்டு, பொருட்கள் அடங்கிய பையில் திணித்தவன், முதுகில் பையை மாட்டிக் கொண்டு, அங்கிருந்து ஓட்டமாக விரைந்தான்.

அவன் பின்னால்ஓடியவளுக்கோ..., இப்படியே காலம் முழுவதும் அவன் பின்னால் போக மாட்டோமா என்று இருந்தது. ஒரு சிறிய ஓடையைப் பார்த்தவர்கள், காலைக் கடன்களை முடித்தார்கள்.

அவன் சற்று விலகிச் செல்லவே, உடல் அலுப்பு தீர, குளிக்கலாம் என, ஓடையிலேயே அவள் குளிக்க, "தந்தி..., தண்ணியைப் பார்த்தால் உடனே குளிச்சே ஆகணுமா...?", அவன் குரலில் விதிர்த்துப் போனாள்.

உடலோடு ஒட்டிய ஆடை, அவன் அங்கே அப்பொழுது வருவான் என்று எதிர்பாராததால் வந்த திகைப்பு என கலவையாக இருந்தவள், அவன் கேட்டு முடிக்கும் முன்னர், அவன் தலையிலும் தண்ணீரை ஊற்றி இருந்தாள்.

அவனுமே அந்த நேரம் அவள் இருந்த கோலத்தில் சற்று தடுமாறப் பார்த்தான் என்பதுதான் சரியாக இருக்கும்.

அவள் தண்ணீர் ஊற்றவே, அதையே சாக்காகக் கொண்டவன்,

“ஏய்..., லூசா நீ...? இப்படி தண்ணி மாத்தி மாத்தி குளிச்சால் என்னத்துக்கு ஆகுறது..., ஸ்..., இந்த கை வேற எரியுது. கொப்பளம் வேற ஒண்ணு ரெண்டு வெடிச்சுடுச்சு...”, வலியில் முகம் சுளித்தவன், வெடிக்கவே, அவனைக் கண்டுகொள்ளாமல், பின்னர்தான் நினைவு வந்தவளாக, அவர்கள் பொருள் இருக்கும் இடத்துக்கு ஓடிப் போனவள், சிறிது நேரம் தேடி, தான் தேடியது கிடைக்கவே, அதை எடுத்துக் கொண்டு அவன் அருகில் வந்தாள்.

அவள் கையில் இருந்ததைப் பார்த்தவன், “இதை எதுக்கு எடுத்துட்டு வந்த?”, புரியாமல் கேட்டான்.

அவளோ..., “ம்..., இந்த சாமிக்கு மொட்டை போடலாம்னுதான்...”, சொன்னவள், அவன் எழுந்து செல்லும் முன்பே, தன் இடக் கையால் அவன் முடியை கொத்தாகப் பற்றியவள், மெஷினை அவன் தலையில் ஓட விட்டாள்.

அவள் பிடித்த வலியில் அடங்கி அப்படியே அமர்ந்துவிட்டான். அடுத்த அரைமணி நேரத்தில், அவனை ஆதிவாசி தோற்றத்திலிருந்து ஹேண்ட்சம் மேனாக மாற்றி இருந்தாள். தன் மொழுமொழு கன்னத்தையும், கட்டை முடியையும் கைகளால் வருடியவன்,

“ஹேய் தந்தி..., கைவசம் செம தொழில் வச்சிருக்க போ...”, அவளை மெச்சியவன், மறுக்காமல் குளித்துவிட்டு விலகிச் சென்றான்.

அவன் செல்லவே, தானும் குளித்தவள் உடை மாற்றிவிட்டு, அந்த ஓடையில் இருந்த சிப்பி மீன்களைப் பார்த்தவள், வெந்நீரில் அவற்றை வேக வைத்து, அவனுக்குக் கொடுத்தாள்.

“தந்தி..., கண்டதையும் சாப்பிடாதே. வயித்துக்கு ஒத்துக்கலன்னா கஷ்டமாயிடும்...”, அதை வாங்காமல் அவளை எச்சரித்தான்.

“இது சிப்பி மீன். ரொம்ப ஹெல்திஃபுட் தான். என்னை நம்பி தைரியமா சாப்பிடலாம்”, அவள் உரைக்க, மறு பேச்சின்றி உண்டவன், “வாவ்..., செம டேஸ்ட்டி..., இதிலேயே உப்பும் இருக்கு...”, திருப்தியாகவே உண்டான்.

தமயந்திக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. தன் காதல் நிறைவேறுமா என்பது தெரியாது. ஆனால் இனிமேல் அவனோடு இருக்கப் போகும் இந்த நாட்களை, மனதுக்கு திருப்தியாக கழிக்க முடிவெடுத்தாள்.

அங்கே இருந்து கிளம்ப முயலுகையில், “ஸ்...”, என்ற அவனது முனகல் அவளை திரும்பிப் பார்க்க வைக்க,

“என்ன அப்படிப் பாக்குற...? நேத்து கொப்பளமாச்சு இல்ல..., அதுதான். இன்னைக்கு செம வலி. ரெண்டு மூணு உடைஞ்சுடுச்சு வேற...”, அவன் உரைக்கவே, அவன் கரத்தை எடுத்துப் பார்த்தவள்,

“நேத்து போட்ட ஆயின்மெட்டை போடுறேன்...”, அதை அவனுக்கு போட்டு விட்டவள், அவன் விரல்களிலும் கொப்பளம் இருக்கவே, அவன் ஷூ லேசையும் அவளே கட்டிவிட்டாள்.

அவன் முதுகில் பையை ஏற்றவும் உதவியவள், அவன் உள்ளங்கையை மெதுவாக வருடினாள்.

அவள் கண்கள் கலங்கி இருந்தது. அதைப் பார்த்தவன், அவளை தோளோடு அணைக்க எழுந்த ஆவலை அடக்கினான். அவனுக்கும், தன் மனம் அவள் பக்கம் சாய்வது புரியத்தான் செய்தது.

அவனோ..., காட்டில் இருக்கும் இந்த தனிமைதான், அவளோடான தன் நெருக்கத்தை, மனம் விரும்புவதற்கு காரணம் என எண்ணினான். காட்டை விட்டு, வீட்டுக்குப் போனால், அவளது நினைவே தனக்கு வராது என உறுதியாக நம்பினான்.

‘இது வெறும் சலனம் மட்டுமே. வேறு எதுவும் கிடையாது’ என தனக்குள்அழுத்தமாக பதிய வைக்க முயன்றான். இந்த

எண்ணங்களை தனக்குள் பதிய வைக்க முயன்றதால்..., வேறு எந்த விஷயங்களையும், நினைக்க கூட மறுத்தான்.

தமயந்தியோ..., அவன் கண்களுக்குள் எதையோ தேடித் தோற்றுக் கொண்டிருந்தாள்.

"நளா...", அவனை அழைக்க,

"நேரமாச்சு வா போகலாம். இன்னும் நிறைய தூரம் போகணும். இங்கேயே இருக்க முடியாது. இனிமேல் குளிக்கிறதையும், துவைக்கிறதையும் மறந்துடு. குடிக்க தண்ணி கூட கிடைக்காமல் போகலாம்...", வரவிருக்கும் நாட்களைப் பற்றி உரைத்தவன், முன்னால் நடந்தான்.

தமயந்திக்கோ..., அவன் உடனிருக்கும்போது...., பசிக்கு உணவோ, தாகத்துக்கு தண்ணீரோ கூட வேண்டாம் என்றுதான் தோன்றியது. இப்படியே அவன் கைகளைப் பிடித்தவாறே, அவன் கால்தடம் பற்றி, அவன் கூடவே இந்த காட்டிலேயே இருந்துவிட மாட்டோமா என்று அவள் மனம் ஏங்கியது.

'இது நடக்க வாய்ப்பே இல்லை...', என அவள் மனம் உரைக்க, மனதளவில் தன்னைவிட்டு வெகு தூரத்தில் இருக்கும் அவன் நெஞ்சம், என்று தன்னை நெருங்கும்? என்ற கேள்விக்கு விடை தெரியாமல் கலங்கியது அந்த பேதையின் மனம்.

## பகுதி – 11

"ஏய்..., காலை சத்தமில்லாமல் தூக்கி வைத்து நட. இப்படி இழுக்காதே. இத்தனை நாள் என்னோடவே இருக்க. இன்னும் காட்டுக்குள் எப்படி நடக்கணும்னு தெரியவே இல்லை....", அவளை அழுத்தமாகக் கடிந்துகொண்டவன், கேமரா லென்ஸ் வழியாக எதையோ தேடினான்.

"அப்படி எதைத்தான் தேடுறீங்க...? எனக்குச் சொன்னால் நானும் தேடுவேன்ல்ல", அவனைச் சுரண்டினாள்.

“இப்போ சொன்ன உடனே உனக்குத் தெரிஞ்சுடுமா...? அழிந்துவரும் பூனை இனத்தில் ஒன்றை, இங்கே காட்டுக்குள் மலைவாழ் மக்கள் பாத்ததா சொல்லுறாங்க. ஆனால் இதுவரை யாருமே அதை போட்டோ பிடித்தது கிடையாது.

“அது என் கண்ணுக்குத் தெரியாமல், என் கேமரா கண்ணுக்குத் தெரியுதான்னு பாத்துட்டு வரேன். முடிந்தால் நீயும் பார். இல்லையா கொஞ்சம் சத்தம் போடாமல் வா...”, சொன்னவன், தன் வேலையைத் தொடர்ந்தான்.

அவனுக்கு இந்த தேடுதல் வேட்டை பழக்கம் என்பதால் ஆர்வமாகத் தேட, அவனோடு நடந்துகொண்டிருந்த தமயந்திக்குத்தான் போர் அடித்தது.

சற்று நேரம் காட்டை வேடிக்கைப் பார்த்தவள், இப்பொழுது அவனை வேடிக்கை பார்க்கத் துவங்கினாள். இந்த பத்து நாட்களில், அவனது இந்த முகத்தை பார்க்காத நேரமில்லை. ‘இந்த நிமிடத்தை விட்டால், வேறு எப்போது அவனைப் பார்க்க நேருமோ’ என்ற அவள் எண்ணமே அவனை, பார்வையால் தொடரச் சொன்னது.

இந்த நாட்களில், நளனை முழுவதுமாக அவள்தான் கவனித்துக் கொண்டாள். அவனுக்கு வேலை செய்யாமல் இருக்க,அவன் கையின் காயம் ஒரு சாக்காகிப் போக, அவளோ அதை விருப்பத்துடனேயே செய்தாள்.

அவனுக்கு ஷூ லேஸ் கட்டி விடுவது முதல், அவனுக்கு ஷேவ் செய்வது துவங்கி, அவனுக்கு பிடித்த உணவை சமைத்து கொடுப்பது, சுடு தண்ணீரை மட்டுமே கொடுப்பது, இன்னும் அவன் கண்ணசைவிலேயே அனைத்தையும் அவனுக்காக செய்தாள்.

“ஏய்..., இதையெல்லாம் நீதான் செய்து ஆகணும்னு ஒரு கட்டாயமும் இல்லை. சும்மா சும்மா என்னை உரசும் வேலையை வச்சுக்காதே...”, தன் இளகலை மறைக்க, அவளிடம் சாடுவான்.

அவனது கோபமோ, எரிச்சலோ, பாராமுகமோ எதுவும் அவளை பாதிக்கவில்லை. அவளது இந்த செய்கையே...., அவனை அறியாமலே அவளை மனதுக்குள் குடி அமர்த்தியது. அதை அவன் உணர்ந்தாலும் ஏற்றுகொள்ள மறுத்தான்.

அவனுக்கு எப்பொழுதும், அவள் தன் கண் பார்வையில் இருக்க வேண்டும். தப்பித் தவறி கூட, அவளை தன் கண்பார்வையை விட்டு அகல விடவில்லை.
இந்த  அக்கறையைக் கூட, அவள் உணர்ந்த அளவு அவன் உணரவில்லை.

இயற்கை உபாதைக்காக அவள் ஒதுங்கினால் கூட, "போறவ சொல்லிட்டு போக மாட்டியா...? எந்த புலி அடிச்சுட்டு போச்சோன்னு என்னால்கவலைப்பட்டுக்கிட்டு இருக்க முடியாது புரியுதா...?

"தப்பித்தவறி புலியே அடிச்சாலும்..., போக முன்னாடி..., 'என்னை புலி அடிச்சுடுச்சு'ன்னு ஒரு குரல் குடுத்துடு, அப்போதான் நான் நிம்மதியா இருப்பேன்",  அக்கறையைக் கூட கோபமாகத் தான் வெளிப்படுத்தினான்.

"இதை எப்படி சொல்லிட்டு போக முடியும்...?", சின்னக் குரலில் அவள் உரைக்கும்பொழுது,

"காட்டுக்குள் என் நிம்மதியைக் கெடுக்கணும்னே கங்கணம் கட்டிட்டு வந்தியா...? எந்த நேரத்தில் இங்கே வந்து குதிச்சியோ..., என் வேலை எல்லாம் கெட்டுப் போச்சு...", அதற்கும் சிடு சிடுத்தான்.

இப்பொழுது அதை எண்ணியவள், அவன் நின்றதைக் கூட உணராமல், தாண்டிச் செல்ல, அவள் கையை அழுத்தமாகப் பிடித்து தடுத்தவனது பார்வை சென்ற திக்கைக் கண்டவளது விழிகள், தெறித்துவிடும்போல் விரிந்தது.

"ஸ்...", தன் வாயில் விரல் வைத்து அவளை எச்சரித்தவன், அருகில் இருந்த புதர் போன்ற சிறிய மரத்தின் மறைவில் அவளை இழுத்தவன், தானும் மறைந்து நின்றான். அவள்

மரத்தில் சாய்ந்திருக்க, அவள்மேல் அழுத்தமாக ஒடுங்கி நின்றான் நளன்.

அவனது நெருக்கம் அவளுக்குள் சின்ன பூகம்பங்களை நிகழ்த்தத் துவங்கியது. தினமும் அவனோடு ஒற்றை டெண்டில் உறங்குகிறாள் தான். ஆனால்..., இடைவெளி அதிகம் இருக்கும். ஆனால் இப்பொழுது, நூலளவு கூட இடைவெளி இல்லாமல், அவனது நெருக்கம், அவளை உருக வைத்தது.

அவன் கவனம் எங்கோ இருப்பதை உணர்ந்தவள், அவன் பார்வையைத் தொடர, அங்கே ஒரு கறுப்புக் கரடி, இவர்கள் சென்ற பாதையின் குறுக்காக நின்று கொண்டிருந்தது.

“கரடி தானே அது...?”, காட்டில் முதல் முறையாக அவள் காணும் விலங்கு அதுதான். எனவே உற்சாகமாக அவள் கேட்க, அவளை முறைத்துப் பார்த்தான்.

“ஆமா..., அதுகிட்டே போய் ஒரு ‘ஹாய்’ சொல்லிட்டு வரியா...? லூசு.., ஏற்கனவே சொல்லி இருக்கேனே..., கரடி மனுஷங்களைப் பார்த்தால், அவங்களைத் தாக்கி, அவங்ககிட்டே இருக்கற சாப்பாட்டை புடுங்கும்னு. இப்போ காத்து வேற நாம இருக்கும் பக்கமா அடிக்குது. அப்போ கண்டிப்பா அதுக்கு நம்மளோட வாசனை தெரிய வரும்.

“எந்த நிமிஷமும் இங்கே அது வரலாம்னு நானே பயந்துபோய் நிக்கறேன். ‘ஹை கரடி தானே அது’ன்னு குஜாலாவுற நீ...”, கடுப்படித்தவனின் குரலில் கவலையும் ஒருங்கே இருந்தது.

அவன் கவலையை உள் வாங்கியவள், “அப்போ நாம ஓடிடலாமே...”, அவனுக்கு யோசனை வழங்க,

“ஹையோ..., எனக்கு இது தோணவே இல்லை பாரேன்...”, போலியாக வியந்தவன், “அடச்சீ...., உனக்கே இந்த யோசனை வரும்போது எனக்கு அது வராதா...?

“நாம இப்போ ஓடினால்..., அந்த சத்தத்துக்கே அது சட்டுன்னு திரும்பிடும், அதோட மோப்ப சக்தியும், காதின்

கூர்மையும் மனுஷனை விட அறுபது மடங்கு அதிகம். மனுஷன் கவலை புரியாமல்..., நான் மட்டும்னா கூட, எல்லா பொருளையும் விட்டுட்டு ஓடி தப்பிச்சுடுவேன்.

“காலில் இரும்பு குண்டை கட்டுன மாதிரி, உன்னையும் வச்சுகிட்டு எங்கே போக...”, தன் தலையிலேயே அடித்துக் கொண்டான்.

அவன் பேச்சில் மனம் வாடியவள், “என்னைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம். நீங்க போங்க...”, அவனை தன்மேல் இருந்து விலக்கித் தள்ளினாள்.

அதில் கோபம் கொண்டவன், “உன்னை தலை முழுகுறதா இருந்தால், அதை எப்போவோ செய்து இருப்பேனே!! தேவையில்லாமல் எதுக்கு இவ்வளவு நாள் கடத்தப் போறேன்..., வாயை மூடிட்டு இப்போ நிக்கலை, இருக்குற கடுப்பில், உன்னை நானே அதுகிட்டே தள்ளி விட்டுட்டு போய்ட்டே இருப்பேன்”, அவன் குரலில் இருந்த கடுமையில், கப்பென அடங்கிப் போனாள்.

ஆனால் மகிழ்ச்சி கொள்ள முடியாத அளவு, கரடியோ அவர்கள் இருக்கும் இடம் நோக்கி முன்னேறத் துவங்கியது. முதல் முறையாக, அவன் இதயத்துடிப்பின் வேகத்தை அவள் உணரும் அளவில் இருந்தது, அவன் இதயத் துடிப்பின் வேகம்.

அவளோ, அவனுடன் இருக்கும்பொழுது, தனக்கு மரணம் வந்தாலும் சுகமே என இருக்க, அவனோ..., தன்னை அறியாமலேயே, அவள் இடையில் கை கோர்த்தவன், அவள் முகத்தை தன் தோளில் அழுந்த புதைத்துக் கொண்டான்.

கரடி வருவதை அவர்களால் உணர முடிந்தது. ஆனால் ஒரு சருகு சலசலக்கும் ஓசை கூட கேட்கவில்லை. அதுதான் கரடியின் தனித்துவம். இன்னும் பத்தடி நெருங்கினால், அது கண்டிப்பாக தங்களை விடாது என்பது அவனுக்குத் தெரியும்.

மெதுவாக எட்டிப் பார்க்க, கரடியோ..., இவர்கள் திக்கையே அசையாமல் பார்ப்பது புரிந்தது. அதே நேரம், கரடியின்

முகத்தின் முன்னால் ஒரு தேனீ ரீங்காரமிட, அதன் சத்தத்தில் கலைந்த கரடி, தேன் கூட்டை தேடித் திரும்பிவிட்டது.

தனக்குப் பிடித்த தேனை விட, வேறு எதுவும் அதுக்குப் பெரிதாகத் தெரியவில்லையோ என்னவோ.

இவர்களோ..., எப்பொழுது அது தங்களைத் தாக்குமோ என பயந்தவாறு, கையில் இருக்கும் சிறு கத்தியோடு அதைத் திருப்பித் தாக்க தயாராக நின்றுகொண்டிருந்தான்.

சிறிது நேரமாகியும் அது வராமல் போகவே, மெதுவாக அவன் எட்டிப் பார்க்க, கரடியை அங்கே காணவில்லை. நிம்மதியாக மூச்சு விட்டவன், அப்பொழுதுதான் தான் இருக்கும் நிலையை கவனித்தான். அதைவிட, தவிப்பாகவும், கலக்கமாகவும், சிறு பயத்தோடும் தன் சட்டையை இறுகப் பற்றியவாறு அவள் இருந்த கோலம், நளனை மிகவும் பாதித்தது.

அவன்மேல் விழுந்து பழக முயன்ற நித்திலாவிடம் கூட உணராத ஏதோ ஒன்றை அவளிடம் உணர்ந்தான். இவ்வளவு நாட்களில் ‘அவள் ஒரு பெண் இல்லை, ஆண் என எண்ணிக்கொள்’ என்று தனக்குத் தானே விதித்துக் கொண்ட கட்டுப்பாடுகள் அனைத்தும் தளர்ந்து போக,

அவ்வளவு நெருக்கத்தில், தன் தேகம் முழுவதும் ஒரு பெண்ணை உணர்கிறோம் என்பதை உணர்த்த, அன்று அவளைக் கலைக்கவென்று முத்தமிட்டபொழுது உணர மறுத்த விஷயங்களை, இப்பொழுது உணர வேண்டும் என்ற வேகம் பிறக்க, அவள் இதழ் நோக்கி குனிந்தான்.

அவன் தன்னை முத்தமிடப் போகிறான் என்பதை உணர்ந்து, வேகமாக அவனை தன்னிடமிருந்து பிடித்துத் தள்ளினாள். அந்த நிமிடம், தங்களை தாக்க வரும் கரடியோ, உயிர் பயமோ எதுவும் அவளிடம் இருக்கவில்லை.

மாறாக..., ஏற்கனவே அவன் உணர்த்திய முத்தத்தின் தாக்கத்தையே அவளால் இன்னும் சமன் செய்துகொள்ள முடியவில்லை. தன் உதடை நாவால் வருடும் ஒவ்வொரு

முறையும், அவன் இதழ்களுக்குள் சிக்கித் தவித்த தன் இதழ்கள் நினைவிற்கு வந்து இம்சிக்க, அதைக் கொடுத்தவனோ, என்னவோ சாதாரணமாக கை குலுக்கியதைபோல் நடந்துகொள்ள, அவளால் அதை ஜீரணிக்கவே முடியவில்லை.

அவனைப் பொறுத்த அளவில், ஒரு முதலுதவியாக அதை அவன் செய்திருக்கலாம். ஆனால்..., நெஞ்சம் நிறைய அவனைச் சுமந்துகொண்டு, அவன் கொடுக்கும் முத்தத்தை சாதாரணமாக பெற்றுக்கொள்ள அவளால் முடியவில்லை.

எனவேதான்..., நடக்க இருந்த விபரீதத்தைத் தடுக்க, வேகமாக அவனைத் தள்ளி விட்டாள். ஆனால் அவனுக்கோ..., ஆசையாக சுவைக்கபோன ஐஸ்கிரீமை, வெடுக்கென தட்டி விட்டதுபோல் இருக்க, அதோடு தான் என்ன செய்யவிருந்தோம் என்பதும் புரிய, தன் செய்கையை மறைக்க அவளிடம் பாய்ந்தான்.

## பகுதி – 12

“ஏய் என்னடி..., இப்போ எதுக்கு என்னை தள்ளிவிட்ட...?”, அவள் தள்ளிய வேகத்தில் தடுமாறி விழப்போனவன் சமாளித்து நின்றவாறு கேட்டான்.

“ஏன்னு உங்களுக்குத் தெரியாது...?”,

“என்ன..., மனசுக்குள் பெரிய ரதின்னு நினைப்பா...? உன்னை அப்படிப் பார்த்தப்போவே எனக்கு உன்மேல் ஒரு மண்ணும் தோணலை, இப்போதான் புதுசா வரப் போகுதா...?”.

“நான் ஒண்ணும் உங்க முன்னாடி ஆசைப்பட்டு அப்படி நிக்கலை....”,

“ஓ..., அப்போ ஆசைப்பட்டு நிக்கணும்னு வேற நினைப்பிருக்கோ...? அதையெல்லாம் இத்தோட மறந்துடு ஆமா...”, விரல் நீட்டி எச்சரித்தான்.

“ஆமா..., இவர் பெரிய மன்மதக் குஞ்சு..., அப்படியே இவர் அழகில் சொக்கிப்போய் நின்னுடப் போறோம். சுத்த சோம்பேறி..., அன்பு பாசம் அக்கறைன்னா கிலோ என்ன விலைன்னு கேப்பார்...., இப்படி ஒரு ஆளைப் பார்த்தும், நாங்க நினைப்பை வளர்த்துக்கப் போறோமாம்...”,

“ஆமாடி..., நான் அப்படித்தான், எனக்கு இதெல்லாம் தெரியாதுதான். எனக்குத் தெரிஞ்சுக்கணும்னு அவசியமும் இல்லை. நான் கையைச் சொடுக்கினால்..., எனக்கு சேவகம் செய்ய ஆயிரம்பேர் வருவாங்கடி, பாக்குறியா. எனக்கு உன் அக்கறையும், அட்வைசும் தேவை இல்லை”.

“ஆயிரம்பேர் வருவாங்கதான்..., அதில் காசுக்குச் செய்யும் கடமை மட்டும்தான் இருக்கும். மனுஷ உணர்வை புரிஞ்சுக்கத் தெரியாத ஜடம்.., உங்களுக்கெல்லாம் அவங்கதான் லாயக்கு. அவங்களையே கட்டிக்கிட்டு அழுங்க...”.

“நீ சொன்னாலும், சொல்லலை என்றாலும் அவங்களோடதான் இருக்கப் போறேன். இந்த ரதியை வான்னு யாரும் சொல்லலை, வருவாளான்னு தவமும் இருக்கலை...”.

“இங்கேயும் யாரும் இந்த ஆணழகன் தான் வேணும்னு தவம் இருக்கலை. உங்களையெல்லாம்.... சும்மா கொடுத்தாலே யாரும் வாங்க மாட்டாங்க, வந்துட்டார்...”.

“என்னையவாடி சும்மா கொடுத்தாலும் யாரும் வாங்க மாட்டாங்கன்னு சொன்ன..., உன்னைத்தாண்டி வச்சுக்....”,

“நளா...”, அவளது கீச்சிடலில், தான் கொட்டவிருந்த வார்த்தையின் வீரியம் புரிந்தாலும், அவள் மட்டும் அப்படி பேசலாமா...? என்ற ஈகோ தடுக்க, திரும்பி நடந்தான்.

தமயந்தியின் நெஞ்சு விம்மித் தணிந்தது. எதுவோ நடக்கக் கூடாது என தான் தடுக்கப்போய், அது எங்கேயோ சென்று, ஒருவரை ஒருவர் காயப்படுத்திக் கொண்டதை எண்ணி கலங்கினாள். ஆனாலும்..., இறுதியாக அவன் சொன்ன வார்த்தைகள் அவள் மனதை கூறுபோட்டது.

‘அப்போ அவர் மனசுக்குள் என்மேல் எந்தவித நல்ல எண்ணமுமே இல்லையா? அவர் மனதில் நான் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லையா?’, இவ்வளவுநாள் பாதுகாப்பாக தெரிந்த ஒரு விஷயம், இன்று பூதாகரமாகத் தெரிந்தது.

தன் நினைவிலேயே மூழ்கியவள், தன்மேல் விழுந்த கல்லில் கலைந்தவள், நளன் தூரத்தில் செல்வதை உணர்ந்து, அவன்தான் அதைச் செய்திருப்பான் என்பதை உணர்ந்து அவன் பின்னால் சென்றாள்.

அடுத்த மூன்று நாட்கள் அவர்களுக்குள் எந்தவிதமான பேச்சுவார்த்தையும் இன்றியே கழிந்தது. ஆனாலும்..., நளனுக்குச் செய்யும் பணிவிடைகளை செய்ய அவள் மறுக்கவில்லை.

அவன்மேல், அவன் பேசிய பேச்சுக்களால் கோபம் இருந்தாலும், அதைவிட அவன்மேல் பாசம் அதிகமிருந்தது. தாயில்லா பிள்ளை என்ற பரிவு அதிகமாக இருந்தது. எனவே..., அனைத்தையும் மறுக்காமல் செய்தாள்.

தமயந்தியிடம் தான் பேசிய பேச்சு அதிகமென்பது அவனுக்குத் தெரிந்தாலும், தன்னைப் பற்றி தெரிந்தும், தன்னை சோம்பேறி, காட்டுமிராண்டி எனச் சொன்னது அவனையும் காயப்படுத்தி இருந்தது.

எனவே, அவள் செய்யும் எதையும் அவன் தடுக்கவில்லை. மூன்றாம் நாள் முடிவில்..., “அனேகமா நாளைக்கு சாயங்காலம், இல்லை நாளை மறுநாள் காலையில் நாம ஊருக்குள் போய்டுவோம்”, அவளுக்கு அறிவிப்பாக சொன்னான்.

கையில் இருந்த உணவு, அதற்குமேல் உள்ளே செல்லமாட்டேன் என்று சண்டித்தனம் செய்தது. இவ்வளவு நாளில் உணவின் அருமை தெரிந்ததால், சிரமப்பட்டு அவற்றை விழுங்கினாள். இன்னும் தனக்கு இருப்பது ஒரே நாள்...., கண்கள் கலங்கும்போல் இருந்தது.

‘இது தெரிந்திருந்தால்..., அவர்கிட்டே இந்த மூணு நாளா பேசாமல் இருந்திருக்கவே மாட்டேன்...’, வெட்கமே இல்லாமல் அவளின் காதல் கொண்ட மனம் எண்ணியது.

“என்ன பதிலையே காணோம். இன்னும் அம்மணிக்கு கோபம் போகலையோ”, அவனுக்கும் அவளை விட்டு பிரிவது கடினமாக இருக்கவே, வார்த்தையாடினான். அதை வழக்கம்போல் ஒத்துகொள்ளத்தான் அவன் தயாராக இல்லை.

“சந்தோஷத்தில் என்ன சொல்லுறதுன்னே தெரியலை...”, தன் கலங்கிய கண்களை அவனுக்கு மறைத்தவாறு, நெருப்பின் ஒளிக்கு எதிராக திரும்பிக் கொண்டாள்.

“ஓ...”, அவனுக்கு எதையோ எதிர்பார்த்து ஏமாந்த ஏக்கம்..., ஒற்றை வார்த்தையில் அதை மறைத்தவன், டெண்டுக்குள் சென்றுவிட்டான்.

முழங்காலை கட்டிக்கொண்டு அதில் முகம் புதைத்து குலுங்கி அழுதாள் தமயந்தி. ‘அவன் என்ன நினைத்தாலும் பரவாயில்லை, ஓடிப்போய் ‘ஐ லவ் யூ’ என்று சொல்லி விடுவோமா...’, அவள் மனம் கதறியது.

இந்த பதினைந்து நாட்களில், இரவில் அவர்களுக்குள் சுவாரசியமான கண்ணாமூச்சி ஆட்டமும் நடக்கத் துவங்கி இருந்தது. அந்த பாம்பு விழுந்த இரவிற்கு பிறகு, தனியாக படுக்க தமயந்தி மிகவும் பயந்தாள். அடுத்த நாள்..., அவன் பொருட்களுக்கு மேல் படுத்தவளைப் பார்த்தவன், நள்ளிரவில், அவளை தன்னோடு இணைத்து படுக்க வைத்துக் கொண்டான்.

மறுநாள் காலையில் கண் விழித்தவள், தான் புரியாத அணைப்பில் சிக்கி இருப்பதையும், ரிதமான ஓசையையும் அவள் உணரவே, மெதுவாக கண் விழித்தவள், அவன் அணைப்பில், அவன் நெஞ்சின் ஓசையைக் கேட்டவாறு தான் படுத்திருப்பதைக் கண்டவள் விதிர்த்துப் போனாள்.

அவன் கையை விலக்கிச் செல்லவும் மனம் வராமல், தான் விலகினால் விழித்துவிடுவானோ என்ற பயத்தில்

அப்படியே படுத்திருக்க, அடுத்து கண் விழித்த அவனோ, அவளை பூப்போல் அருகில் கிடத்தியவன் விலகிச் செல்ல, அப்பொழுதுதான் அவளால் இயல்பாக மூச்சு விடவே முடிந்தது.

தான் செய்வது சரியா தவறா என்பது அவளுக்குத் தெரியவில்லை. தனக்கு இந்த காதல் கை கூடுமா என்பதும் தெரியவில்லை. தனக்கு எதிர்காலத்தில் திருமணம் என்ற ஒன்று ஆகுமா…? இதையெல்லாம் மறந்து தன்னால் வாழ முடியுமா…?

அப்படியே திருமணம் முடிந்தால்…, இரவில் இவன் நினைவு இல்லாமல் தன்னால் இனிமேல் வாழ முடியுமா என்பதே கேள்விக்குறியாக இருக்கையில், அது தனக்கு தாலி கட்டப்போகும் ஒருவனுக்கு எவ்வளவு பெரிய துரோகமாக இருக்கும்…?

குழப்பம் மட்டுமே அவளிடம் எஞ்சி இருக்க, தன் வாழ்வில் நளன் இல்லாத வேறு ஒரு ஆணுக்கு இடமில்லை என்று முடிவெடுத்த பிறகுதான் இயல்பாகவே முடிந்தது.

காலில் முகம் புதைத்து அழுதவளுக்கு, மீதம் இருப்பது இந்த ஒரு நாள்தான் என்பதை அறிந்து, இந்த இரவை அவனில்லாத தனிமையில் கழிக்க மனம் விரும்பவில்லை. தனது இறுதி இரவிலும் அவனோடு இருக்கவே மனம் விரும்பியது.

உள்ளே சென்றவள், வழக்கம்போல் அவன் பொருட்கள் மேல் படுத்து விழி மூடியவள், உறங்காமல் விழித்திருந்தாள். அவள் படுத்த அரைமணி நேரத்தில் கண் விழித்த நளன், “தினமும் எனக்கு நல்ல வேலை கொடுக்குறா…?”, சத்தமாக முணுமுணுத்தவன், அவளை அலுங்காமல் தூக்கி தன்மேல் போட்டுக் கொண்டான்.

எங்கே தன் இதயத்துடிப்பும், மூச்சுக் காற்றும் தன்னை காட்டிக் கொடுத்துவிடுமோ என அஞ்சியவள், மூச்சடக்கி காத்திருக்க, நளனோ உறங்கிவிட்டிருந்தான். அவன் இதயத் துடிப்பை கேட்டவாறு விழித்திருந்தாள் தமயந்தி.

ஒரு வழியாக அவர்களது பயணம் மறுநாள் இரவில் முடிவிற்கு வந்தது. “ஹப்பா…, ஒரு வழியா முடிஞ்சுது. இதோ தெரியுதுபார் ஒற்றையடிப் பாதை, இதுதான் உங்க ஊருக்குள் போகும் வழி. நீ உங்க வீட்டுக்கு போ, நானும் கிளம்புறேன்…”, தன் கைகளை நெட்டி முறித்தவாறே சொன்னான்.

தமயந்தியின் கண்கள் தவிப்பாக அவனைப் பார்த்து, அவன் உருவத்தை படம் பிடித்து, இதயத்தில் நிரப்பியது. “ஏய்…, என்ன தூக்கமா…? வீட்டுக்குப் போய் நிம்மதியா தூங்கு…”, அவள் கண்முன் கை ஆட்டினான்.

“நளா…, நீங்களும் வாங்களேன்…, ஏற்கனவே இருட்டிடுச்சு, எங்க வீட்டில் சாப்ட்டுட்டு தூங்கி எழுந்து, இரண்டு நாள் இருந்துட்டு நிம்மதியா போகலாம்…”, அவனை அழைத்தாள்.

“ஏய்…, ஏய்…, இங்கேபார் இந்த விளையாட்டுக்கு நான் இல்லை. எத்தனை கதையில் படிச்சிருப்பேன். இப்போ நான் உன்னோட வரணும், ஊருக்குள் இருக்கறவங்க, உன்னை எனக்குப் பிடிச்சு கட்டி வைக்கணும், இதுதானே உன் ப்ளான். அவ்வளவு சீக்கிரம் நான் சிக்க மாட்டேன். நீ கிளம்பு…, கிளம்பு…”, அவளை விரட்டினான்.

கலங்கும் கண்களை இமையைக் கொட்டி சரி செய்தவாறே…, “அப்படியெல்லாம் எதுவும் ஆகாது…, இருந்தாலும் நீங்க இவ்வளவு பயப்படுவதால் வேண்டாம்”, அவனைப் பார்த்தவாறே பின்னால் நடந்தாள்.

‘தமயந்தி…, இதற்குப் பிறகு உன் நளனைச் சந்திக்கும் வாய்ப்பு உனக்கு கிடைக்காமலே போகலாம்…, இப்படியே கிளம்பிடப் போறியா…? உன் மனசை அவனுக்கு கோடிக் காட்டாமல் போவது சரியா…?’, அவள் மனம் முரண்டியது.

கால்கள் நகர முடியாமல் நின்று போனது. வேகமாக அவன் அருகில் வந்தவள், “என்ன…?”, அவன், அவள் வந்த வேகத்தில் கொஞ்சம் பதட்டமாகவே கேட்டான்.

“நான் உங்களுக்கு தேங்க்ஸ் சொல்லவே இல்லை. அதான்..., இப்போ சொல்லலாம்னு..., உங்க இடத்தில் வேறு யாராவது இருந்திருந்தால், கண்டிப்பா நான் வந்த மாதிரியே திரும்பி வந்திருப்பேனா என்பது எனக்கு தெரிஞ்சிருக்காது.

“அதுக்கே நான் உங்களுக்கு பெரிய தேங்க்ஸ் சொல்லணும். தேங்க்ஸ் நளா..., தேங்க்யூ வெரி மச்...”, அவன் கண்களுக்குள் ஊடுருவி, இன்னும் எதையோ சொல்ல விழைந்தாள்.

“ஹேய்..., இதுக்கு எதுக்கு இவ்வளவு தேங்க்ஸ்..., இது என்னோட கடமை. நீ எதையும் யோசிக்காமல் வீட்டுக்கு போ...”, அவள் கண்களுக்குள் சிக்கி மீள முடியாமல், அவளை கிளப்பினால் போதும் என்ற முடிவில், அவள் கையைப் பிடித்து திருப்பி அனுப்ப முயன்றான்.

இரண்டு அடி வைத்தவள், சட்டென திரும்ப, “இப்போ என்ன...?”, அவள் தவிப்பை கண்டும், காணாததுபோல் சாதாரணமாகவே கேட்டான்.

“இல்ல..., உங்க ட்ரெஸ்...”, என்னவோ அதுதான் முக்கியம் என்பதுபோல் சொன்னாள்.

“ம்..., நான் கூட மறந்துட்டேன் பாரேன். சீக்கிரம் கொடு நானும் போகணும்”, சிரிக்காமல் அவன் சொல்ல, அவன் இதழ்க்கடையில் துடித்த சிரிப்பில், அவன் குறும்பை உணர்ந்தவளின் இதழ்களிலும், அந்த நிமிட கனத்தையும் மீறிய ஒரு புன்னகை.

“நளா...”, அவன் சிரிப்பை மனதுக்குள் சிறை பிடித்தவள், அன்று அவன் தன்னை நெருங்கியபொழுது அவன் கண்களில் தெரிந்த ஆர்வம் இப்பொழுது நினைவிற்கு வர, அவனுக்கு அவன் விரும்பியதைக் கொடுக்க வேண்டும் என்ற அந்த நிமிட உந்துதல்,

அவன் கன்னத்தை நொடியில் கைகளில் தாங்கியவள், அதே வேகத்தில் அவன் இதழ்களில், தன் இதழை மின்னல்

வேகத்தில் பதித்து மீட்டவள், அவன் சுதாரிக்கும் முன்பே அங்கிருந்து ஓடி மறைந்தாள்.

## பகுதி – 13

ஆயிற்று..., இன்றோடு ஒரு வாரம் ஓடியே போய் விட்டது. தன் தோளில் தலை சாய்த்திருக்கும் மகளை இன்னும் கூட நம்ப முடியாத திகைப்பில், ஆச்சரியத்தில் தன் நடுங்கும் கரங்களால் அவள் தலை வருடினார் நாராயணன்.

“ராஜாத்தி..., இது கனவில்லையே...”, எங்கே கனவாகிப் போய்விடுமோ என்ற தவிப்பில் கேட்டார்.

“டேட்..., நான் நிஜமாவே திரும்பி வந்துட்டேன். கொஞ்சம் ரிலாக்ஸ்டாக இருங்க. உங்க ஹெல்த்தை நினைச்சு எனக்கு கவலையா இருக்கு”, அவருக்கு ஆறுதல் கொடுத்தாள்.

ஆனாலும் இருபது நாளாக மகளைக் காணாத ஏக்கம். அதிலும் ஆற்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்ட மகள், எங்கே என்ன ஆனாளோ என்ற தவிப்பு, அவளைப் பற்றிய கவலையே அவரை அரித்தது. ஆற்றில் சென்ற மகளின் பிணம், கடலில் ஒதுங்கும் என்ற மக்களின் கூற்று, அவளை காட்டில் விலங்கும், ஆற்றில் மீனும் தின்றுவிடும் என்ற ஒரு சாராரின் ஆரூடம், அனைத்தும் நாராயணனை மொத்தமாக புரட்டி போட்டது.

ஊருக்கு வந்த அவளிடம் ஊர் மக்கள் ஓராயிரம் கேள்வி கேட்க, அவள் வந்ததே போதும் என, இந்த நிமிடம் வரை அவளிடம் எதுவும் கேட்காத அவர், வேலைக்கு கூட இந்த ஒரு வாரமாகச் செல்லவில்லை.

மகளுடனே இருக்க எண்ணினார். மனைவி போன இந்த ஆறு வருடங்களில், தனக்காக இருக்கும் ஒரே உறவு, காணாமல்போய் கிடைத்த அந்த சந்தோசம், அந்த கடவுளுக்கு தன்மேல் கொஞ்சம் கருணை இருக்கிறது என எண்ணிக் கொண்டார்.

“டேட்..., டேப்லெட் போட்டீங்களா...? கொஞ்சம் ரெஸ்ட் எடுங்க, நான் காலேஜ் போயிட்டு வந்துடுறேன். ஏற்கனவே செமஸ்டர் பரீட்சை இரண்டு போய்டுச்சு, அடுத்ததையாவது ஒழுங்கா எழுதணும்...”, கல்லூரிக் கவலை அவளிடம்.

தந்தையின் தவிப்பில், தன் மனதில் இருக்கும் தவிப்பை முகத்தில் காட்டாமல் கவனமாக நடிக்கும் தன் நிலை, இங்கே இருந்து ஒருமணி நேரமாவது தப்பிச் சென்று, ஓவென அழவேண்டும்போல் இருந்தது.

‘நளா..., நளா...’, என கதறும் மனதை, அவளால் எந்த சமாதானமும் செய்ய முடியவில்லை.

அவன் யார் என்று தெரியும். எங்கே இருக்கிறான் என்பதும் தெரியும் ஆனாலும்..., அவனைத் தேடிச் செல்லும் தைரியம் மட்டும் இருக்கவில்லை. அப்படியே சென்று..., அவன் தன்னை ஏதாவது சொல்லிவிட்டால், அதைத் தாங்கும் சக்தி அவளுக்கு சுத்தமாக இருக்கவில்லை.

“ஏண்டாம்மா..., ஏதாவது மனசுக்குள் போட்டு வருத்திட்டு இருக்கியா...?”, தந்தைக்கே உரிய பரிதவிப்பு அவரிடம். மனைவி இருந்திருந்தால், அவர் பக்குவமாக மகளிடம் விசாரித்து இருப்பார்.

அதிலும் சென்னையில் இருந்து, கிராமத்தில் தன் தம்பியின் வீட்டுக்கு சென்ற இடத்தில், அவள் ஆற்று வெள்ளத்தில் காணாமல் போனத, அவருக்கு பேரிடியாகவே இருந்தது. மகள் தன்னோடு இருந்திருந்தால் இப்படி ஆகி இருக்காது என்ற அவரது எண்ணமே அவர் உடலை உருக்கியது.

மகள் இறுதியாக வசித்த இடத்தில் இருந்து சென்னைக்கு வர முடியாமல், அவள் இருந்த இடத்திலேயே தன் வாழ்வை முடித்துக்கொள்ள எண்ணித்தான் தன் தம்பியின் வீட்டிலேயே இருந்தார்.

என்று தமயந்தி ஊருக்கு வந்தாளோ..., மறு நாளே, தன் உடல்நிலையைப் பற்றி சிறிதும் கவலைப்படாமல், அங்கே கிராமத்தில் இருந்தால்..., அவளை யாரவதுஏதாவது கேட்டு,

கண்டதையும்சொல்லி காயப்படுத்திவிடுவார்கள் என்பதாலேயே, அடுத்த நாளே, தன் தம்பியின் வீட்டில் இருந்து அவளை அழைத்து வந்துவிட்டார்.

“டேட்..., அப்படில்லாம் எதுவும் இல்லை. நான் இன்னும் உங்க பொண்ணாத்தான் இருக்கேன்...”, (உடலளவில் மட்டும்), இதை தனக்குள் சொல்லிக் கொண்டாள்.

“சரிடா..., அப்போ நீ காலேஜுக்கு போயிட்டு வா. இந்த அப்பா உன்னை ஒரு வாரமா புடிச்சு வைச்சு ரொம்ப தொல்லை பண்ணிட்டேன், போடாம்மா...”, அவளை அனுப்பியவரின் முகத்தில் கவலை ரேகைகள்.

தன் மகள் எதில் இருந்தோ தப்பிக்கப் போராடுவது அவருக்குப் புரியாமல் இல்லை. மனைவி போன பிறகு, மகளின் முகம் பார்த்தே அவள் தேவையை கவனிப்பவருக்கு, மகளின் மன அழுத்தம் தெரியாதா என்ன?

ஆனால்..., நடந்ததை அவளாகச் சொல்லாமல் துருவிக் கேட்கவும் அவருக்கு பயமாக இருந்தது. மெதுவாக கேட்டுக் கொள்ளலாம் என விட்டுவிட்டார்.

இங்கே நளனோ...., தன் வீட்டில், பட்டு மெத்தையில் படுத்தும், தூக்கம் வராமல் புரண்டான். நள்ளிரவில் விழிப்பு வந்து, ‘அவள் தன் கையணைப்புக்குள் வேண்டும்’ என இந்தக் கொஞ்சநாள்பழக்கத்தில்உள்ளம் முரண்ட, அடுத்தநாள் வாங்கிவந்த ஆளுயர மிக்கிமவுஸ் அவன் கையணைப்புக்குள் இருந்தாலும் உறக்கம் மட்டும் அவனை தாலாட்ட வரவில்லை.

சில வேளை நித்திலாவுடன் நெருங்கிப் பழகினால், தமயந்தியின் நினைவு பின்னுக்குப் போகுமோ என எண்ண, நித்திலா வந்த அடுத்த நிமிடமே, தலைவலியும் வந்தது மட்டுமே மிச்சம்.

அவளது குழைந்த பேச்சும், போலியான வெட்கமும்..., அவன் எரிச்சலைக் கிளறியது. அவள்மேல் அவன்

எரிந்துவிழ, இரண்டு நாட்களாக அவள் கண்ணிலேயே படவில்லை.

காட்டில் தான் எடுத்த பறவைகள், விலங்குகளின் புகைப்படத்தை விட, தாங்கள் இருவரும் சேர்ந்து இருக்கும் புகைப்படத்தைத்தான் அதிகம் பார்த்தான். தன் மொபைல், லேப்டாப் அனைத்திலும் ஸ்க்ரீன் சேவராக வால் பேப்பராகஇருந்தது, அவள்தான்.

ரகு வந்து சவரம் செய்துவிட, “அழுத்தாமல் பூப்போல் புடிச்சு செய்டா”, அவன்மேல் பாய்ந்தான்.

ரகு மெதுவாக சவரம் செய்தால்..., “ஒரு மயிரைக் கூட ஒழுங்கா புடுங்க முடியாதா...?”, அதற்கும் காய்ந்தான்.

ஒரு வாரம் வரைகூடகுளிக்காமல் இருப்பவன், இப்போதெல்லாம்தினமும் குளிப்பதை, ரகு விழிகள் தெறிக்க பார்க்க, “நீல்லாம் குளிக்கவே மாட்டியா....?எதுக்கு இப்படி வேடிக்கை பாக்குற...? முதல்ல போய் வேலையைப் பார்...”, அவனை விரட்டினான்.

உடை போட்டாலோ..., அதில் அவள் துவைத்துத் தந்த துணியின் வாசனை வராமல்..., “வேற சோப்பை மாத்துங்க...”, வேலைக் காரியிடம் எரிந்துவிழ, அவள் மார்க்கெட்டில் இருக்கும் அத்தனை சோப்பையும் மாற்றியும், அவர்கள் வீட்டில் மூன்றாவது முறையாக வேலைக்காரியை மாற்றியதுதான் மிச்சமாக இருந்தது.

வந்த மறுநாளே அவனுக்கு கோல்ட் பிடித்துவிட, அவன் வழக்கமாக விரும்பும் ஐஸ் வாட்டரையே ரகு வைக்க, “எனக்கு உடம்பு சரியில்லை எனத் தெரிந்தும், ஐஸ் வாட்டர் வைக்க, உனக்கு எவ்வளவு திமிர் இருக்கணும்...?

“அப்படியே கோல்ட் வந்து போய் சேரட்டும்னு எண்ணம்தானே...?”, ரகுவை சுத்தலில் விட்டான். அதைவிட, ‘கோல்ட் வந்ததாலேயே, போய் சேர்ந்தவர்கள் உண்டா என விசாரிக்கணும்’ என ரகு மிகப்பெரிய முடிவெடுக்கவும் வைத்தான்.

ரகு அடுத்தநாள் முதல்..., நளன் எப்படி எரிந்து விழுவானோ என தவிப்போடு, கலக்கத்தோடு அவன் முன்னால் நிற்க, “ஏண்டா இப்படி மூஞ்சியை வச்சுட்டு என் முன்னாடி வந்து நிக்கிற...? இதைப் பார்த்தால் இந்த நாள் உருப்படுமா...?”,

அவன் பேச்சால் அவன் முன்னால் வராமல் போனாலோ..., “எங்கேடா போய் தொலைஞ்ச...”, என்று கத்தினான்.

ஒரு கட்டத்துக்குமேல் பொறுக்க முடியாமல், “நான் எப்போ எந்த மாதிரி, என்ன செய்யணும்னு சொல்லிடுடா..., அப்படியே செய்யிறேன்”, ரகுவும் எகிறினான்.

“ஏன்..., என் மைண்ட் புரிஞ்சு நடக்கத் தெரியாதோ...? அதை நான்வேற உனக்கு சொல்லிக் கொடுக்கணுமா...?”, அதற்கும் கத்த,

“ஹையோடா சாமி..., என்னால் முடியலையே. நாள் முழுக்க எதையோ எதிர்பாக்குறான், ஆனா என்னன்னு சொல்ல மாட்டேங்குறான். நான் என்ன உன் பொண்டாட்டியா...? ராத்திரி கூட மனுஷனை தனியா விடாமல், ரூமுக்குள் காவல் இருக்க வைக்கிறானே...”, வாய் விட்டே புலம்பிவிட்டான்.

நளனுக்கும் அதுதான் புரியவில்லை, ஒவ்வொருவரின் செய்கையையும் தமயந்தியோடு ஒப்பிட்டு பார்த்து குழம்புவதை, அவனே உணர்ந்து கொள்ளவில்லை.

ஒரு கட்டத்தில் உணர்ந்துகொண்டபொழுது திகைத்துப் போனான். ‘இந்த அளவா அவள் என் மனதுக்குள் அமர்ந்து இருக்கிறாள்...’, தனக்குள் மூழ்கினான். அவனால் முன்போல் அலுவலகத்தில் வெறித்தனமாக உழைக்க முடியவில்லை.

அலுவலகத்தில் சோர்ந்துபோகும் பொழுதுதான் அவன் காட்டுக்குச் செல்வான். இப்பொழுதோ..., அங்கே அவள் இருக்க மாட்டாளே என்றுதான் மனம் அடித்துக் கொண்டது. இறுதியாக..., ஊன், உறக்கம், வேலை எதுவும் செய்ய முடியாமல் துவண்டுபோக,

‘எனக்கு தமயந்திதான் வேண்டும் ‘, என்ற முடிவிற்கும், ‘அவள் இல்லாமல் என்னால் முடியாது…’, என்ற தவிப்பிற்கும் அவன் வந்திருந்தான்.

அவன் நடவடிக்கைகளை வடிவேலும் கவனிக்கவே செய்தார். இரண்டு வாரங்கள் அமைதி காத்தவர், மூன்றாம் வாரம் அவன் அறைக்கு வந்துவிட்டிருந்தார்.

எதுவும் முக்கியமான விஷயம் இல்லாமல் அவர் வர மாட்டார் என்பதால், “வாங்க…, உக்காருங்க…”, அவரை வரவேற்று அமர வைத்தான்.

“நளா…, நான் ஏற்கனவே உனக்கு சொல்லி இருக்கேன். நீ எப்படி வேண்ணா இருக்கலாம், என்ன வேண்ணா செய்யலாம், ஆனால்…, தொழில் என்று வரும்போது…, எனக்கு, உன்னோடஃபுல் கான்சன்ட்ரேஷன் வேணும். இப்படி இருந்தால் என்னால் முடியாது.

“எப்பவும் காட்டுக்கு போயிட்டு வந்தால் நல்ல பிரிஸ்க்கா இருப்ப, இப்போ என்ன இப்படி டல் அடிக்கிற, அதைவிட…, ஒரு மாசம் முன்னாடியே வந்துட்ட போல. அது நல்ல விஷயம் தான்…, ஆனால்…, நீ இப்படி இருப்பது நல்ல விஷயம் கிடையாதே.

“எனக்கு ஓரளவுக்கு உன் நிலையை புரிஞ்சுக்க முடியுது. அடுத்த முகூர்த்தத்திலேயே உனக்கும் நித்திலாவுக்கும்…”,

“எனக்கு தமயந்திதான் வேணும். உங்க நித்திலாவை நீங்களே வச்சுக்கோங்க…”, அவரை பேசவே விடாமல், சொல்லி முடித்தான்.

அவனை ஆழமாகப் பார்த்தவர், “ஓகே…, அவ எங்கே இருக்கா…? அட்ரெஸ் சொல்லு விசாரிப்போம்…”.

“என் முடிவில் எந்த மாற்றமும் இல்லை. உங்களுக்கு விருப்பம் இல்லை என்றாலும் அவள்தான் என் மனைவி…”, அவன் குரலில் அப்படி ஒரு பிடிவாதம்.

“அவ பெயரை மட்டும் வைத்து எதுவும் செய்ய முடியாது இல்ல, அதான் சொன்னேன். நான் இதுவரை உன்

விருப்பத்துக்கு குறுக்கே நின்றது இல்லை, இனிமேலும் இருக்க மாட்டேன்...", அவர் உறுதி கொடுக்க, நளனின் முகத்தில் ஆயிரம் மத்தாப்பூவின் ஒளி.

******"டேட்..., வாங்க...", கட்டிலில் அமர்ந்து உரைத்தவள், "தந்தி...", அந்த அழைப்பில், தான் கேட்டது உண்மைதானா என்ற திகைப்பில், தேகம் முழுவதும் பரபரப்பு ஓட, படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள்.

தமயந்தியை தலைமுதல் கால் வரை நொடியில் அலசியது அவன் பார்வை. காட்டில், கலைந்த தலையும், துடைத்த முகமும், தன் ஆண் உடையில், பார்த்து பழகிய தமயந்தியும், இப்பொழுது, குதிரைவால் கொண்டையும், லாங்க் ஸ்கர்ட், டி ஷர்ட்டில், அளவான ஒப்பனையில், புருவங்கள் வில்லாக வளைந்திருக்க, உதட்டில் இருந்த இயற்கை சிவப்பும்,

சிம்பிளாக நகை அணிந்து, 'அவளா இவள்...?', சத்தியமாக அவனால் நம்ப முடியவில்லை. 'என் தந்தி இவ்வளவு அழகா'..., அவன் பார்வை தயக்கமின்றி அவளை மொய்த்தது.

அவன் கண்களில் தெரிந்த வியப்பில், ஆச்சரியத்தில், அவனுக்குப் பிடித்தவளாக, அவனைக் கவரும் வகையில் தான் இருக்கிறோம் என்பதிலும், அவன் பார்வையிலும் படபடப்பாக உணர்ந்தாள். கன்னங்களில் ரோஜா பூத்தது.

அவளும் அவனைத்தான் ரசித்துக் கொண்டிருந்தாள். காட்டுக்குள் முரட்டு ஜீன்ஸில், காட்டான் போல் இருந்தவன், இன்று ஃபார்மல் உடையில், இன் செய்து, காலுக்கு பளபள ஷூ அணிந்து..., ஹேன்ட்சம்மாக இருந்த அவனை, அவள் பார்வையும் படம் பிடித்தது.

இருவரின் பார்வையும் ஒருவரை ஒருவர் அலசியது. இருவரும் இளைத்திருந்தார்கள். "நீங்க இங்கே...?", கண்களில் கண்ணீரும், முகம் முழுக்க புன்னகையும், செல்லக் கோபமுமாக அவள் வினவ, அவள் பாவங்களில் தன்னைத் தொலைத்துக் கொண்டிருந்தான்.

“ம்…, என்னோட ட்ரெஸ் ஒண்ணு உன்கிட்டே இருக்கா…, அதை வாங்கிட்டு போகலாம்னு வந்தேன்…”, குறும்பாக அவன் உரைக்க,

“ஓ…, அப்படியா…? இருங்க எடுத்து தரேன்…”, அவள் பீரோ பக்கம் நகர, அடுத்த நிமிடம், அவனது இறுகிய அணைப்புக்குள் இருந்தாள்.

“யாரோ சொன்னாங்க…, என்னைப் பார்த்தால் எதுவும் தோணாதுன்னு. இப்போ மட்டும் எப்படியாம்…?”, போலியாக முறுக்க, “இந்த நிமிஷம் நீ பெர்மிஷன் கொடு, என்னவெல்லாம் தோணுதுன்னு செய்தே காட்டிடுறேன்…”, வேகமாக பதில் கொடுத்தான்.

“யாரோ என்னை அசிங்கம்னு சொன்னதா ஞாபகம்…”.

“அது எவன், அவன் கண்ணில்லாத குருடனா இருப்பான்”.

“யாரோ என்னை வச்சுக்..”, “நான் உன்னை கட்டிக்கறேண்டி…, எனக்கு நீ வேணும், நீ இல்லாமல் என்னால் இருக்க முடியாது…”, அவளை இறுக்கிக் கொண்டான்.

“தந்தி…, நான் சோம்பேறி…”, “பரவாயில்லை…”, “எனக்கு ஷேவ் கூட செய்யத் தெரியாது…”, “நான் எதுக்கு இருக்கேனாம்…?”, “நான் குளிக்க மாட்டேன்…”, “இனிமேல் என்னோடவே குளிக்க வைக்கிறேன்…”

“நான் பொறுப்பில்லாதவன்…”, “நான் பொறுப்பா பாத்துக்கறேன்…”, “நான் ஜடம்…”, இதை அவன் சொன்னபொழுது, “எனக்கு அப்படித் தோணலை…”, வெட்கத்தோடு அவள் முணுமுணுக்க, அவள் இதழ்கள் அடுத்த நிமிடம் அவனுக்கு சொந்தமாகி இருந்தது.

எவ்வளவு நேரம் தங்கள் காதலை ஒருவருக்கு ஒருவர் புரிய வைத்தார்களோ, கதவு தட்டும் ஓசையில் கலைந்தவர்கள், வேகமாக பிரிந்து நின்றார்கள்.

“ஹையோ அப்பா…”, முகம் முழுக்க சிவந்துபோய், அவனைக் காண முடியாமல் அவள் தலை குனிய,

“வில்லன்னு சொல்லு…”, கடுப்பாக உரைக்கும் அவனைப் பார்த்து, குலுங்கிச் சிரித்தாள்.

“இங்கே என் பக்கத்திலேயே நீ இத்தனை வருஷம் இருந்த பிறகும், காட்டுக்குள் உன்னைப் பார்த்திருக்கேன் பாரேன். எனக்கு ஆச்சரியமா இருக்கு…”, அவளை தன் கை வளைவுக்குள் இழுத்தவாறே சொன்னான்.

“எப்படி எங்க வீட்டை கண்டு புடிச்சீங்க? கிராமத்துக்குப்போய் சித்தப்பா கிட்டே கேட்டீங்களா?”, தன்னை அவன் தேடிச் சென்றிருக்கிறான் என்பதில் மனம் கொள்ளா பெருமை அவளிடம்.

“ஆமா…, ஏழு கடல், ஏழு மலை தாண்டி இருக்கு, நாங்க கண்டு புடிக்காமல் இருக்க….”, அவள் இடையில் கை கோர்த்து தன்னோடு இறுக்கியவாறு அவன் உரைக்க, முன்பு அவன் நெஞ்சுக்கு நெருக்கமானவளாக மாற மாட்டோமா என்று ஏங்கியவளது நெஞ்சம், இன்று அவனோடு இணைந்தது.

“அப்பா கதவைத் தட்டி ரொம்ப நேரமாகுது…”, அவனுக்கு நினைவூட்ட, “பொண்ணும் மாப்பிள்ளையும் தனியா இருக்கும்போது கதவைத் தட்டிய உங்க அப்பாவுக்கு நீ வக்காலத்தா…?”, போலியாக கோபம் கொண்டான்.

அவள் வெளியே செல்லும் நேரம், அவளைத் தடுத்தவன், “தந்தி…, காயத்தில் இருந்த தையலைப் பிரிச்சுட்டியா…?”, கேட்டவனது கரங்கள் அதை உணரப் போகவே, “ம்…, அதைத் தெரிஞ்சுக்கணும்னா…, முதல்ல என் கழுத்தில் தாலியைக் கட்டுங்க…”, அவன் கரத்தை தள்ளிவிட்டு வெளியே ஓடியே போனாள்.

வெளியே பெரியவர்கள் நிச்சயத் தட்டை மாற்ற, அவன் கண்கள் உரைத்த செய்தியும், அவன் பார்வையும் அவளுக்குள் நாணப் பூக்களை உற்பத்தி செய்தது. இனி அவனை அவள் பார்த்துக் கொள்வாள். அவளை, அவன் தன் நெஞ்சுக்குள் பொத்தி தாங்கிக் கொள்வான்.

நன்றி.